


# உயிர்நிழல்

# ஜூலை-83

Uyirnizhal VOL. II Nº. 4 JULY-AUGUST 1999 Published by Exil

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலைமேடும்
முட்டிக் கள் நுரையாய் வெண்முகிலும்
அதற்கு
செங்கட்டிமாப் பூச்சும் பூசி
மஞ்சள் சுவரில் எறிந்து தெறித்த
செம்மண் உருண்டையாய்
உதிக்கும் கதிரவனையும் வரைந்து முடித்தான்
ஓவியனொருவன்
புலரும் எங்கள் காலையென்று
அப்போதெல்லாம்
நாங்கள் மலக்குழிகள் கழுவிக் கொண்டிருப்போம்.

மணிவண்ணன்
04.07.1999


உயிர்நிழல்

Uyirnizhal 4

**Vol. II No.4**
**JULY - AUGUST 1999**

தொகுப்பாசிரியர்கள்:
லக்ஷ்மி
கிருஷ்ணராஜா
கலைச்செல்வன்

வடிவமைப்பு. அட்டை ஓவியம்: கிருஷ்ணராஜா

அன்பளிப்பு:
பிரதி ஒன்று - 15FF, வருட சந்தா - 100FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)
இலங்கை, இந்தியா -இலவசம்

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும், இல்க்கமும்:
CREDIT LYONNAIS
CODE BANQUE 30002
COMPTE 554/6788M/21
ASSOCIATION EXIL

தொடர்புகளுக்கு:
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: EXILFR@aol.com


N° d'enregistrement de l'association : 13023204


வெளியீடு: எக்ஸில்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




| | | |
|---|---|---|
| கவிதை | மணிவண்ணன்.......................................... | 02 |
| நாம் 'தோற்றுத்தான் போவோமா...' -ஓர் மானசீக உரையாடல் | துரைசிங்கம்.......................................... | 04 |
| புரட்சிவீரன் பாடல் | ம.. அருட்குமாரன்.......................................... | 12 |
| வசந்தகாலத்தின் ஓர் ஒன்றுகூடல் | சகானா.......................................... | 13 |
| அவன் அப்படித்தான் | சுமதி ரூபன்.......................................... | 15 |
| அந்தகம் அறுந்ததும் அந்நாளே... | சித்தார்த்த சே குவேரா.......................................... | 18 |
| தென்னாபிரிக்கா தேர்தல்கள்: தெளிவில்லா எதிர்காலம் | தி. உமாகாந்தன்.......................................... | 20 |
| எனக்குள் பெய்யும் மழை நூலை முன்வைத்து... | அமரந்தா.......................................... | 23 |
| புன்னகையும் புதிய பாடலும் | நெய்தல்மகன்.......................................... | 27 |
| வித்து | வசந்தி–ராஜா.......................................... | 28 |
| கூரை எரிந்ததில் நிலவை ரசிக்கும் நான் | வசந்தி–ராஜா.......................................... | 31 |
| பெண்கள் சந்திப்பு | செண்பகம்.......................................... | 32 |
| வெளி - வாசல் | காமன்–வசந்தன்–குளிர்நாடன்.......... | 37 |
| அம்மாவின் நண்பன் | வினோதன்.......................................... | 38 |
| AMISTAD -ஒரு மீள்பார்வை | ரதன்.......................................... | 41 |
| ஆன் பிராங்க்: 20ம் நூற்றாண்டு இனவதையின் ஒரு மனத்துளி | குயிலி.......................................... | 44 |
| பாலியல் அரசியல்: மார்க்ஸியமும் அறவியலும் | யமுனா ராஜேந்திரன்.......................................... | 48 |
| கோணல் பக்கங்கள் | சாருநிவேதிதா.......................................... | 60 |
| நிழல்கள் | .......................................... | 63 |
| கோடுகள் | ஜெயந்தி சாம்சன்.......................................... | 67 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நாம் "தோற்றுத்தான் போவோமா..."

## - ஓர் மானசீக உரையாடல் -

துரைசிங்கம்

### நண்பர்களுக்கு...!

தாங்கள் அனுப்பிய 'தோற்றுத்தான் போவோமா...' என்ற மலர் - தொகுப்பு - பிரதி கிடைத்தது. தமிழ்ச்சூழலில் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் சூழல்களில் இருந்து அதிகமான எழுத்துக்கள் இப்போ வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவைகூட பல்வேறு அதிகார ஆதிக்க சூழல்களை தடைகளைமீறி வெளிவரவேண்டி உள்ளது. அத்தகைய 'சனநாயகச் சூழல்கள்' எப்படியோ நமது வாழ்வியலில் இரண்டறக் கலந்துவிட்டன அல்லது அவையே நமது வாழ்க்கைக்கான தெரிவுகளை, தேர்வுகளை முன்னிறுத்துகின்றன.

தோற்றுத்தான் போவோமா... இது வாசகர் என்ற தளத்தில் பல்வேறு புனைவுகளை ஊடறுத்து எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தை வழங்குகின்றது.

மேற்தோற்றத்தில் இவை வெறும் எழுத்துக்கள். ஆனால் இவ் எழுத்துக்கள் வழி கிளப்பப்படும் சிந்தனைகள்/பிரச்சனைகள் நமக்கு தமிழ் பேசும் சமூகத்தினது சமூக வரலாறு, அரசியல் பண்பாடு ரீதியிலான நினைவுகளையும் விசாரணைகளையும் எம்மிடையே கிளப்பிவிடுகின்றன.

வாசிப்பு பன்முகதள நிலைப்பட்டதாக மாறுகிறது. பிரதிக்கும் வாசகருக்கும் இடையிலான செயலூக்கமுள்ள உறவாக மாற்றப்படுகிறது. இதனால் தனது சமூக அனுபவங்களை அர்த்தப்படுத்திக்கொள்ள வாசகர் பயன்படுத்தும் பல்வேறுவிதமான சொல்லாடல்களும் பிரதியின் சொல்லாடல்களும் சந்திக்கும் கணத்தில் வாசிப்பு நிகழ்கிறது.

இதனால் பிரதியில் பதிவுசெய்ய முயற்சிக்கப்பட்டிருக்கும் சமூக அர்த்தங்களுக்கும் பல்வேறு வகைப்பட்ட வாசகர்களால் தங்களது சமூக அனுபவங்களை விளங்கிக்கொள்ள உருவாக்கப்பட்ட அர்த்தங்களுக்கிடையேயும் நடைபெறும் பேரமாகவே வாசிப்பு நிகழ்கிறது.

எனக்கு 'தோற்றுத்தான் போவோமா...' வாசிக்கும்பொழுது எண்பதுகளின் பின்னரான ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட வாழ்வியல் சார்ந்த தளங்களினூடு மோதுண்டு விரிந்து செல்கிறது. எனக்குள் எப்பவோ கேட்ட குரல்கள், கண் முன் நிறுத்திய நிகழ்வுகள், எனக்குள் வெம்பிய மனதினது தாண்டவம், நான் செய்வதறியாது எனக்குள் சமாதியான பொழுதுகள், மௌனித்து எதுவுமே உள்வாங்க மறுத்த மனிதனாய் நடமாடிய பொழுதுகள் என என என யாவும் இப்போ பிரச்சனைப்பாடுகளாய் கிளப்பப்படுகின்றன.

இவற்றிலிருந்து மீண்டு இந்தப் பிரதியை என்னால் வாசிக்க முடியவில்லை. இது சுகமான வாசிப்புக்குரியதுமல்ல. ஆதலால் வாசிப்பின் தளங்கள் அகன்று வெவ்வேறு பரிமாணங்களில் உரையாடலை வாசிப்பை வளர்த்துச் செல்கிறது. இதுவும் ஓர் சீரான முறைமையில் அல்ல. இந்த வாசிப்பானது முழுமுற்றானதும் இறுதியானதுமல்ல.

### உத்தரவின்றி உள்ளே வா...!

சபாலிங்கம் பற்றி அதிகம் அறியமாட்டேன். அவ்வாறு அறிந்து கொள்வதற்கான சாதனைப்பட்டியல்கள் எதுவும் தெரியாது. ஆனால் பிரான்ஸ் நாட்டில் சபாலிங்கம் படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்னரே அவரது பெயர் நமது கவனத்திற்குரியதாக மாறியது. அவர் பற்றிய தகவல்கள் பரவலாகக் கசியத் தொடங்கியது.

சபா தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் முன்னணிச் செயற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். புலம் பெயர்ந்த பின்னரும் தனது பங்களிப்பை போராட்டத்திற்கு நல்கி வந்தார். ஈழத்தமிழரின் சமூகப் பொறுப்புக் குறித்து அறிவுபூர்வமாகச் சிந்தித்து அதற்கான வாயில்களை, தளங்களை திறந்துவிட்டுக் கொண்டிருந்தார். அதற்கான சில நூல்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

ஆக சபாலிங்கத்தின் செயற்பாடுகள் அவர் கொலைசெய்யப்படுவதற்கான நிலைமைக்கு இட்டுச் சென்றது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிநபர் படுகொலைகள் அரசியல்ரீதியிலான அர்த்தப்படுத்தல்கள் மூலம் அல்லது மௌனங்கள்மூலம் நியாயப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, நாம் 'அரசியல்' செய்கிறோம் என்று கூறும் குழுக்களினால் எவை செய்தாலும் அவை 'புனிதமானவை', 'அரசியல் நிலைப்பட்டவை', 'கேள்விகளுக்கு அப்பாற்பட்டவை' போன்ற புனைவுகள் கட்டப்பட்டு விடுகின்றன. விடுதலைப் போராட்ட வரலாற்றின் வளர்ச்சியில் இத்தகைய புனைவுகள் படுகொலைகள் சமாந்தரமாக இணையாக வளர்ந்து வந்துள்ளன.

ஆக தனிநபர் கொலைகள் புரட்சிகரமான வீரச் செயற்பாடாகிவிட்டன.

பொதுவில் மாற்றுக் கருத்து வைத்திருப்போர், மாற்று அரசியல் செயற்பாடு உள்ளோர் யாவரும் 'துரோகிகள்', 'சமூகத் துரோகிகள்' என்று பெயரிடுதல்மூலம், 'களையெடுப்பு செய்கிறோம்' என்பதன்மூலம் சமூகச் செயற்பாட்டில் இருந்து நீக்கம் செய்யப்பட, துடைத்தெறியப்பட அதற்கான காரணங்கள், புனைவுகள் யாவும் கட்டப்பட்டு விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தி விடுகின்றனர். இதனையே வரலாறாக்கி விடுகின்றனர்.




தமது அதிகார, ஆதிக்க கருத்தாடல்மூலம் ஒற்றைப் பரிமாண அர்த்தப்படுத்தல்மூலம் இறுக்கிவிடுகின்றனர். அவ்வாறு நியாயப்படுத்துவதற்கான தமது வெளிகளை மட்டும் உருவாக்கி விடுகின்றனர். ஏனைய வெளிகளை வலுக்கட்டாயமாக மூடிவிடுகின்றனர் அல்லது தமது அதிகாரத்தினால் பறித்துவிடுகின்றனர்.

ஈழத்துத் தமிழ்ச்சூழலில் சபாலிங்கம் போல் போல... போல... போல... போலப் போல போலப் போல இன்னும் எத்தனையோ தனியன்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவை யாவும் 'அரசியல் படுகொலைகள்' தான் என அர்த்தப்படுத்தப்படுகின்றன. மௌனம் காக்கப்படுகின்றன. ஆக இவற்றுக்கு பின்னால் துல்லியமான அரசியல் எதுவும் கிடையாது. மாறாக குரோதங்கள், போட்டி பொறாமை, தனிநபர் பழிவாங்கல், சகிப்புணர்வின்மை, பதவி ஆசை... என என் எத்தனையோ காரணங்கள்தான் உள்ளன. எத்தகைய விடுதலை இயக்கங்களும் இந்தப் போக்கிலிருந்து விடுபட்டவை என அறுதியிட்டு கூறிவிட முடியாது. அனைவருமே மக்களுக்கு எஜமானர்களாக அதிகாரம், ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருந்தார்கள். இதில் ஏற்ற இறக்கம் இருக்கலாம். ஆக தமிழ்ச்சூழலில் விடுதலைக் கலாச்சாரம் என்பதற்கு மாறாக ஆயுதக் கலாச்சாரம் வழிபாட்டு நோக்கில் வளர்த்தெடுக்கப்பட்டதாகவே மாறியுள்ளது.

## இடைச் செருகல்:

நாம் இன்னொரு பக்கமாகவும் சிந்திக்கவேண்டும். பொதுவில் 'அரசியல் படுகொலை' என்ற கருத்தாக்கம் வெறும் தனிநபர் நோக்கு நிலை நின்ற, தனிநபர் கண்ணோட்ட, தனிநபர் கொலையுடன் மட்டும் தொடர்புடையதல்ல.

மாறாக சர்வதேச, தேச அளவிலான அரசியல் பின்புலங்களுடனும் அவற்றின் செயற்பாடுகளுடனும் பின்னிப் பிணைந்த கருத்தாக்கமாயும் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இதற்கு உலக வரலாற்றிலும் நிறைய உதாரணங்கள் உண்டு. நமது தமிழ்ச்சூழலிலும் நிறைய உதாரணங்கள் உண்டு. ஆகவே நாம் 'அரசியல் கொலை' இல்லை என்ற அரசியல் போக்கில் இதனைப் புரிந்துகொள்ள முடியாது.

எம்மிடையே இது குறித்த கோட்பாட்டுரீதியான அணுகுமுறைகள் வேண்டும். ஆனால் எம்மிடையே போதிய கோட்பாட்டுரீதியான அணுகுமுறைகள் இல்லை என்றே கூறலாம். ஆக நமக்கு இவை குறித்த பார்வையும் தேடலும் வேண்டும்.

## நினைவகங்களில் எங்கேயோ கேட்ட சில குரல்கள்

**குரல்:**

"டேய்... ஒன்று மட்டும் சொல்லி விட்டேன். நாம் வந்தது போராடத் தான். ஆனால் நம்ம இயக்கத்துக்குள் இப்போ சி.ஐ.டி.க்கள் அதிகம். இவங்கள் இயக்கத்துக்குள்ளேயே உளவு பாக்கிறவங்கள்.

நீ சும்மா வாயைக் கிளறிக்கொண்டு இரு. அதை அவங்கள் தங்களுக்குப் புரிஞ்ச பாணியில் ஒன்றுக்கு பத்தாகச் சொல்லிவிடுவாங்கள்.

டேய்... கவனம்...!"

**குரல்:**

"இதை ஒரு புரட்சிகர விடுதலை இயக்கம் என்று தான் இயக்கத்திற்குள் வரமுன்னர் நினைத்திருந்தேன்.

இப்பொழுது இயக்கத்தில் அராஜகப் போக்குத் தான் மேலோங்கியுள்ளது. புரட்சியும் விடுதலையும் என்னவென்று புதிய அகராதி விளக்கம் கொடுக்கிறாங்க...

இயக்கத்தின் உள் வட்டத்தில் கூட எதிரி யார்? நண்பர் யார்? என்பது தெரியாமல் ஒருவரை ஒருவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உளவு பாக்கிறாங்கள், கண்காணிக்கிறாங்கள்."

**குரல்:**

"உங்களுடைய இயக்க வேலைகள் எப்படி இருக்கு? எப்பொழுதுதான் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கும் தம்பி...!"

**குரல்:**

"அடுத்த பொங்கல், தீபாவளி தமிழீழத்தில்தான் இல்லையா...?"

**குரல்:**

"இந்த இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேரும் வாய்ப்பு இல்லையா...? எல்லாரும் சேர்ந்து போராடாமல் தனியா யாரும் போராடி வெல்ல முடியுமா...?"

**குரல்:**

"இந்தியா தலையிட்டு பிரச்சனையை தீர்க்காதா தம்பி...!

இவங்கள் கூட்டணிக்காறங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறாங்கள்"

காட்சி ௨௨

**ஓசை:**

"நேற்று நம்மாக்கள் ஒரு முஸ்லீம் ஆட்டு வியாபாரியை சி.ஐ.டி. என்று பிடிச்சவங்கள். அடிச்ச அடியில்... மண்டையைப் போட்டுட்டான்

அதுதான்..."




**ஓசை:**

"இவங்கள் தேவையில்லாமல் அப்பாவிகளை பிடிச்சு.... சாக்காட்டுறாங்கள்...."

**ஓசை:**(சலித்துக்கொண்டு)

"அவனை படம் எடுத்து வையுங்கோ. சந்தைக்கு பக்கத்திலை உள்ள லைட் போஸ்டில கட்டிப் போட்டு விடுங்கோ. காட்டிக் கொடுக்கிறவன்... சமூகவிரோதி என வழக்கம் போல எழுதிப்போட்டு விடுங்க...

வேறு என்ன செய்வது...."

காட்சி 70

**ஓசை:**

"கோயில் நகைகளைக் கொள்ளையடிச்சது எங்களுக்குத் தெரியாதென்று நினைச்சியளே.... அது மட்டுமா.... புளியடி வளவுக்குள்ள தனியா இருந்த அந்தப் பெட்டையோடை சேட்டை விட்டதும் தெரியும். இப்ப வைச்சிருக்கிற கார் யாரிட்டைப் பறிச்சதென்றும் தெரியும்."

"எல்லாம் தெரியும் போங்கடா...."

காட்சி ௬

**குரல்:**

"அரசாங்கத்துக்கு நக்கிப் பிழைக்கிறதைவிட கூலிவேலை செய்தாவது பிழைக்கலாமெல்லே...

ஓ.... சுதி கண்டனியள் எப்படி முடியும் உங்களாலை...."

**குரல்:**

"நான் என்னடாப்பா பிழை செய்தன். விடுதலை பற்றி சிந்திச்சது பிழையே....

சொல்லு....

நம்மால் இயன்ற உதவிகளை செய்றம்....

இப்போ எதுவும் பேசக்கூடாது என்றால்.... எத்தனை நாளைக்குத்தான் இப்படி வாழுறது.

அதுதான் தினமும் செத்துப் பிழைக்கிறதைவிட எங்கேயாவது போய்த் தொலையணும். நீ.... என்ன சொல்கிறாய்...."

**குரல்:**

"சிங்கள அரசாங்கம் பிரச்சனையைத் தீர்க்காது. நாம் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை."

**குரல்:**

"என்னங்க.... கொழும்பிலை விதானையிண்ட பேரன் ரகுவை றோட்டிலை போவேக்கை பிடிச்சவங்களாம்.... இன்னும் விடேல்லையாம்.... சரசக்கா சொன்னா...."

## சொல்லுவதைத்தவிர...

1). தமிழீழ விடுதலைப் போராட்டம் வன்முறையில் நம்பிக்கைகொண்ட ஆயுதமேந்திய போராட்டமாயினும் அது ஒருபொழுதும் அராஜகத் தன்மை கொண்டதாக மாறிவிடுவதை அனுமதிக்கமுடியாது. விடுதலைப்போராட்டத்தில் என்றும் மனிதாபிமானமும் மானிட உயிர்ப்பிற்கான ஆவலும் மேலோங்கி இருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இவற்றை இழந்து செல்லுமாயின் அது இன்னொரு அராஜகத்திற்கும் ஒடுக்குமுறைக்குமான வழியாகவே அமைந்துவிடும்.

-கோவிந்தன், புதியதோர் உலகம் எனும் நாவலின் முன்னுரையில்

2). கடந்த சகாப்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அவதானிக்குமிடத்து எத்தகைய விடுதலை எய்தல் நோக்கிலும், கொலைசெய்தல் ஆகிய வழிமுறை ஒவ்வாதது என ஒதுக்கப்பட்டமையின் அறிவுடைமை உணர்தற்பாலது. ஜனரஞ்சக அபிமானமற்ற அல்லது அடக்குமுறையில் அரசின் முகவர்களாக விளங்கியவர்களைக் கொலைசெய்துவிட்டு அவர்களுக்கு விதித்த கொலைத் தண்டனை இது. அவர்கள் கடந்த காலத்தில் இழைத்த கொடும் செயல்களுக்கு பரிகாரமாக அமைந்தவை என்று கூறலாம்.

அவர்களுக்காக எவரும் கண்ணீர் வடிக்காமலும் இருக்கலாம். ஆனால் இத்தகைய தூய்மையிழந்த பாசி படர்ந்த மார்க்கத்தில் நாம் பயிலத் தொடங்கிவிட்டால் அது நிறுத்தமுடியாத தொடர்கனவு நிகழ்வாக அமையும். பொலிசுக்கு தகவல் கொடுப்பவரை ஒழிக்க முற்படுவீர்கள். அது தக்கசெயலே என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நியாயப்படுத்துவீர்கள். ஆனால் அவ்வளவோடு அதனை நிறுத்திக்கொள்ள மாட்டீர்கள். ஏனென்றால் விடுதலை என்ற புனிதக் குறிக்கோளை எய்த நின்ற மார்க்கத்தில் குந்தகமாக நிற்பவர்களைக் கொலைசெய்வது நியாயமே என ஏலவே நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு விடுதலை அடையப் பெறுவதற்கான சரியான உபாயம் உங்களிடத்தும் உங்கள் குழுவிடத்தும் மட்டுமே உண்டெனப்பது பற்றியும் உறுதியாக இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு போதும் தவறிழைக்கமாட்டீர்கள் என்று உமது பூரண மனஉறுதி படைத்த நம்பிக்கையும் நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தின் இரக்க உணர்வற்ற பாங்கும் இணைந்த நிலை வெகு பயங்கரமானது.

இத்தகைய தர்க்கிக்கும் நியாயத்தை அரணாகக்கொண்டு உங்களைப் போன்று நாமும் அதே இலட்சியத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் (ஆனால் உங்கள் கருத்துப்படி) தவறான மார்க்கத்தை பின்பற்றுகிற கட்சியினரை அல்லது குழுவினரையும் கொலைசெய்யப் புகுவீர்கள். ஆனால் அவ்வளவோடு அமையமாட்டீர்கள். உங்கள் தர்க்க நியாயப்படி உங்கள் குழுவினருக்குள்ளேயே உங்களோடு மாறுபடுபவர்களை துரோகிகளாகக் கருதி அவர்களையும் ஒழிக்க முனைவீர்கள். இன்னும் இந்த நடைமுறைப் பாங்கானது விரும்பிய அதிகாரம் கைப்பற்றப்பட்டவுடன் ஓய்ந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. அது வகுத்துச் செல்லும் பாதையானது சித்திரவதைக் கூடங்கள், ஓயாத ஒழித்துக்கட்டல்கள், கொலைமுகாம்கள் என மலிந்த சமுதாயத்துக்கே இட்டுச் செல்வதாகும்.

- ரெஜி சிறீவர்த்தனா:
கந்தசாமி நினைவுப் பேருரை, 1989




**3).** விஜிதரன் நினைவாக:

இச்சையின்றிக் கைகள்
அசைத்து
கால்களை உதைத்து
வீரிட்டபடி நீ மலர்கையில்
உன்னைப் பற்றிய அம்மாவின் கனவுகள்
எப்படி இருந்திருக்கும்....?

இன்று இப்படியாயிற்று!
இது எம் மண்
இறுதியில் உன்னை அவர்கள்
கொன்று விட்டனர்
காரணம்....?
காரணம் கேட்டுக்
காணாமல்போக யார்தான் தயார்

வாழ்தலுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு
குருதியுறைந்த உடலுடன்
ஆழப் புதைந்தது
உனது உடல் மட்டுமல்ல
உனதும் எனதும்
எம்போன்ற பலரதும்
உணர்வுகளும் கூடத்தான்

உனது கதவு தட்டப்பட்ட
அந்த இரவில்
மனிதநேயமும் நம்பிக்கைகளும் கூட
ஆழப் புதைந்தன
நீ காணாமல் போனாய்

மீண்டும் நடு இரவு
உயிர்ப்படங்கி
சில்லிட்டது பூமி
உனது வாய்
உனது கண்
மூடியது மண்
இருள்

மெல்லத் தயங்கியபடி
அசைகிறது உலகம்
மௌனமாய்
இருண்டு கிடக்கிறது வானம்.

-ஔவை

**பிற்குறிப்பு:** கோவிந்தன், கந்தசாமி, விஜிதரன் யாவரும் அராஜகத்துக்கு பலியானோர்.

**4).** வீடு திரும்பிய என் மகன் குறித்து தாய்-ஔவை பின்வருமாறு கூறிச் செல்கிறாள்.

இதயத்தை இரும்பாக்கி
மூளையைத் துவக்காக்கி
நண்பனை பகைவனாக்கி
என்னிடம் திரும்பினான்
இராணுவ வீரனாய் என் முன்
நின்றான்

என் மகன்
ஊட்டி வளர்த்த அன்பும் நேசமும்
ஆழப்புதைய
ஆடித்தான் போனேன்

நண்பனைச் சுட்டுவிட்டு வந்து
வீரம் பேசினான்
தியாகம் பற்றி
ஆயுதம் பற்றி
எல்லைப்புற மக்களைக் கொல்வதைப்பற்றி
நிறையவே பேசினான்

இப்போது நான் மௌனமாக இருந்தேன்
மனிதர்கள் பற்றி
விடுதலை பற்றி
மறந்தே போனான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது

துரோகி என்று
என்னையே புதைப்பானோ
ஒரு நாள்?

## பிரதிக்குள்ளிருந்து சில குரல்கள்

**சேரன்:**

அச்சமும் அறியாமையும் ஏராளமான உண்மைத் தகவல்கள் வெளியே தெரியவர முடியாததுமான ஒரு அரசியல் சூழல்தான் எங்களுடைய தமிழ்ச் சூழல். இந்தச் சூழலில், தம்முடைய மாற்றுக்கருத்துக்களையும் அவை தாங்கி வருகிற மறுத்தோடி அரசியலையும் வெளிப்படையாக முன்வைப்பவர்களும், அத்தகைய கருத்துக்களுக்குக் களமாக அமைகிற சிறுசஞ்சிகைகளும் எமது கௌரவத்துக்கு உரியன. ஒரு சபாலிங்கத்தை, ஒரு ராஜினியை, ஒரு செல்வியை மறுத்தோடிகளாக உயர்த்தி நிற்பது இத்தகையதொரு வெளிப்படையான மாற்றுக்கருத்து அரசியல்தான்.

இந்த அரசியலின் ஆபத்து என்னவென்றால், இந்த அரசியலை எதிர்ப்பவர்கள் ஆயுததாரிகளாகவும், தமது புனிதப்பாதையில் குறுக்கிடும் எவரையும் எவ்வித தயக்கமற்றுக் கொன்றொழிக்கக்கூடிய சித்தம் படைத்தவர்களாக இருப்பதும்தான்.




இன்னும் அச்சம் தரக்கூடியதாகவும், மேலான சமூகவிழுமியங்கள் கொண்ட ஒரு சமூகமாக நாம் உருமாறுவதற்கான சாத்தியங்களையே கேள்விக்குறியாக்குவதாகும். இருக்கிற மற்றொரு அம்சம் என்னவெனில், மாற்றுக்கருத்துள்ளோரையும் மறுத்தோடிகளையும் அவர்கள் எத்தகைய நிரபராதிகளாக இருந்தாலும்கூட, கொன்றொழிப்பதை யுத்தத்தின் பேரால் நியாயப்படுத்துவதும் ஏற்றுக்கொள்வதும் அல்லது பாராமுகமாக இருந்து விடுவதும் ஆகும். எமது மையநீரோட்டப் பத்திரிகைகளுக்கும் சமூகத்தில் பலருக்கும் இது சாத்தியமாகி உள்ளது என்பது வரலாற்றில் புதிது அல்ல.

-காற்றை எதிர்த்து ஒரு காலடி (பக். 16)

**ப.வி. சிறீரங்கன்:**

எனக்குரிய இருத்தலை நான் இழக்கமுடியாது! அது போன்றதே மற்றவர்களதும். ஆனால், அப்படி என்னால் யோசிக்கமுடியாதபடி எனக்குள் வந்திருக்கும் தேசியம், கலாச்சாரப் புளுகு என்னைக் கட்டிப் போட நான் இடம் கொடுத்துள்ளேன்.

ஏன்?

இதற்கு நான் விடையிறுப்பதில் தாம் நம் மனிதம் குறித்த பொதுமையான இயல்பு புரியும், 21ம் நூற்றாண்டினது ஆரம்பத்தில் நம் ஸ்தானத்தை இதுவே குறித்துரைக்கும்!!! அதுவரையும் நாம் கூறும் மனிதம், கடைப்பிடிக்கும் பண்பு, யாவும் இரட்டைத் தலையுடைய விசப்பாம்பு.

-மனிதர்கள்: மனிதம் குறித்து... (பக்.25)

**சஜீ:**

எத்தனையோ சித்திரவதைகள், மரணங்கள் என்று கண்முன்னால் நடந்தவை தான்.

தண்டிக்கப்பட்டவனை தண்டித்தது தாங்கொணா வேதனையை அவனுக்குள் இருந்திருந்தெழுப்பியது.

இது முதற் தடவையாக ஏற்பட்டமையாலோ என்னவோ அவனுள் பூகம்பம் புகுந்துகொண்டு!

நிதி முழங்கால்களுக்கிடையில் முகத்தைப் புதைத்துக்கொண்டான். அவன் அவனருகில் வந்து ஆதரவாக தோள்களில் கையை ஊன்றினான்.

"கடிதம் கொடுக்கப்போறன்"

-நீ.... தீ.... (பக்.27)

**அழகு குணசீலன்:**

எந்த ஜனநாயக மறுப்புக்களுக்கும், மனிதஉரிமைமீறல்களுக்கும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப்போராட முன்வந்தார்களோ, அவர்கள் எல்லோரும் அதே ஆயுதத்தினால் அதே மறுப்புக்களையும் மீறல்களையும் ஒடுக்குதல்களையும் செய்யத் துணிந்தபோது போராட்டத்தின் இலக்கு கேள்விக்குறியானது.

புலம்பெயர்ந்தது தமிழர்கள
மட்டுமல்ல
வன்முறைகளும்தான்....(பக்.29)

**ஜோர்ஜ் குருஷ்சேவ்:**

'தட்டிக் கேட்போம்' என்று வாய்ச்சவடால் விடுவோர் எல்லாம் இப்போது 'திறவுங்கள்! தட்டப்படும்!' என்று 'தட்டிறதைக்' கேட்கமுடியாமல் இருக்கிறார்கள், 'கேட்டால்' (தலையில்) கொடுக்கப்படும், என்பதால்.

-கருத்துச் சுதந்திர மறுப்பு (பக்.34)

**சி. புஸ்பராஜா:**

இயக்கப்பொடியளில் ஒருவன் வாயிலும் வயிற்றிலும் அடித்து அழுதுகொண்டிருக்கும் காட்டுசூசையின் மனைவியை அழைத்து "களைப்பாக இருக்கிறது. எங்களுக்குத் தேநீர் போட்டுத்தா" என மிக சாவகாசமாகக் கேட்டான் "அட கொலைகாரப் பாவியள். உங்களுக்கு எதுக்கடா தேத்தண்ணி" எனக் கத்திய மனைவியைத் தள்ளிக்கொண்டு போய்விட்டுவிட்டு தான் தேநீர் போட ஓடினான் காட்டுசூசை.

நான் + நீ = அராஜகம் (பக்.39)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஸ்பாட்டகஸ்தாசன்:**

தமிழ்த் தேசியப்போராட்டம் கலை, கலாச்சார உற்பத்தியை வீறுபடுத்தியதெனினும், அது ஒரு பிரச்சார அங்கமாக உருவெடுத்தமையாலும் அதன் மீதான விமர்சனம் ஆபத்தானதாகக் கருதப்பட்டதாலும், அத்துடன் இக்கலைப்படைப்புக்கள் புத்திஜீவிகளால் தரம் குறைந்ததாகக் கருதப்பட்டதாலும் ஒதுக்கப்பட்டது.

-காலுடைந்த சிவில் சமூகமும் தமிழ்ப்புத்திஜீவிகளும் (பக்.42)

**திருமாவளவன்:**

தப்பித்துக் கொண்டனர்
புத்தி தெளிந்தவர்
அகப்பட்டுக் கொண்டது
அப்பாவிகளும்
நானும்.

-மனிதக்காட்சிச்சாலை (பக்.55)

ஆடுபுலியாட்டமாய்
என் யாக்கையின் யாத்திரை
நகர்கிறது.
இதைவிட்டால்
வேறு எதைச் சொல்ல.

-யாத்திரை (பக்.56)

**மு. நித்தியானந்தன்:**

சிந்தனைப் பிரவாகம் என்பது காட்டுவெள்ளம் போன்றது. கரை போட்ட பாதைகள் அதற்கில்லை. அது விதிகளை மதிப்பதில்லை. அதிகாரங்களை அது கேள்விக்கு இலக்காக்குகிறது. காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த கருத்துகளை அது துச்சமென மதிக்கிறது.

-சிந்தனை: அக்கினிக்குஞ்சு (பக்.58)

**ரவீந்திரன்:**

காரணங்கள் கண்டறியப்படாமல் கொலைசெய்யப்பட்டோர் சார்பாக உன்னிடம் ஏதாவது கவலைகள் இருக்கின்றதா?

ஆம்.

அது இருக்கக்கூடாது.

ஆரம்ப காலங்களில் விடுதலை இயக்கங்கள் ஏதாவதில் இருந்தாயா?

ஆம்.

நீ ஓர் குற்றவாளி.

இன்றைய போராட்டத்துக்கு ஏதாவது 'பங்களிப்பு' செய்கிறாயா?

இல்லை, உனது அர்த்தத்தில்.

நீ தமிழனல்ல.

கேள்வியும் நானே பதிலும் நானே. எனது காதும் கண்ணும் ஓய்வாக இருந்தன. ரொயிலற்றுக்குள் நிலவும் அமைதியுடன் அவை சிலாகித்தன.

-தொற்ற வைப்பது எதை? (பக்.62)




**ப்ரியம்:**

"அம்மா பயமாயிருக்கு" என்று அலறிய மழலைகளை கட்டியணைத்தபடி திசையறியாது ஓடிய எம் மக்களோடு ஓடினோம்.

-ஆத்மா (பக்.63)

**தி. உமாகாந்தன்:**

★★★★★

-சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராச்சியங்கள் (பக்.64)

**தமிழரசன்:**

★★★★★

-மார்க்சியத்தினூடு இலக்கியம் (பக்.74)

**சமுத்திரன்:**

★★★★★

-பொருளாதார தாராளவாதமும் மக்கள் உரிமைகளும் (பக்.86)

**செ. கணேசலிங்கம்:**

★★★★★

-அல்தூஸர் விளக்கிய கருத்தியல் அரசுயந்திரம் (பக்.92)

**வாணிதாசன்:**

★★★★★

-மேற்குநாடுகளின் வளர்ச்சியும் மூன்றாமுலகமும் (பக்.103)

**அழகலிங்கம்:**

★★★★★

-அராஜகமும் மார்க்ஸியமும் (பக்.108)

**சுவாதி:**

ஆமி பொலிஸ் விளையாடேக்கையும் ஆமிக் கொமாண்டரா வாற சின்ராசின்ர மகன் ரகு மட்டும் கருணாவோட சேர்ந்து நிண்டு இருவரும் தாங்கள் ஒரு இயக்கத்திட பெயரச் சொல்லி என்னக் கூப்பிட்டாங்கள். ஏன் எண்டால் அந்த இயக்கம் தான் தங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்குதாம்.

-பச்சமிளகாய்(பக். 89)

**மார்கரேட் வாக்கர் - தமிழில் இந்திரன்:**

எனது மக்களுக்காக
ஒரு புதிய பூமி எழுந்து வரட்டும்.
வேறொரு புதிய உலகம் பிறக்கட்டும்.
வானத்தில் அமைதி என்பது
அழகுறப் பொறிக்கப்படட்டும்.
அஞ்சாமை மிக்க ஓர் இரண்டாம் தலைமுறை
வெளிவரட்டும்.
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்.
எதையும் குணப்படுத்தும் அழகும்
உறுதியுடன் பற்றிக்கொள்ளும் வலிமையும்
நம் இரத்தத்திலும், உயிரிலும்
விடாமல் துடிக்கட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மனிதர் என்னும் ஓர் இனம் எழுந்துவந்து*
*அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்.*
-புதியபூமி எழுந்து வரட்டும்(பின் அட்டை)

**மார்ட்டின் லூதர் கிங்:**

கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க அவற்றை நல்ல மனிதர்கள் என்போர் அதிர்ச்சியூட்டுமளவிற்கு மௌனமாய் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுறவேண்டும்.

(பக்.03)

## அக்கம் பக்கம் பார்த்துப் பேசு....

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஆயுத அராஜகத்துக்கு பலியாகிப்போன சபாலிங்கத்தின் நினைவு மீட்டலுக்கான தொகுப்பே 'தோற்றுத்தான் போவோமா....' இதனை சபாலிங்கம் நண்பர்கள் வட்டம் கடந்த மே 1999இல் பிரான்ஸில் வெளியிட்டனர்.

இத்தொகுப்பு நமக்கு நன்கு ஏலவே பரிச்சயப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம், புகைப்படம் போன்ற வகைமைகள் கொண்டு சீரான வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது.




சபாலிங்கத்தின் கொடூரமான படுகொலை அவரது நண்பர்கள் மத்தியில் சபாவை நினைவுகொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளது. ஆக இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பலரும் அனைத்து வன்முறைக்கும் அராஜகத்துக்கும் எதிரான மொழிதல்வழி போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு இதனை தமக்கு சாதகமாக்கி உள்ளனர். தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளனர்.

இத்தகைய சீரிய நோக்கத்தை ஈடேற்றும் நோக்கில் வெளிக்கொணரப்பட்டது தான் 'தோற்றுத்தான் போவோமா...' என்ற தொகுப்பு. ஆக இந்தத் தொகுப்பு வெறும் எழுத்துக்களின் தொகுப்பு அல்ல. மாறாக வன்முறைகளுக்கும் அராஜகத்தும் எதிரானது மனித நேயத்தை கட்டி வளர்ப்பது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை வலியுறுத்துவது. ஓர் மாற்றுக் கலாசாரம் ஒன்றை வலியுறுத்துவது. விடுதலைக்கான பல்வேறு தளங்களை வாயில்களை திறந்து வளர்த்துச் செல்வது.

ஆக இந்தத் தொகுப்பு அவ்வாறு அமைய முயற்சிசெய்கிறது. அதற்குரிய பல வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன. இருப்பினும் நண்பர்கள் வட்டம் 'சொல்லித்தானாக வேண்டும்' பகுதியில் "மலர் நாம் எண்ணியது போல அமையவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம்" என குறைப்பட்டுள்ளனர். இதன் மூலம் மலர்த்தொகுப்பு முயற்சியின் சீரிய நோக்கம் புரிந்துகொள்ளமுடிகிறது.

இதில் வெளிவந்திருக்கும் அனைத்துப் படைப்புக்களுமே ஒரே நோக்கத்தை வெளிப்படுத்தும் படைப்புக்கள் அல்ல. சில பக்கங்களை நிரப்புபவை. எவ்வாறாயினும் இவற்றையும் மீறி இவ்வளவு படைப்புகள் ஒரு சேர வந்திருப்பது - தொகுத்திருப்பது ஆரோக்கியமாகவே நோக்கப்படவேண்டும். இன்னும் ஆரோக்கியமாக வெளிவந்திருக்கலாம் என்பது வேறு விடயம்.

தமிழ்ச்சூழல் வன்முறைக்கும் அராஜகத்துக்கும் பலியானவர்களை நினைவு கொள்ளும் சந்தர்ப்பங்களைக்கூட தவிர்த்து ஒதுங்கி ஓடிவிடக் கூடிய நிலைமையில் பலர் இங்கே எழுதியுள்ளார்கள். ஆக இது கவனிப்புக்குரியது. போற்றுதற்குரியது.

பொதுவில் நாம் எவ்வாறாயினும் உயர்ந்த நோக்கில் திட்டமிடமுடியும். ஆனால் தமிழ்ச்சூழலில் உள்ள 'இன்றைய சமூக நடைமுறை வழக்குகள்' யாவும் மனிதத்தை குழி தோண்டும் முனைப்பில் உள்ளன. கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் பறிக்கப்பட்டு 'சனநாயக விரோத பாசிசச் சூழல்' கோலோச்சும் காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். இதனால் அச்சங்கள், துணிவின்மைகள், விரக்திகள், விலத்தி ஓடல், ஒதுங்குதல், மௌனம் காத்தல் போன்றவற்றையே சமூக நடைமுறைகளாக, நடத்தைகளாக, வழக்குகளாக ஒழுகி வரும் சமூகமாகவும் மாற்றப்பட்டு விட்டோம்.

இதனால் அனைத்து அராஜகத்துக்கும் வன்முறைக்கும் எதிரான நமது எதிர்பார்ப்புகள், போராட்டங்கள் யாவும் எங்கோ பதுங்கி விட்டன. ஒதுங்கிவிட்டன. ஓரங்கட்டப்பட்டுவிட்டன. இவற்றையும் மீறியவை மரணத்தையும் மிஞ்சின.

ஆக 'தோற்றுத்தான் போவோமா...' பல்வேறு அச்சுறுத்தல்கள், தடைகள் தாண்டி வந்துள்ள தொகுப்பு. இன்னும் அராஜகத்துக்கும் வன்முறைக்கும் எதிராக போராட வேண்டியதை சுட்டிக் காட்டும் தொகுப்பு.

குறுக்கீடாக சிலவற்றை இவ்விடத்தில் சொல்ல வேண்டியுள்ளது.

## குழப்பங்களிலிருந்தும் சற்றே உற்றுப் பார்த்தால்....

இன்றைய தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல மோசமான குறைபாடுகள் காணப்படுவதைக் காரணமாகக்கொண்டு சிலர் முழுப் போராட்டமுமே தவறானது என்ற முறையில் கருத்துத் தெரிவிப்பதோடு அதனை முற்றாக நிராகரிக்க முனைவதையும் காண்கிறோம்.

தமிழ்பேசும்மக்களது தேச விடுதலைப் போராட்டத்திலுள்ள அரசியலை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளாதவரை தவறுகள் நேர்ந்துகொண்டே இருக்கும். ஆதலால் நாம் தேச அளவிலும் சர்வதேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவிலும் தமிழ்பேசும் மக்களின் அரசியலைத் தெளிவாகப் புரிய வைக்கவும் விளக்கவேண்டிய பொறுப்பும் தமிழ் பேசும் மக்களைச் சார்ந்தது.

இன்று இலங்கையில் சிங்கள தேசம், தமிழ் தேசம் என திட்டவட்டமாக இரு தேசங்கள் நிலவுகின்றன. சிங்கள தேசம் தனக்கென இறைமை மிக்க ஒரு அரசினைப் பெற்றுள்ளது. அத்துடன் இவ்வரசு அதிகாரத்தின் துணைகொண்டு அனைத்து வழிகள் மூலமும் தமிழ்த் தேசத்தை ஒடுக்குமுறைக்குள்ளாக்கி வருகின்றது. இவ்வொடுக்குமுறைகள் சகிக்கமுடியாததாகிவிட்ட ஒரு நிலையில் தமிழ் தேசம் தனக்கென ஒரு தனியான அரசை தேச-அரசை அமைத்துக்கொள்ள விழைகிறது.

ஒரு புறம் தமிழ்மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திலுள்ள இந்த அரசியலை மறுப்பதற்கும் மறைப்பதற்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் எப்போதும் கடும் பிரயத்தனப்பட்டு வருகின்றது.

இன்னொரு புறம் தமிழ்த் தேசமானது முஸ்லீம் மக்களுக்கு இழைத்த கொடுமை வரலாற்றில் மறக்கக்கூடியதும் மறைக்கக் கூடியதும் அல்ல. தமிழ் பேசும்மக்கள் முஸ்லீம் மக்களை உதாசீனப்படுத்தி விட்டு தமது விடுதலையை அடைந்துவிட முடியாது. ஏனெனில் முஸ்லீம் மக்கள் தொடர்பான பிரச்சனை என்பது தமிழ்த் தேசம் தனது விடுதலைக்கான பாதையில் முகங்கொடுத்து தீர்வு கண்டாக வேண்டிய ஒரு அரசியல் பிரச்சனையாகும்.

ஆக தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தின் அரசியல் பற்றிய பிரக்ஞையும் தெளிவும் எம்மிடையே இல்லாது போய்விட்டால் தற்கொலைக்கொப்பான அரசியல்கள் மூலம் தேசத்தையே இழக்க நேரிடும்.

நாம் இவ்வாறு குறுக்கீடு செய்யவேண்டிய
தற்கான சூழல்கள்... இங்கே... மன்னிக்கவும்...!

*மீண்டும் தொடர்கிறேன்....*

எவ்வாறாயினும் எமது கருத்து, எமது நிலைப்பாடு, எமது வேண்டுகோள், எமது கண்டனம், எமது வேதனை, எமது கோபம், எமது எதிர்பார்ப்பு... யாவும் நியாயமானது எனக் கருதுவோர் தொடர்ந்தும் போராடிக்கொண்டுதான் இருப்பர். மனிதம் சிறக்க வளர மீண்டும் மீண்டும் தான் தோற்றாலும் போராடிக்கொண்டுதானிருப்பர். அதுவே எதிர்காலத்தின் நம்பிக்கை.

| காட்சி 300043 |
|---|

எல்லோரும் காலையில் கூடும் சந்தை நேரத்தில் ரீக்கடை ஒன்றின் முன் குந்தியிருக்கின்றனர்.

**செழியன்:**

*மரணத்தைக் கண்டு*
*நாம் அஞ்சவில்லை*
*ஒரு அநாதைப்பிணமாய்*
*ஒரு அடிமையாய்*
*புதிய எஜமானர்களுக்காக*
*தெருக்களில் மரணிப்பதை*
*நாம் வெறுக்கின்றோம்*

**மு.பொன்னம்பலம்:**

*துப்பாக்கி தூக்கியவனைக் கண்டதும்*
*தொடை நடுங்காதே*
*நீ பிறந்தது, என்றைக்கோ ஓர் நாள்*
*சாகத்தான்*
*அது நிச்சயம்*

*அந்த இடைவெளியில் ஆடும் ஆசைகளுக்காய்*
*இன்னும் வாழ ஆசைப்பட்டு,*
*துப்பாக்கி ஏந்தியவனைக் கண்டதும் - அவன்*
*விடுதலைப் பதரானாலும் சரி*
*ராணுவக் காட்டுமிராண்டியானாலும் சரி*
*தொடை நடுங்காதே!*

**கா. இராமலிங்கம்:**

*ஒரு கோடி சிந்தனைகள்*
*உள்ளத்தில் அலைமோத*
*மீதியை நான் படிக்கவில்லை*
*இப்பவெல்லாம்*
*அகால மரணந்தானே அதிகம்*

**வ.ஐ.ச.ஜெயபாலன்:**

*நாம் வாழவே பிறந்தோம்*
*மரணதேவதை இயற்கையாய் வந்து*
*வருக என்னும் வரைக்குமிவ்வுலகில்*
*இஷ்டப்படிக்கு*
*பெண்டு பிள்ளைகள் தோழர்கள் என்று*
*தனித்தும் கூடியும் உலக வாழ்வில்*
*எங்களின் குரலைத் தொனித்து*
*மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம்*

**சு.வில்வரத்தினம்:**

*நீட்டிய துவக்குகளின் நெருக்குதலில்*
*மூட்டுகள் தேடி முடங்கும் பூச்சிகளாய்*
*மானிடவர் நாமிங்கு மரணத்துடன்*
*சமபாஷிக்கிறோம்*

**அ. யேசுராசா:**

*திடீரெனத் துவக்குச் சத்தம் கேட்கும்*
*சப்பாத்துகள் விரையும் ஓசையும் தொடரும்*
*தெருவில் செத்து நீ*
*வீழ்ந்து கிடப்பாய்....*

திடீரென நாலாபுறமும் துவக்குச் சத்தம் கேட்டது. எல்லோரும் சிதறி ஓடினர். ரீக்கடையும் இழுத்து மூடப்பட்டது. எல்லோரும் ஓடிக்கொண்டிருந்தனர். ■


.......................................

தொடர்புகளிற்கு: S.PUSHPARAJAH
7 Rue Racine, 95140 Garges Les Gonesse, FRANCE.
Tel: 01 39 86 31 30, Mobile: 06 11 33 65 95,
Fax: 01 39 93 50 00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பாராண்ட தமிழினத்தின்
நிலம் காக்க வாள் கொண்டாய்!
நாயொன்று ஓடிவர
நடுநடுங்கிக் கடல் கடந்தாய்.
"ஊரான ஊரிழந்தாய்!!
வயல்வெளியின் காற்றிழந்தாய்!"
நீவிர் நித்திரையில் உதிர்த்த
தத்துவங்கள் தன்னை
சூழ வலம் வந்து துதிபாடிச்
செவி குளிர்ந்த தொண்டரெல்லாம்
பேயறைந்து பேச்சிழந்தார் போ!!

இங்கிலாந்து வந்தாய்
உண்டியல் மேடு கொண்டாய்!
வாய் மலரும் தருணமெல்லாம்
தயை கூர்ந்தாய்! தண்டனிட்டாய்!
உலகாண்டு மீண்டவர்கள்
ஊருலாப் பவனிவர
கண் விழித்த பொழுதெல்லாம்
கால் கடுக்கத் தவம் புரிந்தாய்
அவர்தம் காலில் செருப்பானாய்!
காவல் நாய் ஆகி நின்றாய்!

ஐக்கியமா? தனிநாடா?
தனிநபரா? வெகுஜனத்திரளா?
வாதப் பிரதிவாதமெல்லாம்
வாழ்விழந்து வாடியது!
போரென்ற பேச்செல்லாம்
வைக்கோல் போர் மலையாச்சு!
ஏடறியார் எழுத்தறியார்
தாய்மண்ணின் பற்றறியார்.
தாயின் கூடுவிட்டு
எழுந்தோடும் எத்தரென
நீவிர் அன்றுரைத்த ம(ா)க்களெல்லாம்
எட்டுமைல் தூரம்
உனைக் கண்டதுமே எட்டி நின்றார்!

இனியென்ன?
வீடுண்டு குடும்பமுண்டு
அண்ணனுண்டு! அண்ணியுண்டு!
அரசு தரும் பிச்சையுடன்
தமிழ்க் கடையில் பிட்டுண்டு!
அடுத்த விமானத்தில்
ஆத்தாளும் வந்துவிடின்
யார் கேட்டார் தமிழீழம்?
மூச்சுவிட மண்ணுண்டு
தானறியாப் பேச்செதற்கு?





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வசந்தகாலத்தின் ஒரு ஒன்றுகூடல்

சகானா

சுவிற்சர்லாந்து நாட்டின் சூரிச் மாநிலத்தில் சுவிஸ் தமிழ் கலை இலக்கிய ஆர்வ கத்தினால் (FLUCHT) ஒழுங்குபடுத்தப்பட்ட நான்காவது கலந்துரையாடல் தொடர் 11.07.99 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற்றது.

ஈழத்தை நினைவுபடுத்தும் வசந்தகால வெப்பநிலையுடன் கூடிய பிற்பகலில், மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் 'புலம்பெயர் மண்ணில் தமிழ்ப்பிஞ்சுகளின் தாய்மொழிக்கல்வி' பற்றிய ஓர் விரிவான கலந்துரையாடல் அழகு குணசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மௌன அனுஷ்டியுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், முதலில் ரவீந்திரன் அவர்கள் 'தொடர்பு ஊடகங்களில் சிறார்களின் தாய்மொழிக்கல்வி' பற்றிய ஒரு முன்மொழிவைச் செய்தார். அதனைத் தொடர்ந்து யோகராஜா அவர்கள் 'புலம்பெயர் சூழலில் தாய்மொழிக்கல்வியும் அதன் நடைமுறைப் பிரச்சனைகளும்' பற்றி தனது கருத்தை முன்வைத்தார்.

ரவீந்திரன் அவர்கள் தனது உரையில் தொடர்பு ஊடகங்களாக பத்திரிகை, வானொலி எனக் குறுக்கிக் கொண்டதுடன், பத்திரிகைகளில் ஒரு பகுதி சிறுவர்களுக்காக ஒதுக்கப்படுவதுபற்றி குறிப்பிட்டு முற்றுமுழுதாக வானொலிபற்றியதாக தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அவரது உரையின்போது வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் குழந்தைகளை விழிப்பது, நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் என்பன எல்லா வானொலிகளிலுமே ஒரேமாதிரியாக இருப்பதாக குறிப்பிட்டார். குழந்தைகளின் படைப்பாற்றல், குழந்தைகளைப் புரிந்துகொள்வது என்பன பற்றியும் குழந்தைகளிற்கான மொழிப்பாவனை பற்றியும் (அது வானொலி மாமாக்கள் மாமிகள் கூறும் 'குஞ்சு', 'குட்டி', 'அம்மா' வாக குழந்தை மொழி இருக்காது.) வானொலி நிகழ்ச்சிகளிலே காணப்படும் வரண்ட தன்மையையும் எடுத்துக் கூறினார்.

இன்னும் மிகச் சிறிய வயதிலேயே திருக்குறள் போன்றவற்றை பாடமாக்கி ஒப்புவிக்கும் தன்மையானது குழந்தைகளின் படைப்பாற்றலை ஊக்கப்படுத்தக் கூடியதல்ல என்றும் கூறினார்.

நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் ஒரே விடயத்தையே திருப்பித் திருப்பிச் செய்யச் சொல்லிக் குழந்தைகளிடம் கேட்கிறார்கள் - அதாவது, கதை சொல்லல், பாட்டுப்பாடுதல், திருக்குறளை ஒப்புவித்தல், இத்தியாதி... இதையிட்டுச் சலித்துக்கொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது புலம்பெயர் சூழலை ஒட்டியும் அதேநேரம் குழந்தையின் படைப்பாற்றல் திறமையை வளர்க்கும் விதத்திலும் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படவேண்டும்.

தாய்மொழிக் கல்வியும் அதன் நடைமுறைப் பிரச்சினைகள்பற்றியும் யோகராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் ஐரோப்பிய, ஆசிய கல்வி முறைகள்/கற்பித்தல் முறைகள் என்பவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடுகளைக் கூறினார். ஐரோப்பிய கல்வி கற்பித்தல் பாங்கானது செயல்முறையை அடிப்படையாகக் கொண்டதாகவும், பாடவிதானங்கள் கூடுதலான செயல்முறைக் கல்விக்கு இடமளிப்பதாகவும், குழந்தைகளின் வேகத்திற்கு ஈடுகொடுக்கக்கூடியதான படிமுறைகளைக் கொண்டதாகவும் குறிப்பிட்ட அவர், பிள்ளைகள் வேற்று மொழிச்சூழலில் அதிக நேரத்தையும் தாய் தந்தையுடன் குறுகிய நேரத்தையும் செலவிடுவது மற்றும் தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களுடன் குழந்தைகள் நெருக்கமாவதற்குக் காலம் எடுப்பதும், பரிச்சயமாவதில் உள்ள சிக்கல்களையும் தெளிவுபடுத்தினார்.

கருத்துப்பரிமாற்றத்தைத் தொடர்ந்து கலந்துரையாடலுக்காக அரங்கம் திறக்கப்பட்ட வேளையில் சுவிஸ் அரசாங்கப் பாடசாலை ஒன்றில் பணிபுரியும் தமிழ்மொழிக்கல்வி ஆசிரியை தனது கருத்துக்களை முன்வைத்தார். சுவிஸ் பாடசாலையில் நிலவும் இலகுவான கற்பித்தல் முறையை வெகுவாக ஏற்றுக்கொண்ட போதிலும் தனது குழந்தைகள் பல விடயங்களை பாடமாக்கி ஒப்புவித்ததையும் அதன் அனுகூலம் குறித்தும் அவர் குறிப்பிடுகின்றார். சுவிஸில் செயல்முறைக்கல்வி மற்றும் தமிழ் எழுத்துக்களை பிள்ளைகள் இலகுவாக எழுதக் கற்றுக்கொள்கிற முறைகள் பயன்படுத்தப்படுவதாகவும் இங்குள்ள கற்பித்தல் முறை இலங்கையுடன் ஒப்பிடும்போது இலகுவாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால் கலந்துரையாடலானது ஒரு கட்டத்தில் தாய்மொழி எது? என்ற தேடலை நோக்கி மிகவும் சுவாரசியமாக நகர்ந்தது. இந்நிலையில் விவாதம் சற்று சூடேறியதாகக் கொள்ளலாம்.

1. அம்மாவின் மொழி தாய்மொழியாக இருக்க வேண்டும். இந்த மொழியினைப் பிள்ளைகள் சிறப்பாகப் பேச அவர்கள் 'வேற்று மொழியில்' தமது நண்பர்கள், சகோதரர்களுடன் கதைப்பதை நிறுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும் என்ற கருத்தும்

2. புலம்பெயர்ந்த சூழலில் வாழ்கின்ற பிள்ளைகளுக்கு தாய்மொழி தமிழாக இருக்கவேண்டும் என்ற தேவை இல்லை எனவும், பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் தமக்கு மிகப் பரிச்சயமான மொழியில் தமது எண்ணங்களை/உணர்வுகளை வெளிப்படுத்தலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டன.

தமிழில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைச் சொல்லியே படிக்கும் பிள்ளைகளின் மனதில் ஒரு பயத்தை ஏற்கனவே ஏற்படுத்தி விடுகிறோம். இப்படியான பதில்களைத் தவிர்க்கவேண்டும். பிள்ளைகள் இலகுவாகக் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற வழிமுறைகளை ஏறபடுத்தவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

தமிழ்மொழியை வற்புறுத்தி தாய்மொழியாக புலம்பெயர்ந்த சூழலில் வாழ்கின்ற குழந்தைக்கு புகுத்துவது பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் ஆரோக்கியமாக பரிமாறப்பட்டன. விரிவான கலந்துரையாடல் என்றபோதிலும் எல்லாத் தரப்பினரும் கலந்து கொள்ளவில்லை, குறிப்பாக தமிழ்மொழி பயிற்றுவிக்கும் பல ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று அபிப்பிராயம் கூறப்பட்டது. மேலும் விமர்சனங்களாக தாய்மொழியை கற்பிக்க முனையும் வானொலி நிகழ்ச்சிகளின் 'மாமா'க்கள் தெரிவு செய்யும் விடயம், பிள்ளைகள் மனனம் செய்து ஒப்புவிக்கும் தன்மையை ஊக்குவிக்கின்ற தன்மை தொடர்ந்து விமர்சிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் குழந்தை திருக்குறளை மனனம் செய்து ஒப்புவித்தல் மூலம் பிள்ளை பரிசு பெறுவதைப் பெற்றோர் பெருமையாகக் கருதுகின்ற தன்மை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலின்போது குறிப்பிடப்பட்ட ஒரு சுவையான சம்பவத்தை இங்கு கூறத்தான் வேண்டும்.

"வானொலி மாமாவுக்கு குழந்தை ஒன்று 'பச்சைக்கிளியே வா வா வா' என்ற பாடலை மிகவும் அழகாக மனனம் செய்து ஒப்புவிக்கின்றது. வானொலி மாமாவும் மிகவும் ஆர்வமாகக் குழந்தையைப் பாராட்டி, குழந்தையிடம் கேட்கிறார்: கிளி என்ன நிறம்? குழந்தை மிகவும் இயல்பாக தெரியாது என்று பதிலளிக்கிறது."

இச் சம்பவம் பலரிடையே ஒரு எண்ணத் தோற்றத்தை உருவாக்கும். எமது வாழும் சூழல் சாராத மொழிக்கல்வியினால் ஏற்படுகின்ற அந்நியத் தன்மைக்கு இது மிகவும் சிறப்பான உதாரணமாகும்.

எண்பதுகளில் ஆரம்பித்த புலப்பெயர்வில், கடந்தகாலங்களில் எமது வாழ்நிலை, ஐரோப்பிய சட்டக் கெடுபிடி, பெண்கள் மீதான வன்முறை, இனவாதம், புலம்பெயர் இலக்கியம் போன்ற பல தளங்களில் விவாதங்களை ஏற்படுத்தி இருந்தது. 21ம் நூற்றாண்டினல் காலடி வைக்கும் எம்முன் மேற் குறிப்பிட்டவைகளுடன் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மொழி பேசுகின்ற பெற்றோர்களின் பிள்ளைகளின் மொழி பற்றியதாகவும் நகர்கின்றது. கலந்துரையாடலில் தொடர்விவாதத்திற்கு பல 'எண்ண முளையங்கள்' விதைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 'தாய்மொழிபற்றிய வரைவிலக்கணம் மீதான மறுவிசாரணை', 'புலம்பெயர்ந்த குழந்தையின் தாய்மொழி, முதல் மொழி, பரிச்சயமான மொழி, சிந்தனா மொழி' என்பன சிலவாகும்.

இந்த விவாதத்தை குழந்தைகளின் பங்களிப்புடன் ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக்க வேண்டிய பணி எம்முன்னே விரிந்து கிடக்கின்றது. இந்த விவாதத்தை சிறுபான்மை தேசிய இனத்திற்கான மார்க்ஸிய-லெனினிய வரைவிலக்கணத்தை உயர்த்திப் பிடித்து தமிழ்த் தேசிய சிறுபான்மை இனத்தின் குழந்தை, தமிழை புலம்பெயர்ந்த தமிழர்கள் போல் பேசவேண்டும், பாவனைப்படுத்த வேண்டும் என்று கழுத்துப்பிடி பிடிக்கப் போகின்றோமா என்ற கேள்வியும் எழுகின்றது.

நாம் தமிழைத் திணிக்காவிட்டால் எங்கே எமது பிள்ளைகள் தமிழைக் கதைக்கமாட்டார்களோ என்று அங்கலாய்த்துக் கொண்டவர்களுக்கு, வீட்டில் சுமுகமான சூழல் நிலவுமெனில் பிள்ளை நிச்சயமாக தமிழ்மொழியைப் பேசும் என்ற கருத்தும் இரு வேறு மொழியுடைய பெற்றோரின் குழந்தைகள் இரு மொழியுடன் தான் வாழும் சூழலுக்கான மொழியையும் பேசுகின்றது என்றும் உதாரணங்கள் கூறப்பட்டன.

சந்திப்பில் டென்மார்க், அவுஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தும் ஆர்வலர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சுவிஸில் இயங்கும் இந்தக் கலை, இலக்கிய ஆர்வகம் தொடர்ந்தும் இப்படியான கலந்துரையாடல்களை ஏற்படுத்தும் எனவும் இவற்றை மேலும் சில முன் தயாரிப்புகளுடனும் இன்னும் காத்திரமாக நகர்த்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் எனவும் நம்புகிறேன்.

*சுவிஸ் கலை இலக்கிய ஆர்வகத்தினால் முன்பு நடாத்தப்பெற்ற நிகழ்வுகள்*

**முதல் நிகழ்ச்சி** (22/07/97):
செல்வி-சிவரமணி கவிதைகள் (செல்வியினதும் சிவரமணியினதும் சில கவிதைகளின் தொகுப்பு), செட்டை கழற்றிய நாங்கள் (ரவீந்திரன், சுவிஸ்), மிக அதிகாலை நீல இருள் (என். ஆத்மா) ஆகிய கவிதைத்தொகுதிகளின் அறிமுகம் விமர்சனம்.

**இரண்டாவது நிகழ்ச்சி** (26/12/98):
இன்னொரு காலடி, இருள்வெளி ஆகிய இலக்கியத் தொகுப்புகளின் அறிமுகம், கலந்துரையாடல்.

**மூன்றாவது நிகழ்ச்சி** (24/01/99):
'நல்லதோர் வீணை செய்து' (ஜெகா, சுவிஸ்) குறும்படம் காட்சி, விமர்சனம், கலந்துரையாடல்.

■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சத்தியனின் மனம் வெம்பியது. அவன் கைகளின் நடுக்கத்தை கையிலிருந்த சிகரெட் நுனியின் சிதறல்கள் காட்டிக்கொடுத்தது. அவன் கண்கள் அடிக்கடி வீட்டினுள்ளே புகுந்து வெளியேறியது... தான் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டோம் என்ற உணர்வு அவனை அங்கு மிங்கும் ஒரு நிலையின்றி உலவ வைத்தது.. தன் நிலை மெல்ல உணரப்பட அவனிடமிருந்து பெரியதொரு மூச்சு மீண்டும் வெளியேறியது.

மெருதுவான அந்தப் புற்தரையில் வெறும் காலோடு நடப்பது சத்தியனுக்குப் பிடித்தமான ஒன்று. இன்று காலைகூட அவன் தான் பின்தோட்டப் புற்தரையை அழகாக வெட்டிவிட்டிருந்தான். தோட்டத்தின் ஒரு பகுதி அவன் வைத்த தக்காளி, பீன்ஸ் வகைகள்... பூக்களும், பழங்களுமாகத் தமது பருவத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. இவ்வளவு நாளும் அவன் பார்த்துப் பார்த்து அழகு செய்த தோட்டமும் வீடும் திடீரென அவனுக்குச் சொந்தமானதல்ல என்ற உண்மை உறைக்க சத்தியன் உறைந்து போனான். தரை முழுக்க அவன் புகைத்து எறிந்துவிட்ட சிகரட் துண்டுகள் சிதறிக் கிடந்தன



அவன் மனம் போல. இன்று நான் என் உடமைகளுடன் வீட்டை விட்டு வெளியேறி விட்டால்...? அதன்பின் நிச்சயமாகப் பூட்டப் படப் போகின்ற என்வீட்டுவாசல் எனக்காகத் திறக்கப்போவதில்லை. இன்று நான் முடிவெடுத்தே ஆகவேண்டும். என் குடும்பமா? இல்லை என் வாழ்க்கையா? ம்... ஒரு வேளை குடும்பம் போதும் என்று இருந்துவிட்டாலும்... என்ன இவர்கள் என்னைச் சும்மா விட்டு வைக்கப் போகிறார்களா? தமது விருப்பத்துக்கும்... தமது கௌரவத்துக்குமாக என் உணர்வுகளோடல்லவா விளையாடப் போகின்றார்கள். அப்படி ஒரு இக்கட்டான நிலை வருவதற்கு முன்னால் வெளியேறிவிடுவதே நல்லது. என் உணர்வுகளைக் கிளறிப் பார்த்து மற்றவர்கள் கேளிக்கை செய்ய நான் அனுமதிக்கப் போவதில்லை. இப்போதே இங்கிருந்து நான் வெளியேறிவிடவேண்டும். ஆனால்... ஆனால்...

அதன் பின்னர் அம்மா, அப்பா, அண்ணா, தங்கைகள் எல்லோரையும் பிரிந்து வேறு உலகில் வேறு மாதிரியான வாழ்க்கை வாழவேண்டும். என் உறவுகளைப் பிரிந்து என்னால் சந்தோஷமாக வாழ முடியுமா? மீண்டும், மீண்டும் அவன் மனதில் இக்கேள்வி எழுந்தாலும்... தன்னை, தன் உணர்வுகளை மதிக்கத் தெரியாத, புரிந்து கொள்ள முயலாத அவர்கள் மேல் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

ஏன் சத்தியன் எனும் மனிதனை அவனாகவே ஏற்றுக் கொள்ள என் குடும்பத்தால் முடியவில்லை? ஒருவேளை என் குடும்பம் ஏற்றுக் கொண்டாலும்... இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த என் நிலையால், என் தங்கைகளின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடுமோ? சத்தியனுக்குச் சிரிப்பாக வந்தது. எந்த நூற்றாண்டில் இருந்துகொண்டு நான் இப்படியெல்லாம் சிந்திக்கிறேன். தனிமனிதனின் உணர்வுகள் மதிக்கப் படவேண்டும். நான் கூறுகிறேன். என்னைப்போல் மற்றவர்களும் கூறுகிறார்கள். ஆனால் எமது மக்கள், எமது சமூகம்... ம்... இதற்குள்தானே எனது குடும்பமும் அடங்குகிறது. இதனால் தானா என் இந்த நிலையை என் பெற்றோருக்கு விளக்க முயன்ற போது கிராமத்துப் பெண்களைப் போல் அம்மா தலையில் அடித்துக் கதறி அழுதாவா? எவ்வளவு படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும், மற்றைய மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாது, நீ இப்படித்தான் இருக்க வேண்டும். இப்படி இருப்பதுதான்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உனக்கும், உன் குடும்பத்துக்கும் கௌரவம். அவன் குடும்பம் அவனின் உணர்வுகளுக்கு வேலி போடும்போது, சத்தியன் உள்ளுக்குள்ளேயே துவண்டு போனான். நான் என்ன வேண்டுமென்றா இப்படி நடக்கிறேன்? என் உணர்வுகள் மற்றைய மனிதர்களில் இருந்து வேறுபட்டுப் போனதற்கு நானா காரணம். கோபம், அவமான உணர்வு ஒன்றுகூட அவனை அறியாமலே கண்களில் இருந்து கண்ணீர் உருண்டது.

புகைந்து முடிந்த சிகரெட் துண்டு அவன் கையைச் சுட, சுய நினைவுக்கு வந்தான் அவன். வீட்டினுள்ளே அம்மா ஏதோ அழுது புலம்புவது அவனுக்குக் கேட்டது. பாவம் அம்மா எனக்கு ஏதோ தீர்க்கமுடியாத நோய் வந்துவிட்டதாக எண்ணி எத்தனை வைத்தியர்களிடம் என்னைக் கூட்டிக்கொண்டு போனாள். "இது அவன் விருப்பம். இது ஒன்றும் மருந்து கொடுத்துத் தீர்க்கும் வியாதி இல்லை" என்று மனோ தத்துவ வைத்தியர்கள் கூறியபோது "இவங்கள் இப்பிடித்தான் சொல்லுவாங்கள். நான் உன்னை எங்கடை ஆக்கள் ஆரிட்டையும் கூட்டிக்கொண்டு போகப் போறன்" அம்மா மனம் தளராது சொல்ல, பாவம் அம்மாவின் திருப்திக்காய் அவள் அழைத்த இடத்திற்கெல்லாம் ஒரு நாயைப் போல் பின் தொடர்ந்தான் சத்தியன்.

சத்தியனுக்கு தான் ஆண்களினால் கவரப்படும் ஒரு மனிதன் என்ற உணர்வு உணரப்பட்ட நாளும் அதனால் அவன் சிறிது தடுமாறிப் போனதும் நினைவிற்கு வந்தது. அவனுக்கு அப்போது பதினைந்து வயதிருக்கும். கொழும்பில் இருக்கும் ஒரு ஆண்கள் உயர்பள்ளியில் அவன் சேர்க்கப்பட்டான். முதல்நாள் தனது வகுப்பறையை அவன் அடைந்தபோது எல்லோருமே புதிய மாணவர்கள்.

புதிதாக வந்திருக்கும் சத்தியனின் முகம் பார்த்து ஸ்நேகமாகச் சிரித்தவர்கள் சிலர். ஏதோ ஒரு எதிரியைப்போல் பார்த்தவர்கள் சிலர். ம்... புதிதாக ஒருத்தன் வந்திருக்கின்றான் என்ற சுரத்தே இல்லாது தமக்குள் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தவர்களும் இருந்தார்கள். எல்லோரையும் கடந்து தனக்கென்றிருந்த இருக்கையில் அமர்ந்தான் சத்தியன். ஆசிரியர் வந்து பாடத்தைத் தொடங்கினார். தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போலொரு உணர்வு அவனுக்குள் எழ பின்னால் திரும்பிப் பார்த்தான். சிறிது நீலமடிக்கும் கண்கள் அகன்ற தோள்கள்... சிவந்த உதடுகள். அந்த முகத்தில் பெண்மையுடன் கூடிய ஒரு தேஜஸ் இருந்தது. சிறிது காலமாகவே இரவின் அவஸ்தைகளுக்குள் அல்லாடிக் கொண்டிருந்த சத்தியனுக்கு இந்தப் புதிய முகம் ஏதோ கூறுவதுபோல் பட்டது. அவன் கால்களில் மின்சாரம் பாய்வதுபோல் ஒரு உணர்வு. கைகள் குளிரிந்து போனது. முதற் பார்வையிலேயே சத்தியனுக்கு அவனைப் பிடித்துப் போனது. ஒரு அழகிய பெண்ணைக் கண்டால் ஒரு இளைஞன் எப்படி உடல் சிலிர்த்துப் போவானோ அதே நிலையில்தான் சத்தியனும் இருந்தான் அப்போது. அவனுக்குத் தன் நிலையில் சிறிது வியப்பு ஏற்பட்டது. பக்கத்துவீட்டு நிஷா அடிக்கடி சத்தியன் வீடுதேடி வந்து அவனை உரசுவதுபோல் நின்றுகொண்டு வம்புக்கு இழுப்பதும் "அவளுக்கு உன்னிலை ஒரு கண், பேசாமல் ஒரு நாள் கையைப் போடடா. நானெண்டா இவளத்துக்கும்..." சத்தியனின் அண்ணா காமக்கண்ணோடு அவனைப் பார்த்து ஜோக் அடித்தபோது சத்தியனுக்கு அருவருப்பாக இருந்ததே தவிர அவன் உணர்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் இப்போது சத்தியனுள் பல மாற்றங்கள். அந்த அழகிய புதிய முகத்தை திரும்பத் திரும்பப் பார்க்கவேண்டும் போலொரு உணர்வு அவனுக்கு. மனம் குழம்பிய நிலையில் மீண்டும் அவன் முகம் நோக்கினான் சத்தியன். மெல்ல ஒரு புன்னகையுடன் சத்தியனையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் தலையை ஆட்டினான். சிறிது கூச்சத்துடன் சத்தியனும் தலையை ஆட்டினான் ஆமோதிப்பதுபோல். தாம் எதற்குத் தலை ஆட்டினோம் என்று அவனுக்கு அப்போது புரியவில்லை. ஆனால் சத்தியனுக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது என்ற உண்மை மட்டும் புரிந்தது.

பாடசாலை இடைவேளையின்போது அவன் சத்தியன் பக்கத்தில்வந்து தன் பெயர் ஸ்ரீபன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். ஸ்ரீபன் ஒரு ஆங்கிலக் கலப்பில் பிறந்தவன் என்பதை அவன் தோற்றம் கூறியது. சத்தியன் தன்னையும் அவனுக்கு அறிமுகப்படுத்திவிட்டுத் தொடர்ந்து என்ன கதைப்பது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கும்போது... அங்கே வந்த ஒரு இளைஞர் கூட்டம் சத்தியனைப் பார்த்து "வந்த முதல் நாளே இந்தப் பெட்டையனோடை சேர்ந்திட்டாய். இனி உருப்பட்ட மாதிரித்தான்" என்று கூறிவிட்டுச் சிரித்தபடியே அங்கிருந்து போய்விட்டார்கள். சத்தியன் கேள்விக்குறியோடு ஸ்ரீபனை நோக்கினான். "என்னை எல்லாரும் இப்பிடித்தான் கூப்பிடுறவை" தலை குனிந்தபடியே அவன் கூற, சத்தியனுக்குச் சின்ன வயதில் தான் ஆண்களோடு சேர்ந்துகொண்டு கிரிக்கெட், (f)புட்போல் என்று விளையாடாமல், தங்கைகளுடன் சேர்ந்துகொண்டு சேலைகட்டி, சங்கிலி காப்பு என்று போட்டுக்கொண்டு அவன் அப்பா, அம்மா விளையாட்டு விளையாடும்போது, அவன் அண்ணா நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு இவன் ஒரு பெட்டையன் என்று கூறிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிரித்தது கண்முன்னே வந்துபோனது. தன்னைப்போல ஒருவன் தன் உணர்வுகளை அறிந்த ஒருத்தனைக் கண்டுகொண்ட களிப்பில் சிறிது உணர்ச்சிவசப்பட்டவனாக, "நான் அப்பிடிக் கூப்பிடமாட்டன். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு." இப்படிக் கூறவேண்டும் என்று சத்தியனுக்கு எப்படித் தோன்றியதோ? ஸ்ரீபனின் கைகளைப் பற்றியபடியே அவன்கூற இருவரின் உடலிலும் மின்சாரம் பாய்ந்தது போலொரு உணர்வு. அதன் பின்னர் குழப்பமின்றித் தம் உறவின் அர்த்தத்தை இருவருமே புரிந்துகொண்டார்கள்.

அவர்களின் உறவு சிறிது, சிறிதாக இறுக்கமாகி உணர்வுகள் பரிமாறப்பட்ட வேளை, நாட்டு நிலைமை மோசமாக சத்தியனின் குடும்பம் கனடாவிற்குக் குடி பெயர்ந்தது. தம் உறவில் ஏதோ தவறு இருப்பதாக சத்தியன் எண்ணியதால், பெற்றோருடன் மனம்விட்டு ஸ்ரீபனைப்பற்றி அவன் பேசத் தயங்கினான். முடிவு ஸ்ரீபனை அவன் இழக்க வேண்டிய கட்டாயம். கனடா வந்த பின்னர், சில காலம் ஸ்ரீபனின் நினைவுகளால் அவன் அல்லாடிய நாட்களும் உண்டு. இருந்தும் புதிய நாடு, புதிய பாடசாலை என வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஸ்ரீபனை அவன் சிறிது சிறிதாக மறக்க உதவியது. பின்னர் பல்கலைக்கழகம் சென்று அங்கே ஜேம்ஸை சந்தித்தபோதுதான் மீண்டும் அவனிடம் அதே உணர்வுகள் வெளிப்படத் தொடங்கியது. இப்போது சத்தியன் மிகவும் தெளிவாக இருந்தான். தன்நிலைபற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வயதும், பக்குவமும் அவனுக்கு இப்போது இருந்தது. தன்நிலைகண்டு அவன் வெட்கப்படவோ வேதனைப்படவோ இல்லை. விரைவில் தன் பெற்றோருடன் மனம்விட்டுக் கதைக்கவும் அவன் முடிவு செய்திருந்தான். ஸ்ரீபனின் இழப்பை அவன் ஜேம்ஸிடம் கொண்ட உறவால் திருப்பிப் பெற்றுக்கொண்டான். ஜேம்ஸைப்பற்றிப் பெற்றோருடன் கதைக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்திற்காக அவன் காத்திருந்தவேளை. அவன் சிறிதும் எதிர்பாராத வகையில் புயலாக அந்த சேதியை அவன் தாயார் கூறினாள். சத்தியனுக்கு தன் நண்பியின் மகளைத் திருமணம் செய்துவைக்க தாம் முடிவு செய்திருப்பதாக. சத்தியன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் தம் முடிவில் மிகவும் இறுக்கமாகவே இருந்தார்கள். அவன் யாரையாவது காதலிக்கிறானா, தம் கௌரவத்துக்குக் குறைவில்லாமல் அவன் யாரைக் காதலித்தாலும் தாம் ஏற்றுக் கொள்ளுவோம் என்று மிகவும் பெருந்தன்மையுடன் தாயார் கூற, தன் நிலை சத்தியனுக்குப் புரியத் தொடங்கியது. குடும்ப கௌரவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என் பெற்றோரிடம் ஜேம்ஸ்பற்றிக் கூறி எதுவும் நடக்கப்போவதில்லை. அவன் மௌனமானான். அவன் மௌனத்தை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு திருமண ஏற்பாட்டில் அவன் பெற்றோர் அடி எடுத்து வைக்க, வேறு வழியின்றி ஜேம்ஸிடம் தான் கொண்ட உறவை அவன் கூறவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. விளைவு அவனுக்கு ஏதோ ஒரு நோய் என்று தாயாரும்... இவன் இயற்கையில் இருந்து மாறுபட்ட ஒரு வகை ஜந்து என்பதுபோல் தந்தையும்... அவனை முகம் பார்த்துக் கதைக்கத் தயங்கிய அண்ணனும் கலங்கிய கண்களுடன் விலகிச் சென்ற தங்கைகளும் சத்தியனை உலுக்கி எடுத்தது. பல நாட்கள் போராட்டத்தின் பின்னர், சத்தியன் தன்னை அவர்கள் விரும்பியதுபோல் மாற்றிக்கொள்ள வேண்டும்... திருமணம் செய்து கொள்ள வேண்டும். மறுத்தால் இந்த வீட்டில் அவனுக்கு இடமில்லை எனக் கூறப்பட்டது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட கடைசிநாள் இன்றுதான்.

சத்தியன் நிலைகொள்ளாது தவித்தான். ஒரு பெண்ணை அவனால் காதலிக்கமுடியாது என்ற உண்மை தெரிந்த பின்னரும், தமது கௌரவத் திற்காக, இந்த சமூகத்திற்குப் பயந்து தன் உணர்வுகளையும், ஒரு பெண்ணின் வாழ்க்கை யையும் பலி போடத் துணிந்த தன் பெற்றோர் மீது அவனுக்கு கோபம் கோபமாக வந்தது.

வீடு இப்போது அமைதியாகக் காணப்பட்டது. அவன் பதிலுக்காக எல்லோரும் மௌனமாகக் காத்திருப்பது அவனுக்குப் புரிந்தது. மேல் அறையின் திரைச்சீலையை விலக்கிவிட்டு அவன் தங்கைகள் அவனைப் பார்ப்பது சத்தியனுக்குத் தெரிந்தது. அண்ணனுக்குக் கலியாணமாகிவிட்டது. தங்கையும் ஒருத்தனைக் காதலிக்கின்றாள். விரைவில் கல்யாணம் நடக்க இருக்கிறது. ஆனால் எனக்கு மட்டும் எப்படி இப்படியாயிற்று. இப்போது சத்தியனுக்குத் தன்மேலேயே ஒருவித இரக்கம் தோன்றியது. என் இந்த நிலையால் நான் உயிராக நேசிக்கும் என் குடும்பத்தை இழக்கப் போகிறேன். வீட்டில் நடக்கும் ஒவ்வொரு நல்ல நிகழ்ச்சிகளுக்கும் நான் இல்லாது போகப் போகிறேன். ஏன் என் ஏக்கம் இவர்களுக்குப் புரியமாட்டேன் என்கிறது. நான் என்ன வேணுமென்றா இப்படி நடக்கிறேன். மீண்டும், மீண்டும் கேள்வி கேட்டு மீண்டும், மீண்டும் பதில் இன்றிக் குழம்பிப் போனதால் வெறுப்படைந்தவன் ஒரு தீர்மானத்துடன் வீட்டி னுள்ளே புகுந்தான். ஆவலோடு அவன் முகம் பார்த்த தாயாரின் பார்வையைத் தவிர்த்து, தன் அறைக்குள் புகுந்து கொண்ட வன், தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினான். பின்னால் அவன் தாயார் விம்முவது அவனுக்குக் கேட்டது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தகம் இருந்ததும் இந்நாளே...

இன்றைய நாளில் அன்றைய இரவு,
ஒரு தேசம் தன் தலைக்குத் தானே செந்தீ மூட்டிக்கொண்டது.


தன் இன்னுயிர் இற்றுப்போனாலும்கூட
சிரம்வேறு உடல்வேறு என்றாக்கி விடுவதென்று
சினம் பிறக்க துற் சங்கற்பம் பண்ணிக் கொண்டது
தேசத்தின் செங்கோல்,
மொழிக்குருதியில் குளித்தெழுந்து
இனச்சகதியில் குதித்திருந்து,
செம்மை தொலைத்து இன்னும் இரத்தச் சிவப்பாகி.

அந்தச் சிலரின் தொலைவீச்சுக்கண் பிடுங்கி விசிறியதில்,
ஒரு திண்ணை தூங்கி நோஞ்சற் சமுதாயம்
தன் பகற்குருட்டுப் பார்வையும்
மொன்னைத்தனம் தின்ற சோற்றுச்சுகக்கனவும்கூடத்
தொலையக் கண்டது.
சிலகாலம்
நெற்றி நேராக்கி
வளைமுதுகு நீள்கோடாய் நிமிரத் திமிறியது.

அன்றின் இன்றைய தினமொன்றின்
அவம்சேர் ஐம்பத்துமூன்று உயிர் பிரிப்பில்,
இன்னும் ஓர் ஐம்பதினாயிரத்தின் அழிவு
ஆயுதங்களின் கூர்முனையில்
உறுதியாய் சட்டம் போட்டு
உத்தரவாதமாக்கப்பட்டது
அரசு தொங்கவிட்ட எழுதாப் பட்டயத்தால்.

திறந்து வைத்த பண்டோராவின் போர்ப்பெட்டியில்
இருந்து பிறந்து வந்த குழந்தைகளும்
பிருஷ்டங்களின் மேலே
வரிவரியாய் வால்களுடன்
திரண்டு வந்ததாகத்
தம் சிகைக்குத்
தீவைத்தவர்கள்
திகைப்பூண்டு மிதித்துக்
குதித்துச் சொன்னார்கள்.

பின்னர்,
வரியுடற் குழந்தைகள் தம்முள்ளும்
வளர்ந்த வேளையில்
வெகுவாய்க் கீறிக்கொண்டன.
ஓர் உதரம் பிறந்த வௌவால்கள்
பகல் வெளிச்சக் குருட்டில் தம் உதிரங்களையே



ஜூலை 83' - அ. மாற்கு

நன்றி' தேடலும் படைப்புலகமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சித்தார்த்த சே குவாரா

உறிஞ்சிக் கொன்றன ஒன்றை ஒன்று
வஞ்சத்தில் மிஞ்சி.

சில சோர்ந்து போய்ச் சோரம்போயின
எதிரிக்கூகைகளின் எடுபிடி வேலைக்கும்
அந்நிய மயில்களின் எச்சில் இலைகளுக்கும்.
மிஞ்சிய சில மூர்க்கம் மீறி
சிலவேளை தம்மதியை முழுக்கிரகணம்
கொலைப்பாம்பாய் மழுக்கி விழுங்கவும் கண்டன.

ஆயினும் என்ன?
எம்மில் எவரும் இங்கு மறக்கவில்லை,
இன்றைய நாளில் அன்றைய இரவு,
ஒரு சின்னத்தேசம் தன் தலைக்குத் தானே
அந்திவான நிறத்திற்
செந்தீ மூட்டிக் கொண்டதையும்
திறந்த பண்டோரோ பெட்டியிலே
விழி சிவக்க, வாயெல்லாம் முழு
வேட்டைப்பற்களுடன்
வரிவாற்குழவிகள் எழுந்ததையும்.

ஆண்டுக்காலம் கழிந்த பின்னும்,
தீ தொடர்ந்து எரியும் வெகுவாயும்
வீதி, வயல், வீடு, வேறு இயல்தகு வழியெல்லாம்
புகைவீசிப் புயலாகி, பொங்குபுனலாகி பொசிந்து
நீறுபடுத்தி நெறிகெட்டு, கெடுத்துப் பரவும்.
பற்றிய தீ இன்னும் பயங்கரமாய்ப்
பிரசவிக்கும் புதிதாயும்
ஒரு கோடி கொடிய கொள்ளிவாய்ப்பிசாசுகள்,
ஒரு பிண்டத்தில் சிறு போர் உலக்கையிடித்தாலும்கூட.
கோரைப்புல்லெல்லாம் கொல்லும் ஆயுதமான
கொடூரத்தை உலகு மீள ஒரு யுகத்திற் காணுதல்
போலிருக்கும் இந்த நரயாக நிகழ்வு,
நாடே ஒரு பெரிய ஓம குண்டலமாக,
மக்கள் அங்கங்களின் துண்டங்கள் அவிர்ப்பாகமாகி.
தேசம் சிசு மயிராற் பொசுங்கி நாறும்
நரபலி மாந்தர்கள் கால்மாற்றிக் கைதூக்கிக்
களிநடனம் புரிந்திருப்பார்
சுடலை மண்டையோட்டுக் கபாலிகராய்.

தீ பரவாத் தேச முடுக்கிருந்து பரவும்,
காவி ஆடையில்
கௌதமன் பாதைப் போர்வையில் இருந்து
கொலைமுடுக்கும் குருதி உச்சாடனங்கள்
முற்றும் துறந்த மொட்டையுரு
மனக்குரூபிகள் உள இருட்குகையிருந்து.

நரவேட்டைக்குப் புதிதாய்க்
கண்படாமிட்டுப்
பூட்டுவார் சிறுபாலகரை
ஆயுதவண்டிகளில்.
கொண்டைச் சேவல் யுத்தம் என்ற பேரில்
கோழிக்குஞ்சுகள் கொக்கரிக்கும் பாவனை பண்ணிக்
கேரலுடன் ஒருமுறை கூவி, உடல்கூறிட,
மிதியுண்டு அழிந்து போகும்,
மண்ணுள் மக்கிப்போக.

அடுப்பு ரொட்டி சுட்ட
பெட்டைகளும் குண்டெடுத்து உடல்கட்டி
சுட்டுவிளையாடும் என் நாட்டில்
இனிவரும் காலங்களில்,
கருப்பை முட்டைகளும்
ஓடு சிவத்து
வெளிக்குதித்து
முகக்கவசமிட்டுப் போரிடலாம்.

ஆயினும் என்ன?
எவரும் இங்கு மறக்கவில்லை,
இன்றைய நாளில் அன்றைய இரவு,
தேசம் தன் தலைக்குத் தானே
செந்தீ மூட்டிக் கொண்டதையும்
திறந்த பண்டோரோ பெட்டியில்
வரிவாற்குழவிகள் எழுந்ததையும்.

ஆனாலும்
வெகுவாயே
ஆட்சியர்க்கும்
அந்நியர்க்கும்
அதிகாரத்துக்கும்
நிகழ்நேரத்தை
அடகு வைத்து
மனம் மரத்து
மறந்து விட்டோம் எம்,
வாழ்வின் தொலை இலக்கும்
ஆயுதமுனை இலக்கும்
என்றெனக்குப் பட்டிருக்கும்
ஒரு பதினைந்து ஆண்டுகள் மடிந்தபின்,
இன்று '98 ஆடி 23.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்னாபிரிக்கா தேர்தல்கள்: தெளிவில்லா எதிர்காலம்!

தி. உமாகாந்தன்



தபோ ம்பெகி

தொண்ணூறுகளில் நிகழ்ந்த அரசியல் அதிசயங்களில் ஒன்று, தென்னாபிரிக்காவின் அரசியல் மாற்றம். ஆனால் இந்த அரசியல் அதிசயம் ஒரு இரவிற்குள் நடக்கவில்லை. வானத்திலிருந்து வந்து வீழ்ந்துவிடவில்லை. வாழ்வின் அதிகபட்ச வலிகளைச் சுமந்த தென்னாபிரிக்காவின் கறுப்பு இன மக்கள், சிறுபான்மை வெள்ளை இன ஆட்சியாளர்களின் இனவாத ஒடுக்குமுறைகளுக்குள்ளாகி... வாழ்வின் வழி தெரியாது மிருகங்களைப்போல நடத்தப்பட்டனர். கறுப்பு இன மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்த நெல்சன் மண்டலா போன்ற தலைவர்கள் உச்சப் பாதுகாப்புச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். மற்றத் தலைவர்கள் அயல்நாடுகளுக்குத் தப்பிச் சென்று போராட்டத்தை முன்னெடுத்தனர். இவர்கள் அனைவருக்கும் இனவாத தென்னாபிரிக்க வெள்ளையர் அரசு கொடுத்த பெயர் 'பயங்கரவாதிகள்'. ஆனால் வரலாறு எப்போதும் ஒரேமாதிரி தொடர்வதில்லை. சர்வதேச அரசியல், பொருளாதார அழுத்தங்கள் தென்னாபிரிக்க அரசை நிலைகுலையச் செய்தது. சர்வதேசப் புறக்கணிப்பு தென்னாபிரிக்காவை தனிமைப்படுத்தியது. இவை அனைத்தையும்விட சொந்த அரசியல் நலன்களையும், அதிகார சுகங்களையும் பாதுகாத்துக்கொள்ளத் துடிக்கும் வழமையான அரசியல் தலைவர்களைப் போலில்லாமல் நாட்டினதும், மக்களினதும் எதிர்காலம் குறித்து மாத்திரம் சிந்திக்கும் இரு இனங்களையும் சேர்ந்த இரு தலைவர்களது - நெல்சன் மண்டலா, டி கிளார்க் - அயராத முன்னெடுப்புக்கள், இடைவிடாத பேச்சுவார்த்தைகள், புரிந்துணர்வுடனான விட்டுக்கொடுப்புகள் இவை அனைத்துமே தென்னாபிரிக்காவில் ஏற்படவிருந்த பெரும் இரத்தக் களரியைத் தவிர்த்து இந்த நூற்றாண்டின் ஒரு முக்கிய அரசியல்மாற்றத்தை நிகழ்த்தியது.

1994ம் ஆண்டு தென்னாபிரிக்காவின் முதலாவது ஜனநாயகரீதியான தேர்தல் நடைபெற்றது. ANC என அழைக்கப்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பு இன ஜனாதிபதியாக நெல்சன் மண்டலா பதவி ஏற்றார். தென்னாபிரிக்காவில் நடந்த இந்த அரசியல் மாற்றம் உலக அரங்கிலும் எதிரொலித்தது. நேற்றுவரை பயங்கரவாத அமைப்பாக தென்னாபிரிக்க இனவாத அரசினாலும், முதலாளித்துவ செய்தித் தொடர்புச் சாதனங்களா லும் ANC வர்ணிக்கப்பட்டது. பயங்கரவாதியாக நெல்சன் மண்டலா வர்ணிக்கப்பட்டார். ஆனால் அந்த அமைப்பு இன்று தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சி. நெல்சன் மண்டலா தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பு இன ஜனாதிபதி. இந்த மாற்றம் ஆட்சிக் கவிழ்ப்பின்மூலமோ, ஆயுதங்கள் மூலமோ நிகழ்த்தப்படவில்லை என்பதுதான் இங்கு முக்கிய மாகக் குறிப்பிடவேண்டிய அம்சம். இரு இன மக்களும் பங்குபற்றி வாக்களித்த ஒரு முறைகேடில்லாத தேர்தலின் மூலமே ANC ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த அரசியல் மாற்றம் உலக அரங்கில் ஒடுக்கப் பட்ட மக்களுக்கான போராட்டங்களை முன்னெடுத்துவரும் இதர விடுதலை அமைப்புக்களான பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), அயர்லாந்து புரட்சிகர இராணுவம் (IRA) போன்ற அமைப்புக்களையும் அரசியல்பாதையை நோக்கித் தள்ளியது. விளைவு, நீட்டிய துப்பாக்கிகளுக்குப் பதிலாக கரங்கள் குலுக்கப்பட்டன. வெடிகுண்டுகள் அமைதியாகி நீண்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

கின. இந்த ஆரோக்கியமான அரசியல் மாற்றங்களுக்கான அடிக்கல் தென்னாபிரிக்காவில்தான் ஊன்றப் பட்டது.

இப்போது கடந்த யூன் மாதம் தென்னாபிரிக்காவில் இரண்டாவது ஜனநாயகரீதியான தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளன. இம்முறைத் தேர்தல்களிலும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் 66வீதமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது. 1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கும் இம்முறை தேர்தலுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. 1994ம் ஆண்டுத் தேர்தல்கள் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளின் மத்தியில் நடைபெற்றது. ஆனால் இம்முறை தேர்தல்களில் மக்கள் வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் மாத்திரம் வாக்களிக்காமல் தமது எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புடனும் வாக்களித்துள்ளார்கள். கடந்த தேர்தல்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அப்போதுதான் ஆட்சிக்கு வரப்போகும் கட்சி. ஆனால் இம்முறை தேர்தலிலே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஏற்கனவே ஐந்து வருடங்கள் பதவியிலிருந்த கட்சி. பதவிக் காலத்திலே ANC மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டனவா...? என்று மக்கள் ஆராய்ந்து வாக்களிக்கவேண்டிய நிலை. இருப்பினும் கடந்த தேர்தலைவிட இம்முறை தேர்தலிலே ANC அதிக ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது ஒரு சாதனையே. அதுவும் சென்ற தேர்தலில் கறுப்பு இன மக்களின் தலைவர் நெல்சன் மண்டலாவின் தலைமையில் போடடியிட்ட ANC இம்முறைத் தேர்தலில் தபோம்பெகி (THABO MBEKI)யின் தலைமையில் களமிறங்கிப் பெற்ற இந்த வெற்றி குறிப்பிடத்தக்கது. கவனத்தில் எடுக்கப்படவேண்டியது.

1994ம் ஆண்டுத் தேர்தலில் 252ஆசனங்களைக் கைப்பற்றிய ஆபிரிக்க தேசிய காங்கிரசிற்கு இம்முறை தேர்தல்களில் 266ஆசனங்கள் கிட்டியுள்ளன. அது மட்டுமல்ல, நாட்டின் 9 மாகாணங்களில் 7இல் ANC பெருவெற்றி பெற்றுள்ளது. ஆனால் 1994ம் ஆண்டுத் தேர்தல்களைப் போலவே இம்முறையும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மேற்கு கேப் மாகாணத்தில் வெள்ளைஇன மக்களின் ஆதரவையும், குவாசுலு நதல் மாகாணத்தில் இந்திய சமூகத்தினரின் ஆதரவையும் பெறத் தவறியுள்ளது.

மேற்கு கேப்பில் வெள்ளையின மக்கள் தொடர்ந்தும் தமது ஆதரவை NNP எனப்படும் புதிய தேசியக் கட்சிக்கே வழங்கி வருகிறார்கள். அதேபோல் குவாசுலு நதலில் இந்திய சமூகத்தினர் DP எனப்படும் ஜனநாயகக் கட்சிக்கே தமது ஆதரவை வழங்கியுள்ளனர். இக்கட்சிக்கு இம்முறை தேர்தல்களில் கணிசமான வெள்ளை இன வாக்காளர்களும் ஆதரவு வழங்கியது குறிப்பிடத்தக்கது. தேசிய அளவில் கடந்த தேர்தல்களில் 7 ஆசனங்களை மாத்திரம் கைப்பற்றிய இக்கட்சிக்கு இம்முறை கிடைத்திருப்பது 38ஆசனங்கள் - இதர இன மக்களின் வாக்குகளை ANC பெறத் தவறியதும், மக்கள் இன அடிப்படையிலேயே கட்சியைத் தெரிவு செய்து வாக்களிப்பதும் தென்னாபிரிக்காவின் எதிர்காலத்துக்கோ அல்லது ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் எதிர்காலத்திற்கோ நல்லதல்ல. இருப்பினும் தேர்தல்கள்,


நெல்சன் மண்டலா

வாக்களிப்பு போன்றவை குறித்து அனுபவம் அற்ற மக்கள் பெருமளவில் பொறுமையாக காத்து நின்று வாக்களித்ததும், தேர்தல்கள் முறைகேடுகள், மோசடிகள் எதுவுமற்று நடைபெற்றதும் தென்னாபிரிக்காவில் ஜனநாயகத்துக்குக் கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும். HSRC எனப்படும் மனிதவியல் விஞ்ஞான ஆய்வுக்கழகம் நடத்திய கருத்துக் கணிப்பெடுப்பொன்றில் 96வீதமானோர் இம்முறை தேர்தல்கள் நடந்தமுறை பற்றித் தாம் திருப்தியடைவதாகத் தெரிவித்துள்ளனர். 99வீதமானோர் வாக்களிப்பது தொடர்பாக தாம் எந்தவிதமான நிர்ப்பந்தத்துக்கும் உட்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். தினந்தோறும் உலகஅரங்கில் நடைபெற்ற தேர்தல் தில்லுமுல்லுகள் குறித்த செய்திகள் ஆசியாவிலிருந்து ஆபிரிக்காவரை அனைத்துக் கண்டங்களிலிருந்தும் வெளிவந்துகொண்டிருக்கையில் தேர்தல் அனுபவம் குறைந்த தென்னாபிரிக்காவின் இம்முறைத் தேர்தல்கள் உண்மையில் ஜனநாயகத்துக்கான ஒரு வெற்றிதான்.

இத்தேர்தல் முடிவுகளில் குறிப்பிடவேண்டிய இன்னுமொரு அம்சம் தேசிய அளவில் எந்த ஒரு எதிர்க் கட்சியும் பத்துவீதமான வாக்குகளைத் தனித்துப் பெறவில்லை என்பது. ஓரளவு குறிப்பிடத்தக்க வெற்றியை DP எனப்படும் ஜனநாயகக் கட்சியும் அதைத் தொடர்ந்து IFP எனப்படும் இங்கதா சுதந்திரக்கட்சியும் பெற்றன. ஆனால் IFP, ஆட்சியில் ANCயின் கூட்டுக்கட்சி. இத்தேர்தலின் பெரும் தோல்வி NNP எனப்படும் புதிய தேசியக்கட்சிக்கே கிட்டியுள்ளது. தேசியஅளவில் 1994 தேர்தல்களில் 82 ஆசனங்களைப் பெற்ற இக்கட்சிக்கு இம்முறை தேர்தல்களில் கிடைத்திருப்பது 28 ஆசனங்களே. ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த தேர்தல்களில் 20.39வீத வாக்குகளைப்பெற்ற இக்கட்சி இம்முறை 7வீதத்துக்கு சற்று அதிகமான வாக்குகளையே பெற்றுள்ளது. இக்கட்சி வெள்ளை இன மக்களின் தேசிய உணர்வுகளைப் பிரதிபலிப்பது ஆனால் தோல்வி இக்கட்சிக்கு மட்டுமல்ல. கறுப்பு இன தேசியத்தை தூண்டும் கட்சிகளான F.F. எனப்படும் சுதந்திர முன்னணியும், PAC எனப்படும் பான் ஆபிரிக்க காங்கிரசும் கூடத் தோல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியடைந்துள்ளன. 1994 தேர்தல்களில் 9 இடங்களைப் பெற்ற F.F.இற்கு இம்முறை கிடைத்திருப்பது 3 இடங்களே. அதுபோல சென்ற முறை 5 இடங்களைப் பெற்ற PAC இம்முறை பெற்றிருப்பது 3 இடங்களே. ஆனால் ஒரு வருடத்துக்கு முதல்மட்டுமே ஆரம்பிக்கப்பட்டு அரசின் தேர்தல்நிதி எதுவுமின்றி இம்முறைத் தேர்தலில் முதல் தடவையாகக் களமிறங்கிய ஐக்கிய ஜனநாயக அமைப்புக்கு 14 ஆசனங்கள் கிடைத்திருப்பதும் இம்முறை தேர்தலின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம். இருப்பினும் பலமான எதிர்க்கட்சிகள் இல்லாமலிருப்பது என்பது ஜனநாயகத்தின் பலவீனமான ஒரு அம்சமே.

தேர்தல் முடிவுகள் இப்படி இருக்க தென்னாபிரிக்க மக்களின் பார்வை மாத்திரமல்ல, சர்வதேசத்தின் பார்வையுமே இப்போது குவிந்திருப்பது கடந்த யூன்மாதம் 16ம்திகதி தென்னாபிரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருக்கும் தபோ ம்பெகியின் மீதே. ஆட்சி அதிகாரங்களை இறுகப் பற்றிக்கொண்டு பதவிகளை கைவிட மறுக்கும் சர்வாதிகாரிகளைக்கண்டு பழக்கப்பட்டுப்போன ஆபிரிக்காவில் “இம்முறை பதவிக்காலத்துடன் நான் பதவி விலகுகிறேன். ஜனநாயகத்தை நாட்டில் நடைமுறைப்படுத்தும் எனது கடமையில் நான் திருப்தி கொண்டுள்ளேன்” எனக்கூறி தமது பதவிக்காலத்தை முடித்துக்கொண்டு ஒதுங்கிக்கொண்ட அபூர்வ தலைவர் நெல்சன் மண்டலாவால், தமக்கு அடுத்து இப்பதவியை வகிப்பதற்குத் தகுதியானவர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தபோ ம்பெகி. ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைமைப் பதவி, தென்னாபிரிக்காவின் ஜனாதிபதிப்பதவி இவை இரண்டையும் இப்போது வகிப்பவர் தபோ ம்பெகி. இவர் குறித்து ஒரு பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. நெல்சன் மண்டலா ஒரு மூத்த அரசியல் தலைவராகவும், தென்னாபிரிக்காவின் அனைத்து இன மக்களுக்குமிடையிலான ஒரு இணைப்பாளராகவும் நோக்கப்பட்டார். அதனால் இவரது ஆட்சியின் குறைகள்கூட மௌனமாக அனுமதிக்கப்பட்டன. ஆட்சி குறித்த எதிர்விமர்சனங்கள்கூட மதிப்பிழந்து போயின அல்லது மௌனித்துப் போயின. ஆனால் தபோ ம்பெகி தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக மட்டுமே நோக்கப்படப்போகிறார். இவரது ஆட்சிகுறித்த விமர்சனங்கள் தாராளமாகவே வெளிவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வயதும், அனுபவமும் நெல்சன் மண்டலாவிற்கு பெரும் பொறுமையைக் கொடுத்தது. ஆனால் வெள்ளை இனவாதிகளின் பெருத்த ஒடுக்குமுறைகளுக்குள்ளான தபோ ம்பெகியிடம் நியாயமான கோபங்கள் நிறையவே குவிந்துள்ளன. இருப்பினும் ஆபிரிக்க தேசிய காங்கிரசுடனான தபோ ம்பெகியின் அரசியல் அனுபவங்கள் அவரை அமைதிப்படுத்தி செழுமைப்படுத்தி இருக்கும். ஏனெனில் அவரின் வாழ்வின் பெரும்பகுதி ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் இணைந்தது. ANC இல்லாமல் அவர் இல்லை. அவரது பெற்றோர்கள்கூட ஆபிரிக்க தேசிய காங்கிரசிற்கும், தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பங்களிப்புச் செய்தவர்கள்.

கடந்த பல தசாப்தங்களாக ஆபிரிக்க தேசிய காங்கிரசின் சர்வதேச முகத்தின் பிரதிபலிப்பாகத் தான் தபோ ம்பெகி இருக்கிறார். இருப்பினும் இம்முறை தேர்தல்முடிவுகள் புதிதாக ஒரு கேள்விக்குறியைத் தோற்றுவித்துள்ளது. தேர்தலில் ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்குக் கிட்டியுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்யும் தகுதியை ANCக்கு வழங்கியுள்ளது. பல கட்சி ஜனநாயகம் நடைமுறையில் உள்ள ஒரு தேசத்தில் ஒரு கட்சிக்கு இத்தகைய மிகையான ஆதரவு கிடைப்பது எந்தவகையிலுமே ஆரோக்கியமானதல்ல. அடுத்து எதிர்க்கட்சிகள் பலவீனமாகிக் கொண்டு போவது ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்த ஒரு கேள்விக்குறி. இது தவிர வெள்ளைஇன மக்கள் தொடர்ந்து ANCயை நிராகரிப்பது ஆபத்தான திசையொன்றை நோக்கி ANCயைத் தள்ளும் அபாயம் ஒன்றும் எழுந்துள்ளது. அந்த ஆபத்தான திசை என்னவென்றால் அரசியல் சட்டத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் திருத்தத்தை மேற்கொண்டு ஒரு கட்சி ஆட்சியைப் பிரகடனப்படுத்தி, தபோ ம்பெகி ஆயுட்கால ஜனாதிபதியாக பதவியைத் தொடரும் நிலை. இதனைத்தான் ஸிம்பாவேயில் றேபேட் முகாபே செய்தார். இந்நிலை தோற்றுவிக்கப்பட்டால் அது மிகவும் ஆபத்தானது. ஒரு கட்சிச் சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்துக்கு கிடைக்கும் படுதோல்வியாகும். ஆனால் இத்தகைய நிகழ்வுகள் நடக்காது என நம்புவோம்.

தபோ ம்பெகியின் முன் பெரும்பணிகள் காத்திருக்கின்றன. ஜனநாயகரீதியான தேர்தல்களில் பெரும்பான்மை மக்கள் பங்கு கொண்டிருந்தாலும் இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு ஜனநாயகத்தின் பலன்களை அனுபவிக்கும் வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை. அதற்கான வாசல்களைத் திறந்து விடும் பொறுப்பினை தபோ ம்பெகியிடம் இம்மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். மிருகங்களாக ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை, கறுப்பு இன மக்களுக்கும், விசேடமாக பெண்களுக்குமான உரிமைகளை வழங்குவதை அரசின் பல வகை சக்திகளையும் மக்களுக்கான சேவைகளாக விஸ்தரிப்பதை, சிவில் சேவைகளை குறிப்பாக கல்விச்சேவையை விஸ்தரிப்பதை, வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதை தபோ ம்பெகியின் அரசு முன்னுரிமைப் பணிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இதன்மூலமே சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். இதன் வழியிலேயே சர்வதேச முதலீடுகளை அதிகரித்து வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி மக்களின் தன்னம்பிக்கையை அதிகரித்து நாட்டின் குற்றச் செயல்களைக் குறைக்கமுடியும்.

ஏனென்றால் ஏழைகளுக்குள் ஏழைகளான தென்னாபிரிக்க மக்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரசிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் தபோ ம்பெகி குறித்த ஆய்வுக் கட்டுரையான 'HIS TIME HAS COME'இல் குறிப்பிட்டதுபோல 'ஏழைகள் கிளர்ந்தெழுந்தால் எங்கள் எல்லோருக்கும் எதிராகவே கிளர்ந்தெழுவார்கள்'. இந்த நிலை தென்னாபிரிக்காவில் வராது என நம்புவோம். ஜனநாயகத்துக்கான புதிய உதாரணம் அங்கு படைக்கப்படட்டும். ■




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'எனக்குள் பெய்யும் மழை' நூலை முன்வைத்து...

அமரந்தா

'எனக்குள் பெய்யும் மழை' என்ற பதினெட்டு ஆசியப் பெண்கவிகளின் கவிதைத்தொகுதியை முதல் முறையாக நான் படிக்க நேர்ந்தபோது இந்திய அரசு கோலாகலமாக சுதந்திரப் பொன்விழாவை கொண்டாடிக் கொண்டிருந்தது. ஒரு வருடகாலம் நீடித்த இந்தக் கொண்டாட்டங்கள் பற்றிய செய்திகளோடு கூடவே வேறு சில செய்திகளும் வந்தவண்ணமிருந்தன:




1. முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு நாடெங்கிலும் - குறிப்பாக வடக்கே ராஜஸ்தான், பீஹார் மாநிலங்களிலும், தெற்கே தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பயங்கரமான அளவுகளை எட்டிவிட்டது. ஆந்திராவில் பெண்கள் ஆடு, மாடுகளைப் போல சந்தையில் விற்கப்படுகிறார்கள்.

2. பீஹார், தமிழ்நாடு மாநிலங்களில் மதக் கலவரங்களாலும் ஜாதிக் கலவரங்களாலும் நூற்றுக் கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

3. பீஹாரிலும் தமிழ்நாட்டிலும் தலித் மக்களுக்கு எதிரான வன்முறைகளும் படுகொலைகளும் அதிர்ச்சி தரும் வேகத்தில் நிகழ்ந்து வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் அதிக பட்ச எல்லைகளை மானுடம் எட்டிவிட்ட இன்றைய நிலையில், மத உணர்வும், ஜாதிவெறியும், நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளும் வர்க்கங்களிடையே அகன்று வரும் பொருளாதார இடைவெளியும் சற்றும் மாறாதபோதும், உலகமயமாக்கலுக்கு நாடு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்நிய முதலீடுகளும் தனியார்மயமாக்கலும் மனித உழைப்பை செல்லாக்காசாக்கி முடக்கிவிட்டன. பெரும்பான்மை மக்கள் வறுமையின் பிடியில் நெருக்கப்பட்டு திணறிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தந்தைவழிச் சமூகத்தில் அதிகமான நெருக்கடிக்கும், சுரண்டலுக்கும் உள்ளாவது பெண்ணினம். ஏகாதிபத்தியத்தின் முகவர்களாகவும், தரகர்களாகவும் மாறிவிட்ட அரசியல்வாதிகளுக்கும் முதலாளிகளுக்கும்தான் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பயன்படுகின்றனவேயன்றி, உழைக்கும் பெரும்பான்மையினருக்கும் இந்த வளர்ச்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. சுரண்டிக்கொழுப்பதையே அடிப்படையாகக்கொண்ட உற்பத்திமுறையில், பெண்ணின் நிலை மேலும் க்ஷீணித்து விட்டது.

முன்னேறிய மேற்கத்திய நாடுகளின் பெண்ணியவாதிகள் பெண்களை 'அதிகாரப்படுத்துதல்' என்பதைத் தங்கள் போராட்ட வாசகமாக அறிவித்துக் கொண்டிருக்கையில், மூன்றாமுலக அல்லது அணிசேரா நாடுகளில் அடிப்படை உரிமைக்காகப் போராடிவரும் பெண்களின் கூக்குரலோ, உயிர் வாழும் உரிமையைக் கோருவதாக இருக்கிறது. அச்சமும் அவலமும் நிரம்பிய சூழல் நம்பிக்கைகளை நீய்க்க, எதிர்காலம் கேள்விக்குறியாகவும் அதே சமயம் பெரும் போராட்டத்துக்கான தயாரிப்பைக் கோருவதாகவும் இருக்கிறது. அண்டைநாடுகளான பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லமுடியாத நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்பதால் நோயுற்ற பெண்கள் மருத்துவ வசதி பெறாமல் இறக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

பிற்போக்கான முதலாளித்துவ பத்திரிகைகள் தொடர்ந்து வெவ்வேறு நபர்களின் கண்ணோட்டத்தில் சடங்குத்தனமாக பெண்களின் பிரச்சினைகளை அலசுகின்றன. இவை இரண்டு வகையாக இருக்கின்றன. முதலாவது அதிகாரவர்க்கப் பெண்கள் அமைப்புகளில் பெண்களின் செயல்பாடுகள், சாதனைகள், எதிர்காலத்துக்கான பங்களிப்புகள் என வெறும் தகவல்/புள்ளி விபர அறிக்கைகளை வெளியிடுவது. இரண்டாவது பெண்களின் சமூகநிலை, பிரச்சினைகள் -அவர்களுக்கெதிரான சக்திகள் -அவற்றின் திட்டங்கள், செயல்முறைகள், வெற்றிகள் என்ற அடிப்படையில் கீழ்கண்டவற்றை வலியுறுத்துகின்றன.

1. கல்வி, தொழில், வியாபாரம் போன்ற துறைகளில் வசதியும் முயற்சியும் இருந்தால் பெண்கள் தேர்ச்சிபெற வழியுண்டு.

2. புறவாழ்க்கைச் செயற்பாடுகளில் வெற்றி பெற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றாலும்கூட, குடும்ப வாழ்வில் உணர்வுபூர்வமான அங்கீகாரம் ஆணால் பெண்ணுக்கு'வழங்கப்' பட்டால்தான் உண்டு.

**3.** திருமணம் செய்து குடும்ப அமைப்பினுள் நுழையும் பெண், அக்கணம் முதல் தன்னையும் கணவனையும் குழந்தைகளையும் சுற்றத்தாரை யும் உள்ளடக்கிய குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் குறைவற பூர்த்தி செய்வதற் கான முழுமையான உழைப்பைத் தந்தானபின், மேலதிகமான உத்வேகமும் உழைக்கும் திறனும் பெற்றிருந்தால் மட்டுமே தனது சுய விசாரங்களில் ஈடுபடவேண்டும்.

**4.** அரசியல், மதம், பொருளாதாரம், சட்டம், கலாச்சாரம் ஆகிய அனைத்து நிறுவனங்களும் ஆண்களின் கையில் இருப்பதால் பெண் ஆணுக் குக் கீழ்ப்படிதல் உள்ளவளாகவே இருக்க வேண்டும்.

**5.** பெண்ணின் உடல்கூட அவளுக்குச் சொந்த மானதல்ல - அது ஆணின் அதிகாரப் பிரதேசம். உயிர் இருக்கிறதோ இல்லையோ கட்டாயம் பெண்ணுக்கு பால் ஒழுக்கம் இருக்கவேண்டும். பெண்ணை இழிவு செய்ய, பயமுறுத்தி வீழ்த்த, செயலற்றுப் போகச்செய்ய அவளது யோனியைக் குறி வைத்தாலே போதுமானது. இதற்கு அதிகா ரத்தின் அனைத்துக் கருவிகளின் பூரண ஒத்து ழைப்பு உண்டு.

இந்த அடிப்படையில்தான் சமூகத்துக்கும் பெண் ணுக்குமான உறவு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. மக் கள் தொகையில் ஆணுக்குச் சமமென்றாலும் சமூக உற்பத்தியில் பெண்ணின் உழைப்பு ஆணினுடைய தைவிட அதிகமென்றாலும், குடும்ப பராமரிப்பு, வீட்டு வேலைகள், பிள்ளை பெறுதல், குழந்தைகளை வளர்த்தல் என்பவற்றில் பெண்ணின் உழைப்புக்கு அங்கீகாரமோ மதிப்போ இல்லை. திருமணம் என்பதே ஆணின் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி, சுக வாழ்வுக்குத் தேவையான அனைத்து வேலைக ளையும் சம்பளம் பெறாமல் செய்யும் ஒரு பெண்ணை அவனுடன் சேர்த்து வைக்கும் ஒரு சடங்காக மாறிப் போய்விட்டது. இந்தியாவில் மட்டுமன்றி எல்லா மூன் றாமுலக நாடுகளையும் பொறுத்தவரை பெண்களின் உரிமைகள் எனப்படுபவை காகிதங்களிலேயே காலாவதியாகிவிட்டன. அரசியலமைப்புச் சட்டங்க ளும் மதங்களும் தம் பங்கைச் செலுத்தி இந்த நிகழ்வை எளிதாக்கவும் விரைவாக்கவும் உதவின. ஆக சமூகத்தில், பணியிடத்தில், குடும்பத்தில் என பெண்ணை ஒடுக்குவதற்கான அனைத்துத் திட்டங் களும் முறையாக நடைபெறுகின்றன.

பன்வாரிதேவிக்கும், தப்புபாய்க்கும், கல்பனா சும திக்கும் பத்மினிக்கும் சித்ராவுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளையும், அவர்களுக்கு நியாயம் கிடைக் கச் செய்வதான பாவனையில் நடக்கும் கேலிக்கூத் துகளையும் நாம் கவனித்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமைகளை ஆராயும்போது ஒரு கேள்வி பூதாகரமாக எழுகிறது. பெரியாரின் குரலுக்கு மதிப்ப ளித்து அன்று வீடுகளைத் துறந்து வெளியே வந்த பெண்களும், பிற்பாடு சுதந்திரப் போராட்டம் தீவிரம டைந்தபோது காந்தியின் அழைப்பை ஏற்று வீதிக்கு வந்த பெண்களும் என்னவானார்கள்? ஏன் இப் பெண் கள் சுதந்திரத்துக்குப் பின் பெண்ணுரிமை காக்கவும், போராட்டத்தை உயிருடன் வைத்திருக்கவும் இயக்க மாக அணிதிரளவில்லை? ஐம்பது ஆண்டுகளில் இரண்டு நூற்றாண்டுகளின் பின்னடைவையல்லவா இது ஏற்படுத்திவிட்டது? விடை தெரியாத இந்தக் கேள்விகளுக்கு வரலாற்றிலிருந்து பதிலைத் தேடி யாக வேண்டும். அதற்கான ஆதாரங்களை பெண்க ளின் கூட்டுப் பிரக்ஞையிலிருந்து நாம் உருவாக்க வேண்டும். பிரக்ஞை வெளிப்பாடான வாய்மொழிக் கதைகள்/பாடல்களிலிருந்தும், எழுத்திலிருந்தும் சேகரம் செய்தாக வேண்டும். ஆண்மை-பெண்மை என்ற இரண்டே வகைகளில் ஒட்டுமொத்த மனித உணர்வுகளை வகை பிரித்து, தந்தைவழிச் சமூகத் தினை தக்கவைக்க உறுதி பூண்ட ஆணாதிக்க சதியை முறியடிக்கவேண்டும். ஆண்மை-பெண்மை என்ற சொற்களின் பொருள் உண்மையில் ஆண்டான்-அடிமை என்பதால் அவற்றைப் புறக்கணிக்க வேண் டும்.

உடற்கூறின் தன்மைகளை வைத்தே பெண் வலிமையற்றவளாகவும் அடக்கியாளப்படக்கூடியவ ளாகவும் சித்தரிக்கப் படுகின்றாள். ஒரு ஆணின் வாழ்க்கைவட்ட நிகழ்வுகள் யாவும் அவன் பெருமை கொள்ளவும் தன்னம்பிக்கை கொள்ளவுமான காரணி களாக இருக்கும்போது, பெண்ணின் வாழ்க்கைவட்ட நிகழ்வுகள் யாவும் வலியும் வேதனையும், அவதியும் ரத்தமும் சதையுமாக அமைந்திருப்பது அவள் தாழ் வுணர்ச்சியும் வெட்கமும் கொள்ளத்தக்கனவாக ஆக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் மறு உற்பத்தி என்ற சிறப்புச் செயல்பாடுடைய பெண்ணுடல் கூடுதல் மதிப்பைப் பெறாமல் ஒடுக்கப்படுவதற்கான சாத்தி யம் உருவாகிவிட்டது.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களின் ஒடுக்குமுறை வர்க்கம், பால், இன, நிற அடிப்படைக ளைக் கொண்டிருக்க, உயர்வர்க்கப் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைந்திருந்தாலும் பால் அடிப்படையில் ஒடுக்கப்படுபவர்களே. அடிப்படைத் தேவைகளுக்கு மேல் ஆடம்பர வாழ்க்கைமுறையும் கைகூடினாலும், சிந்தனையில் விடுதலையுணர்வு அடைந்துவிட்டதாக சொல்வதற்கில்லை. தேவை கள் நிறைவேறியதுடன், உளவியல்ரீதியில் ஆணு க்கு கீழ்ப்படிதல் உள்ளவளாக இருக்கவேண்டியது அவர்களுக்கும் மறைமுகமாக ஆனால் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டே வந்திருக்கிறது. செல்வந்தர்க ளாக இருந்தாலும், அதிகாரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும், தமது தனித்திறமைகள் காரணமாக சமூகத்தில் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தா லும் உரிமைப் பிரச்சினையில் நியாயமின்றி அடித்து வீழ்த்தப்படுவது பெண்தான். பெண்ணின் உரிமை களை அங்கீகரித்தல் என்பது எழுத்திலும் பேச்சிலும் மட்டும்தான் சாத்தியப்பட்டிருக்கிறது. பல நூற்றாண் டுகால ஆதிக்க மனோபாவம் ஆணின் பிரக்ஞையை விட்டு விலகவேண்டுமானால் அதற்கு தீவிரமான அறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வுபூர்வமான பயிற்சி தேவை. அசந்தால் முண்டியடித்து மேலெழும்பக்கூடிய உயர்வு மனப்பான்மையை இனம் கண்டு இழுத்துப் பிடிக்கும் விழிப்புத் தேவை. முழுமையாக தீர்மானமாக பெண்ணை சமமானவளாக அறிவுபூர்வமாக உணர்ந்தாலன்றி உணர்வுநிலையில் எந்த மாற்றமும் சாத்தியமாவதற்கில்லை. உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆனால் கல்வியினாலும் பதவியினாலும் இன்று உயர்மட்டக் குடும்பங்களைச் சேர்ந்திருக்கும் பெண்களின் கவிதைத்தொகுப்பாகிய 'எனக்குள் பெய்யும் மழை' இதைத்தான் உணர்த்துகிறது.

**"நீ உன் மைத்துனரிடமிருந்து**
**விலகியிருப்பாயானால் ....**
**நீ முதலில் குளிப்பவளாக் கடைசியில்**
**உண்பவளாக இருப்பாயானால்...**
**எல்லோருக்கும் பால்சோறு போட்டு**
**நீ மட்டும் வெறும்சோறு உண்பாயானால்....**
**நீ ஒரு நல்ல பெண் எனலாம்...."**

இது ஒரு வங்காளப்பெண் பாடிய நாட்டுப்புறப் பாடலின் வரிகள். சங்ககாலத்துக்குப் பிந்தைய பெண்களின் எழுத்துக்களில் பெண்களின் நிலை இத்தகைய நாட்டுப்புறப்பாடல்களில் அசலாகப் பதிவாகியுள்ளது. உள்ளதை உள்ளபடி சொல்லும் வலிமை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இருப்பதை இன்றும் நாம் பார்க்கலாம்.

**"வேதங்கள் முழங்குகின்றன**
**புராணங்கள் பறைசாற்றுகின்றன**
**பெண்ணுக்கு எந்த நன்மையும் விளையாது**
**அவர்கள் முட்டாள்கள் மயக்குபவர்கள்**
**வெறுக்கப்படவேண்டியவர்கள்.**
**பெண்ணுடன் எத்தகைய தொடர்பு**
**கொண்டாலும் பேரழிவுக்கே இட்டுச் செல்லும்**
**ஒரு பெண்ணுடல் இவ்வளவு தீமையானது**
**என்னும்போது இவ்வுலகில் நான் ஞானத்தை**
**எவ்வாறு அடைவது?"**

மராத்திக் கவிஞர் பஹீனாபாயின் கவிதை இது. உடற்கூறை முன்வைத்து பணிவு, தாழ்வுணர்ச்சி, துயரம், சுய புறக்கணிப்பு போன்ற உணர்வுகளுக்கு ஆட்படவேண்டிய நிர்ப்பந்தத்தை சொல்லும் இவர்களின் கவிதைகளுக்கும், முத்துப்பழனியின் கவிதைகளுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்?

**"என்னைப்போன்ற பெண்களில் வேறு யார்**
**கல்வியார்களை பரிசும் பணமும் தந்து**
**கௌரவித்துள்ளனர்?**
**என்னைப்போன்ற பெண்களில் வேறு யாருக்கு**
**காப்பியங்கள் /புராண கவிதைகள்**
**அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன.**
**என்னைப்போன்ற வேறெந்தப்பெண்**
**ஒவ்வொரு கலையிலும் இவ்வளவு தேர்ச்சி**
**பெற்றிருக்கிறாள்?**
**உன்போன்ற பெண்களில் முத்துப்பழனி -**
**நீ தன்னிகரில்லாதவள்"**

முத்துப்பழனி எழுதிய 'ராதிகா சந்த்லானாம்' என்ற காப்பியத்தின்மீது எழுந்த சர்ச்சைகளும் வழக்குகளும், அவற்றையெல்லாம் மீறி அப்புராணம் அச்சேறிய கதையும் ஆதாரங்களுடன் 'விமன் ரைட்டிங் இன் இண்டியா - தொகுதி 1' இல் (சுசீ தாரு & லலிதா - ஆக்ஸ்பார்டு யுனிவர்ஸிடி பிரஸ்) விளக்கப்பட்டிருக்கின்றன. 'ராதிகா சந்த்லானாம்' (ராதிகாவை சாந்தப்படுத்துதல்) என்ற காப்பியத்தின் முன்னுரை மேலே குறிப்பிட்ட வரிகளுடன் தொடங்குகிறது. சுவடிகளில் எழுதப்பட்டிருந்ததை பதிப்பித்து பரவலாகத் தெரியச் செய்தவர் பெங்களூர் நாகரத்தினம்மாள். ஆனால் 'ராதிகா சந்த்லானாம்' ஒரு பெண்ணின் விரக தாபத்தையும் புணர்ச்சியின்பத்தையும் பற்றிப் பேசுவதால் அது ஆபாசமானது, கீழ்த்தரமானது என்று கூறி பிரிட்டிஷ் அரசாங்கம் புத்தகத்துக்குத் தடைவிதித்தது. ஆனால் பெங்களூர் நாகரத்தினம்மாள் சளைக்காமல் தொடர்ந்து வழக்காட இறுதியில் புத்தகத்தின்மீதான தடை விலகியது 1910இல். 1887, 1911, கடைசியாக 1952 ஆகிய வருடங்களில் 'ராதிகா சந்த்லானாம்' பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

புத்தகத்தின் பதிப்பு உரிமையை நிலைநாட்டிய எண்டமூரி சத்யநாராயணராவ் தனது தீர்ப்பில், "இந்தக் காப்பியம் சிறப்பாக உருவாக்கப்பட்ட, நவரசங்களும் முழுமையாக நிறைந்த கவிதைகளைக் கொண்டது. பெண்களைப்பற்றிய நமது இன்றைய பார்வையைக்கொண்டு பார்ப்போமானால், அவை தரக்குறைவாகவும் ரஸமற்றவையாகவும் தோன்றலாம். அது நம் கலாச்சாரத்தின் போதாமைதானேயொழிய, காப்பியத்துடையதோ கவிஞருடையதோ அல்ல" என்று கூறினார். ஆனால், தேவதாசியாக இருந்த ஒரே காரணத்துக்காக முத்துப்பழனியின் காப்பியம் உரிய கௌரவத்தைப் பெற்றுவிடலாகாது என்பதில் குறியாக இருந்த வெங்கடநரசு புத்தகம் தடைசெய்யப்படுவதை ஆதரித்தார். அது இயலாமல் போனபோது, முத்துப்பழனி எழுதிய முன்னுரையை புத்தகத்திலிருந்து நீக்கினார். அதில் தனது பாட்டி சித்தி ஆகியோர் வழியில் தான் கவிஞரானதையும் அரசவையில் தனது செல்வாக்கையும் கர்வத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் முத்துப்பழனி.

பெண்ணின் மனவுணர்வுகளை பெண்ணின் நிலையில் நின்று பதிவுசெய்த எழுத்து இன்றல்ல - என்றுமே நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதைத்தான் முத்துப்பழனியின் காப்பியம் பதிப்பிக்கப்பட்ட வரலாறு நமக்குச் சொல்கிறது. இத்தகைய நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க மேலும் மேலும் பீறிட்டு எழுந்து வந்த குரல்களை நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். பெண்ணுக்கு மனமும் சிந்திக்கும் திறனும் இருப்பதை அங்கீகரிக்கமுடியாத ஆணாதிக்க சமூகத்தை சங்கடத்துக்கும் பயத்துக்கும் ஆளாக்கும் விதத்தில் அழுத்தமான பெண்குரல்கள் பதிவுபெற்று வருகின்றன. கமலாதாஸ் ஒரு கவிதையில் குறிப்பிட்டுள்ளபடி "ஒரு ஆணுக்குத் தேவை பெண். ஆனால் எல்லாப் பெண்களுக்கும் தேவையானது அன்பு."

இன்று தமிழில் கவிதை எழுதும் பெண்களின் எண்ணிக்கை கூடியிருப்பது மகிழ்ச்சியான ஒன்று. ரிஷி, இளம்பிறை, செல்வி, சிவரமணி, சுகந்தி ஆகியோரின் ஒரு சில கவிதைகள் தமிழ்க்கவிதையின் தரத்துக்கு சான்றுகளாக இருக்கின்றன. தாயாகவும் தெய்வமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இலங்கையில் உள்ள பெண்களின் பிரச்சினைகளுக்கு சிங்கள/தமிழ்/முஸ்லிம் பெண்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து இலங்கைப் பெண்களாகக் குரல் கொடுப்பது அவசியம்.** -ருவாந்தி

கூறினார்.

ஆண்குழந்தை, பெண்குழந்தை பராமரிப்பில் இன்றும் வேறுபாடுகள் நிலவுவதாகவும், ஒவ்வொரு பெண்ணும் சிறுவயது முதல் வயது முதிர்ந்த காலம்வரை எவ்வாறு இன்னும் கிராமப்புறங்களில் அடக்கி வைக்கப்படுகின்றார்கள் என்றும், ஆண்களினால் அடக்கி வைக்கப்பட்டிருப்பதை விதி என்று நினைத்து வாழும் பெண்கள் தான் அங்கு இருக்கின்றார்கள் என்றும், நகர்ப்புறங்களில் இருக்கும் பெண்களிற்கு பிரச்சினைகள் இதைப்போல இதே வடிவங்களில் இல்லை என்றும், பிரச்சினைகள் குறைவாகத்தான் இருக்கின்றன என்றும் கருத்துத் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் இருக்கும் பெண்கள், ஆண்கள் தங்களைப்பற்றி வைத்திருக்கும் மதிப்பீடுகள் குறையாமல் இருப்பதற்கு அந்த ஆண்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்டுப் பணிந்து நடப்பதுதான் நல்ல பெண்களுக்கு அழகு என்று இன்னும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, திருமணமானவுடன் பெண்களின் கன்னித்தன்மை(?)யை பரிசோதித்தல் - அதாவது கணவனுடனான முதல் உடல் உறவின்போது உதிரம் வெளிவருகின்றதா என்று கண்காணித்து அப்பெண்ணின் நடத்தைபற்றித் தீர்மானித்தல் - இன்னும் கிராமங்களில் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அந்த இரவுக்காகத் தங்களைப் 'புனித'ப் பெண்ணாகக் காட்டுவதுதான் தங்கள் வாழ்க்கையின் ஒரே நோக்கு என்று அவர்கள் மிகமிகக் கவனமாகத் தங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையில் இருக்கின்றார்கள்.

பெண்கள் நடனம், விளையாட்டு போன்றவற்றில் பங்குகொள்பவர்களாக இருந்தால் இந்தப் பரிசோதனையில் அவர்களுக்கு எதிர்மறை விளைவுதான் கிடைக்கும். அப்படிப்பட்ட பெண்கள் நன்நடத்தையற்றவர்கள் என்பதுதான் தீர்மானமாகின்றது.

பெண்கள் எவ்வளவுதான் உயர்கல்வி கற்றாலும் உயர்ந்த பதவிகளுக்கான போட்டி என்று வரும்பொழுது அவை ஆண்களுக்கானதாகத்தான் எப்பொழுதும் இருக்கின்றன.

பெண்களிற்கான அமைப்புகள் என்று இருப்பவை எல்லாம் நகர்ப்புறம் சார்ந்ததாகத்தான் உள்ளன. அவற்றின் வேலைத்திட்டங்களும் நகர்ப்புறப்பெண்களை நோக்கியதாகவே அமைகின்றன. அவர்கள் பேசும் விடயங்கள் எதுவும் கிராமப்புறங்களைச் சென்றடைவதில்லை. அத்துடன் இப்படியான விடயங்கள் கிராமத்தை நோக்கிச் செல்லும்போது அவைபற்றிப் பேசும் மொழிகூட மாற்றப்படவேண்டும் - அதாவது கிராமத்தில் உள்ள பெண்கள் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில்.

இவற்றிற்கான முயற்சிகள் எதுவும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் பெண்கள் அமைப்புகளிடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இன்னும் ஒரு முக்கியமான விடயம். பெண்களிற்கான பிரச்சினைகள் எனும்போது இலங்கையில் உள்ள அனைத்துப் பெண்களின் பிரச்சினைகளையும் ஒன்றாகத்தான் பார்க்கவேண்டும். யுத்தசூழலில் தமிழ்ப்பெண்கள் பாதிக்கப்படுவதுபோல்தான் சிங்களப் பெண்களுக்கோ முஸ்லிம் பெண்களுக்கோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிங்களப் பெண்களும் தங்கள் கணவனமார்களை இழக்கிறார்கள், தங்கள் மகன்களை இழக்கிறார்கள். பெண்களின் பாதுகாப்பு எனும்பொழுது சிங்களப் பெண்களுக்கும்தான் பாதுகாப்பு இல்லை.

மேலும் வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தம்பற்றிய அரசு தரப்பு செய்திகள் மட்டுமே எங்களுக்குக் கிடைக்கின்றன. அவற்றை எவ்வளவு தூரம் நம்புவது என்பது கேள்விக்குறிதான்.

இன்னும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெண்கள், சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண்கள் எல்லோருமே பாலியல் சேஷ்டைகளுக்கும் பாலியல் பலாத்காரங்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். இது குறித்து எந்தப் பெண்கள் அமைப்புகளும் கேள்வி எழுப்புவதாகத் தெரியவில்லை.

அவரின் உரையில் இறுதியாக, பெண்களின் விடயம் என்று வரும்பொழுது சிங்கள/தமிழ்/முஸ்லிம் பெண்கள் அனைவரும் இலங்கைப் பெண்கள் என்ற வகையில் சேர்ந்து குரல் கொடுப்பதன்மூலம்தான் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறமுடியும் என்று கருத்துத் தெரிவித்தார்.

அதன்பின் மதிய இடைவேளையைத் தொடர்ந்து, ஜெயந்தி அவர்கள் **புகலிடத் தொடர்பு சாதனங்களில் பெண்கள்** என்னும் தலைப்பில் தனது கருத்துக்களை முன்வைத்தார். ஜெயந்தி முன்பு இலங்கையில் **ரூபவாஹினி**யில் அறிவிப்பாளராகப் பணிபுரிந்தவர். இப்போதும் இங்குள்ள தமிழ் ஒலி **(TRT)** வானொலியில் பகுதிநேரமாகப் பணிபுரிகிறார்.

இவர் தொடர்பு சாதனங்களாகப் பத்திரிகைகளையும் வானொலிகளையும்தான் முதன்மையாகக் கொண்டு தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

வானொலி மிகவும் கவர்ச்சிகரமானதும் இலகுவில் சென்றடையக்கூடியதுமான ஊடகமாகும். இன்று ஐரோப்பாவில் தமிழ்ஒலி, IBC, TBC என்று 3 வருடங்களில் மூன்று 24மணி நேர வானொலிகள் தமிழில் இயங்கிக்கொண்டிருப்பது மகிழ்ச்சிகரமான விடயம்தான். ஆனால் இவ்வானொலிகள் ஒவ்வொன்றிலும் பெண்கள் தொடர்பான நிகழ்ச்சிகளிற்கு வாரத்திற்கு இரண்டரை அல்லது மூன்றரை மணித்தியாலங்களே ஒதுக்கப்படுகின்றன.

மங்கையர் மஞ்சரி, பெண்ணின் குரல், புதியதோர் உலகம், முகிழ்ப்பு என்னும் பெண்களின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நிகழ்ச்சிகளை நடத்தும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். பெண்களின் பிரச்சினைகளை என்று வரும்போது இவர்களிடம் நபர் சார்ந்து நோக்குகின்ற போக்குத்தான் மேலோங்கி இருக்கிறதே அன்றி சொல்லப்படும் கருத்துக் குறித்து அவர்கள் கரிசனை கொள்வதில்லை. தொலைபேசி நிகழ்ச்சிகள் மிகவும் மோசமான முறையில் நடத்தப்படுகின்றன. நபர்களை ஏற்கனவே தயார்ப்படுத்தி நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச் செய்தல், தொலைபேசி மிரட்டல்கள் என்று நிகழ்ச்சிகள் வன்முறையை நோக்கித்தான் போகின்றன அன்றி ஒரு விடயத்தை ஆரோக்கியமாகக் கொண்டு செல்லவேண்டும் என்ற நோக்கமற்று எப்படிச் சுவாரசியமாக்குவது என்பதில்தான் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் கவனம் கூடுதலாகக் குவிக்கப்படுகிறது.



**பெண்களிற்கு என்று தனியாக பத்திரிகையில் ஒதுக்கப்படும் பக்கமோ அல்லது வானொலியில் ஒதுக்கும் நிகழ்ச்சியோ பெண்களிற்கு எதிரான கருத்துக்களைத்தான் பெரும் பான்மையான நேரங்களில் கூறுகின்றன.** - ஜெயந்தி

இப்படியான நடவடிக்கைகளினால் பெண்ணியக் கருத்துகள் பேசுபவர்கள் ஒதுங்கிக் கொள்ளவேண்டிய நிலைதான் ஏற்படுகின்றது. இப்படியான பாதிப்புகளை இல்லாமலாக்க வேண்டும்.

உதாரணத்திற்கு விவாதங்களிற்கு கொடுக்கப்படும் தலைப்புகள்:

1. பெண்கள் டிஸ்கோவிற்குப் போவது சரியா?
2. பெண்கள் புகைப்பது சரியா?
3. பெண்கள் மறுமணம் செய்வது சரியா?

இப்படியான தலையங்கங்களில் 'பெண்கள்' என்பதை எடுத்துவிட்டு விவாதித்தால் என்று அவர்கள் கருதுவதற்கே இடமில்லை. சகல அதிகாரங்களையும் தாங்கள் (ஆண்கள்) வைத்துக்கொண்டு பெண்களைக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள். ஆணாதிக்கக் கருத்துக்களின் பிம்பங்களாக இருக்கும் ஆண்களினால் உருவாக்கப்படும் தலைப்புகளும் பேசப்படும் விடயங்களும் இப்படித்தான் அமையமுடியும்.

இனிப் பத்திரிகைகளை எடுத்தால், ஐரோப்பாவில் இரண்டு பத்திரிகைகள்தான் வெளிவருகின்றன. ஒன்று ஈழநாடு. மற்றையது ஈழமுரசு. இரண்டும் 32 பக்கங்களைக் கொண்டவை. ஈழநாடு முற்று முழுதாக வியாபார நோக்கம் கொண்ட பத்திரிகை. ஈழமுரசு ஒரு கொள்கைக்காக வெளிவருவது. அதுவும் வியாபார நோக்கற்றது என்று கூறமுடியாது. ஈழ நாட்டின் 32பக்கங்களில் ஒருபக்கம்கூட பெண்கள் பக்கம் என்று இல்லை. ஆனால் ஈழமுரசில் 32பக் கங்களில் ஒரு பக்கத்தை பெண்களுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்தப் பக்கத்தில் சிலவேளைகளில் பொதுவான விடயங்களையும் வெளியிடுகிறார்கள். இப்படி வெளியிடும்போது அந்தப் பொதுத் தன்மையான விடயத்தை பெண்களுக்கு மட்டும் தானோ என்று பொருத்திப்பார்க்கும் ஒரு தவறையும் இழைக்கிறார்கள். அதேநேரம் 32பக்கங்களில் ஒதுக்கிய ஒரு பக்கத்தையும் திரும்பவும் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.

சிலவேளைகளில் பெண்கள் பக்கம் என்று சொல்லிப் பொதுவிடயங்களைப் போட்டு அதைப் பெண்களுக்கானதேயாக்கி, ஆண்கள் அப்படியல்ல என்று ஒரு விம்பத்தைக் கொடுக்க முனையும் போக்கு காணப்படுகிறது அல்லது பெண்களை இழிவுபடுத்தும் விடயங்களை அந்தப் பக்கத்தில் போட்டு அதை ஒரு நகைச்சுவைப் பத்தியாக்கிவிடுகிறார்கள். அத்துடன் இந்தப்பக்கத்தில் பெண்களைப்பற்றி அவர்களுக்குச் சார்பான நல்ல கருத்துக்களைக் கூறுவதைவிட அவர்களை இழிவுபடுத்தும் கருத்துக்கள் தான் அதிகமாக வருகின்றன.

இவற்றிற்கு பல உதாரணங்களைக் கூறலாம்.

பத்திரிகைத் துறையில் அல்லது வெகுஜன ஊடகங்களிற்கான துறையில் பெண்கள் பொறுப்பான பதவியில் இருப்பது அருமை. இங்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள மேற்குறிப்பிட்ட வானொலிகளையோ பத்திரிகைகளையோ எடுத்தால் அங்கு அவை அனைத்தும் ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்குகின்றன. பெண்களின் விடயங்களை வெளிக் கொணருவதற்குத் தடையாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது என்று கொள்ளலாம்.

இவ்வாறு கூறி, அதன் பின் கலந்துரையாடலுக்கான தளத்தைக் கொடுத்தார். நிறைய உதாரணங்களுடன் பலரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அடுத்த நிகழ்வாக **புது உலகம் எமை நோக்கி** என்ற சிறுகதைத் தொகுப்பின் வெளியீடும் விமர்சனமும் நடைபெற்றது. இத் தொகுப்பு, புகலிடத்தில் வெளிவந்த சஞ்சிகைகள், இலக்கியத் தொகுப்புகளில் (தூண்டில், தேனீ, ஊதா, சக்தி, புலம், எக்ஸில், உயிர்நிழல், இன்னுமொரு காலடி, தோற்றுத்தான் போவோமா...) உள்ள பெண் எழுத்தாளர்களின் தெரிவுசெய்யப்பட்ட சில படைப்புகளை உள்ளடக்குகிறது.

இத்தொகுப்பை **'சக்தி'** தொகுத்திருக்கின்றது. சக்தி பத்துவருடங்களாக நோர்வேயில் இருந்து வெளிவரும் பெண்ணிய சஞ்சிகை. ஆரம்பத்தில் இருந்து இச் சஞ்சிகையின் ஆசிரியைகளில் ஒருவராக இருந்து வருகிறார் தயாநிதி. இவர் ஒரு எழுத்தாளி, கவிஞை, விமர்சகி. அத்துடன் நோர்வேஜிய மொழிபெயர்ப்பாளர். நோர்வேயில் இயங்கிவரும் தமிழ் நாதம் வானொலிநிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் இருக்கிறார்.

“சக்தி சஞ்சிகையின் நோக்கங்களில் ஒன்றான பெண்களின் எழுதும் ஆற்றலை ஊக்குவிக்க வேண்டும் என்னும் அடிப்படையில் சக்தியின் முதலாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆன் பிராங்க்

## 20ம் நூற்றாண்டு மானுடம்: இனவதையின் ஒரு மனத்துளி

தமிழில்: குயிலி



**ஆன் பிராங்க்:** (1929 - 1945)

நாசி ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்ட யூத இனத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருத்தி பேர்கன்-பெல்சன் (Bergen-Belsen) என்னுமிடத்தில் இருந்த யூதக்கைதிகளின் தடுப்புமுகாமில் தனது பதினாறாவது வயதில் மரணத்தைத் தழுவிக்கொண்டாள். தன்னுடைய வாழ்க்கையின் இறுதி இரண்டு வருடங்களை மிகவும் திகிலும் பீதியும் நிறைந்த சூழ்நிலையில் கழித்திருக்கின்றாள். அம்ஸ்ரடாமின் புறாக்கூண்டு அறைகளில் மேலும் ஏழு பேருடன் தலைமறைவாக வாழ்ந்தாள்.

ஜேர்மனிய ஆக்கிரமிப்புப் படைகளின் கைதில் இருந்து தப்புவதற்காக காரியாலயக் கட்டிடமொன்றின் பின்பகுதியில் உள்ள கூடங்களில் (கட்டிடத்துடன் இணைந்தபகுதி ANNEXE) மறைந்திருந்தார்கள். ஆனால் 1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி அவர்களுடைய மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டு ஆன் பிராங்க் அவளுடன் இருந்தவர்களுடன் சேர்த்து ஜேர்மனிக்கு நாடு கடத்தப்படுகின்றாள்.

நாட்குறிப்பேடு:

- ஆன் பிராங்கின் இந்த நாட்குறிப்பேடு நெதர்லாந்தில் அவள் மறைவிடமாக இருந்த இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் நாசிகளின் துன்புறுத்தல்களுக்குள்ளானவர்களின் துயரங்களை மனமுருகக்கூடிய வகையிலும் புத்திநுட்பத்துடனும் இந்த நாட்குறிப்பேடு விபரிக்கின்றது.
- இந்த நாட்குறிப்பேடு, முதன்முதலாக 1947இல் 'Het Acheterhuis' (The Annexe) என்ற பெயரில் ஒல்லாந்தில் வெளியிடப்பட்டது. இது 12.06.1942 தொடக்கம் 01.08.1944 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்குகின்றது.
- டச்சுமொழியில் இருந்து பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நாட்குறிப்பேடு, ஆர்ஜென்ரீனா, பிறேசில், செக்கோஸ்லவாக்கியா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, கிறீஸ், ஐஸ்லாந்து, இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, நோர்வே, போத்துக்கல், ஸ்பெயின், சுவீடன், துருக்கி ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டது. இதனுடைய பிரெஞ்சு மொழிபெயர்ப்பு 1950இல் 'ஆன் பிராங்கின் நாட்குறிப்பு' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டது.
- அமெரிக்கப் பதிப்பில் மட்டும் 5மில்லியன் பிரதிகள் விற்றது.
- பிறமொழிகளில் வெளியிடப்பட்ட இந்த நாட்குறிப்பேட்டின் மொழி பெயர்ப்புகள் தவிர, இதையொட்டி இரண்டு நாடகப் பிரதிகளும் வெளிவந்தன.
- இந்த நாட்குறிப்பேட்டில் ஒருபுறம் நுண்ணறிவு படைத்த அதி புத்திசாலியான ஒரு இளம்பெண்ணையும் மறுபுறம் இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடிய ஒருத்தியையும் காணக்கூடியதாக உள்ளது.
- இவைகளுடன் சேர்த்து, வாழ்வு குறித்த அறிதலும் உணர்வுகளும் மிக நேர்த்தியான முறையில் அதனுடைய நுட்பத்துடன் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

---

**14. 06. 1942**
**ஞாயிற்றுக்கிழமை**

யூன் மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு நான் எழும்பியதில் ஆச்சரியம் எது வுமில்லை; அன்று என்னுடைய பிறந்த நாள். ஆனால் உண்மையில் அந்த நேரத்தில் நான் எழும்புவதற்கு எனக்கு அனுமதியில்லை. எனவே என்னுடைய ஆவலை ஆறேமுக்கால் மணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரையும் அடக்கிவைக்கவேண்டி இருந்தது. அதற்குப்பிறகும் என்னால் பொறுமையாக இருக்கமுடியவில்லை. எழுந்து சாப்பாட்டுக்கூடத்திற்குச் சென்றேன். அங்கு மூர்ட்ஜி (எங்களுடைய பூனை) என்னை மிகவும் அன்பாக வரவேற்றது.

ஏழு மணியானதும் அம்மா, அப்பாவிடம் சென்று அதன்பின் இருக்கை அறைக்குச் சென்றேன். அங்கு பரிசுப்பொருட்கள் எனக்காகக் காத்திருந்தன. நீதான் என்னை முதலில் வாழ்த்தினாய். இருந்த பரிசுப்பொருட்கள் எல்லாவற்றையும்விட நீ நல்லதானதாக இருப்பாய் என்று உள்மனம் சொல்லியது. மேலும் மேசைமீது ஒரு ரோஜா மலர்க் கொத்தும், ஒரு பூமரமும் வேறு சில பொருட்களும் இருந்தன. அன்றைய பகற்பொழுதில் மேலும் சில பரிசுப்பொருட்களும் வந்தன. அம்மாவும் அப்பாவும் நிறையப் பரிசுகள் தந்தார்கள். பல்வேறு நண்பர்களிடமிருந்தும் திறம்பட வெகுமதிகள் கிடைத்தன. கிடைத்த ஏனைய பொருட்களில் ஒரு புகைப்படக் கருவி; ஒரு விளையாட்டுப் பொருள்; நிறைய இனிப்புப் பண்டங்கள்; சொக்கலேட்டுகள்; puzzle (கலைத்து மீண்டும் பொருத்தும்) விளையாட்டு; ஒரு 'புரோச்' (ஆடையின் மீது பொருத்தும் வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு சிறிய ஆபரணம்); ஜோசப் கோகனின் 'நெதர்லாந்தின் கட்டுக் கதைகளும் புராணக்கதைகளும்'; 'டெய்ஸியின் மலைப்பிரதேச விடுமுறை'(திகிலூட்டும் புத்தகம்); கொஞ்சப்பணம் என்பன இருந்தன. 'கிறீஸினதும் ரோமாபுரியினதும் பற்றிய புராணக் கதைகள்' என்னும் அழகான புத்தகத்தை இப்போது என்னால் வாங்குவதற்கு முடியும்.




பிறகு, லைஸ் என்னைப் பாடசாலைக்கு அழைத்துப் போக வந்தான். நாங்கள் இருவரும் பாடசாலைக்குச் சென்றோம். இடைவேளையின்போது அனைவருக்கும் இனிப்புப் பண்டங்கள் பரிமாறினேன். அதன் பிறகு வகுப்புகளுக்குச் சென்றோம். இத்துடன் நான் நிறுத்துகின்றேன். மீண்டும் சந்திப்போம். நாங்கள் இனி நெருங்கிய நண்பர்களாக இருக்கப் போகின்றோம்.

●●●

**15.06.1942**
**திங்கட்கிழமை**

ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் என்னுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. என்னுடைய நண்பர்களுக்கு Rin-Tin-Tin வரும் 'வெளிச்ச வீட்டுக்காவலன்' படம் போட்டுக் காட்டினேன். அவர்கள் அதை நன்கு ரசித்தார்கள். மிகவும் இன்பமான ஒரு பொழுதாகக் கழிந்தது. அங்கு நிறையப் பெண்பிள் ளைகளும் ஆண்பிள்ளைகளும் இருந்தார்கள். நான் யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்பதைத் தெரிந்து கொள்ள எனது அம்மா நெடுக விரும்பினாள். அது



மறைந்திருந்த அறைக்குச் செல்லும் படிக்கட்டும்,
படிக்கட்டின் வாசலை மறைத்து வைத்திருந்த புத்தக அலுமாரியும்

பீற்றர் வெஸ்ஸல் ஆக இருக்கலாமென்று அவள் ஓரளவிற்கு நினைக்கின்றாள். அவளின் அந்த எண்ணத்தை ஒருநாள் நான் வெட்கப்படாமல் எந்தவிதப் பதட்டமும் இன்றி அவளின் மனதில் இருந்து அடியோடு துடைத்து எறிய முடிந்தது. லைஸ் கூசென்சும் சான் ஹூட்மனும் நீண்ட காலமாக எனது மிக நெருங்கிய நண்பர்கள். அதன் பிற்பாடு யூத உயர்நிலைப்பள்ளியில் யொப்பி டீவாலைச் சந்தித்தேன். நாங்கள் அநேகமான நேரங்களில் ஒன்றாக இருப்போம். அவள்தான் இப்போது எனது மிக நெருங்கிய தோழி. லைஸ் இன்னொரு பெண்பிள்ளையுடன் அதிகம் சிநேகிதமாக இருக்கின்றான். சான் வேறொரு பள்ளிக்கூடத்திற்குப் போகின்றாள்; அங்கு அவள் புதிய நண்பர்களைத் தேடிக் கொண்டாள்.

●●●

**20.06.1942**
**சனிக்கிழமை**

நான் சிலநாட்களாக எழுதவில்லை. ஏனெனில் நான் எல்லாவற்றுக்கும் முதலாக என்னுடைய நாட்குறிப்பேட்டைப்பற்றிச் சிந்திக்க விரும்பினேன். என்னைப் போன்ற ஒருத்திக்கு, நாட்குறிப்பேடு ஒன்றை வைத்திருக்க நினைப்பது ஒரு விநோதமான எண்ணம்தான். நான் முன்பு எப்போதுமே அதனைப் பாவிக்கவில்லை என்பது மட்டுமல்ல; நானாகவோ அல்லது வேறு யாராகவோ இருந்தாலென்ன, பதின்மூன்று வயதுப் பள்ளிப்பருவத்துப் பெண்பிள்ளை ஒருத்தி விஷயங்களை மனம் திறந்து பேசுவதில் ஆர்வமுள்ளவளாக இருப்பாளோ என்பதும்தான். அப்படியிருந்தும், அதனாலென்ன இப்போது? நான் எழுதவேண்டும். ஆனால், அதற்கும் மேலாக என்னுடைய இதயத்தில் ஆழப்புதைந்து கிடக்கும் எல்லாவிதமான விஷயங்களையும் வெளிக்கொணர விரும்புகிறேன்.

*"மனிதஉயிரியை விடக் காகிதம் பொறுமையானது"*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று ஒரு பழமொழி இருக்கின்றது. வெளியில் போவோமா அல்லது ஒரு இடமும் போகாமல் வீட்டிலேயே நிற்போமா என்று ஒரு முடிவெடுப்பதற்குக் கூட முடியாத ஒரு மனநிலையில், சலிப்படைந்து சோர்ந்து போயிருந்த நாட்களொன்றின் ஒரு பொழுதில் மேற்சொன்ன கூற்று மீண்டும் என்னிடம் வந்து சேர்ந்தது. ஆம்! எந்தச் சந்தேகமும் இன்றி காகிதம் பொறுமை வாய்ந்ததுதான். தடித்த அட்டையிட்டு உறையிடப்பட்ட இந்தக் குறிப்பேட்டுப் புத்தகத்தை, எனக்கு ஒரு உண்மையான சிநேகிதன் அல்லது சிநேகிதியைக் கண்டுபிடிக்கும் வரைக்கும், யாருக்கும் காட்டும் நோக்கமில்லாததால் - அநேகமாக யாரும் இதைப்பற்றி அக்கறை கொள்ளமாட்டார்கள். நான் இப்போது நாட் குறிப்பேடுபற்றிய மிகவும் அடிப்படையான விஷயத்திற்கு வருகின்றேன். என்னுடைய நாட்குறிப்பேட்டை நான் ஆரம்பிப்பதற்கான காரணம்: எனக்கு மிகநெருக்கமான மனதைத் திறந்து கொட்டக்கூடிய ஒரு உண்மையான சிநேகிதன் அல்லது சிநேகிதி இல்லை என்பது தான். இதை மேலும் விளக்கமாகச் சொன்னால், பதின்மூன்று வயதான பெண்பிள்ளை ஒருத்தி தான் தனிமையாக இருப்பதாக உணர்கிறாள் என்பதையோ அல்லது அப்படியில்லை என்பதையோ இந்த உலகத்தில் எவரும் நம்பப்போவதில்லை என்பதால்தான்.



எனக்கு மிகவும் அன்பான பெற்றோரும், பதினாறு வயதில் ஒரு சகோதரியும் இருக்கின்றார்கள். நண்பர்கள் என்று அழைக்கக்கூடிய ஒரு முப்பது பேரை எனக்குத் தெரியும். என்னுடைய ஒரு கணநேரப் பார்வைக்காக ஏங்கும் அல்லது அது தவறினால் வகுப்பறையின் கண்ணாடிகளுக்குள் என்னை இரகசியமாகப் பார்க்கும் - ஒரு கோர்வை சிநேகிதன்கள் எனக்கு இருக்கிறார்கள். எனக்கு உறவினர்கள், மிகவும் நேசிப்பிற்குரிய மாமன்மார், மாமிமார், ஒரு நல்ல வீடு... இத்தியாதி. எனக்குத் தெரியவில்லை. எனக்கு எதிலும் குறையிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் என்னுடைய எல்லா நண்பர்களுடனும் சும்மா ஒரே பகிடியும் முஸ்பாத்தியும்தான். ஒரு பொது வட்டத்துக்கு வெளியில் எதைப்பற்றியும் அவர்களுடன் பேசுவதற்கு என்னால் எப்போதும் முடியவில்லை. எங்களிற்கிடையில் இன்னும் நெருக்கத்தைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையுமில்லை. எனது நம்பிக்கையின்மைதான் பிரச்சினையின் மூலகாரணமே. ஒருவேளை எனக்கு நம்பிக்கைக் குறைவாக இருக்கலாம். ஆனால் எப்படியும் அது ஒரு முக்கியமான, இறுக்கமான காரணம்தான். ஆனால் அது குறித்து என்னால் எதுவும் செய்யமுடியும் என்றும் தெரியவில்லை. எனவே தான் இந்த நாட்குறிப்பேடு. நான் இவ்வளவு காலமாகக் காத்திருந்த ஒரு சிநேகிதனின் அல்லது சிநேகிதியின் உருவத்தை என்னுடைய மனக் கண்ணில் உருக்கொடுப்பதற்காக - சாதாரணமாக எல்லோரும் செய்வதுபோல் நிகழ்வுகளின் தொடர்ச்சியைப் பதிவுசெய்து வைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால் இந்த நாட்குறிப்பேடு என்னுடைய சிநேகிதியாக/சிநேகிதனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். என்னுடைய சிநேகிதனை/சிநேகிதியை 'கிட்டி' என்று நான் அழைப்பேன்.

எதிர்பாராதவிதமாகச் சும்மா கிட்டிக்குக் கடிதத்தை எழுத ஆரம்பித்தால் யாரும் நான் எதைப்பற்றிப் பேசுகிறேன் என்பதைக் கிரகித்துக்கொள்ள மாட்டார்கள். எனவே எனக்கு உடன்பாடில்லாமல் இருந்தபோதிலும் நான் எனது வாழ்க்கைச் சரிதத்தைச் சுருக்கமாக விவரணமாக்குவதற்கு ஆரம்பிக்கிறேன்.

என்னுடைய அப்பா தனக்கு 36 வயதாக இருந்த பொழுது 25 வயதாயிருந்த எனது அம்மாவைத் திருமணம் செய்தார். என்னுடைய சகோதரி மார்கொட் 1926ம் ஆண்டு பிராங்போட்டில் பிறந்தார். அதைத் தொடர்ந்து நான் 1929ம் ஆண்டு யூன் மாதம் 12ம் திகதி பிறந்தேன். நாங்கள் யூதர்களாக இருந்ததால், 1933இல் ஒல்லாந்துக்குக் குடிபெயர்ந்தோம். அங்கு என்னுடைய அப்பா TRAVIES N.V. என்னும் கம்பெனியில் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அதே கட்டிடத்தில் இருந்த இன்னொரு கம்பெனியில் எனது அப்பாவுக்கும் பங்கிருந்தது. இரண்டு கம்பெனிகளும் நெருங்கிய தொடர்புடையவை.

என்னதானிருந்தாலும், எங்களுடைய குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் ஹிட்லரின் யூத எதிர்ப்புச் சட்டங்களின் முழுத்தாக்கத்தையும் அனுபவித்தார்கள். 1938இல் திட்டமிடப்பட்ட படுகொலைகளின் பின்பு, என்னுடைய இரண்டு மாமாக்களும் (அம்மாவின் சகோதரர்கள்) அமெரிக்காவுக்குத் தப்பியோடினார்கள். என்னுடைய வயதான அம்மம்மா எங்களிடம் வந்தா. அவளுக்கு அப்போது வயது எழுபத்திமூன்று. 1940ம்ஆண்டுடன் எங்களுக்குச் சாதகமாயிருந்த காலங்கள் மறைந்து போயின. முதலில் யுத்தம், பின்பு நிபந்தனையுடன் சரணடைதல், ஜேர்மனியரின் வருகையைத் தொடர்ந்து யூதர்களின் கஷ்டங்களின் உண்மையான ஆரம்பம். யூத எதிர்ப்புக் கட்டளைகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாகத் தொடர்ந்தன. யூதர்கள் கட்டாயமாக ஒரு மஞ்சள் நட்சத்திரம்[1] அணியவேண்டும். ('யூதர்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்தறிவதற்காக - நன்கு தெரியக்கூடியதாக ஆறு முனைகள் கொண்ட ஒரு நட்சத்திரத்தை எல்லா யூதர்களும் அணிவதற்கு ஜேர்மனியர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்) யூதர்கள் சைக்கிளில்தான் பிரயாணம் செய்யவேண்டும். யூதர்கள் மோட்டார் வாகனங்களிலோ புகைவண்டிகளிலோ பிரயாணிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'யூதர்களின் கடை' என்று விளம்பரப்பலகை தொங்கவிடப்பட்டுள்ள கடைகளில் மட்டும் பின்னேரம் மூன்று மணிக்கும் ஐந்து மணிக்கும் இடையில்தான் அவர்கள் தங்களுடைய பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மாலை எட்டு மணிக்கு யூதர்கள் வீடுகளினுள் இருக்கவேண்டும். இந்தக் குறிப்பிட்ட நேரத்துக்குப்பின் தங்களுடைய சொந்த வீட்டு வளவுகளிற்குள் கூட அவர்கள் நடமாட முடியாது. நாடக அரங்குகள், சினிமாக் கொட்டகைகள் இன்னும் ஏனைய கேளிக்கை நிலையங்கள் என்பன யூதர்களிற்குத் தடை செய்யப்பட்ட இடங்களாகும். பொது விளையாட்டுகளில் யூதர்கள் பங்கேற்க முடியாது.

நீச்சல் குளங்கள், ரென்னிஸ் விளையாட்டு மைதானங்கள், ஹாக்கி மைதானங்கள் மேலும் ஏனைய விளையாட்டுத் திடல்கள் எல்லாமே அவர்களிற்கு அனுமதி மறுக்கப்பட்ட இடங்களாகின. கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு யூதர்கள் செல்லமுடியாது. யூதர்கள் கட்டாயம் யூதப் பாடசாலைகளுக்குத்தான் செல்லவேண்டும். இப்படியாக எத்தனையோ தடைகள்.

எனவே எந்த விடயத்தை எடுத்தாலும் நாங்கள் இதனைச் செய்யமுடியாது, அதனைச் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்னும் மனநிலையில் வாழ்கிறோம். ஆனால் இவைகள் எல்லாவற்றுக்கு மத்தியிலும் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. "உனக்கு எதைச் செய்வதற்கும் பயம்.

ஏனெனில் அது தடை செய்யப்படலாம் என்று." இப்படி யொப்பி நெடுகச் சொல்லுவாள். எங்களுடைய சுதந்திரம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இன்னும் சகிக்கக் கூடியதாக இருந்தது.

அம்மம்மா 1942ம் ஆண்டு ஜனவரி மாதம் இறந்து போனா; நான் இன்னும் எவ்வளவு தூரம் அவளை விரும்புகின்றேன் என்றும், என்னுடைய நினைவுகளில் அவள் எந்தளவிற்கு வியாபித்திருக்கிறாள் என்பதையும் யாராலும் எப்போதும் அறிந்து கொள்ள முடியாது.

1934இல் நான் மொன்ரிசோரி பாலர் பாடசாலைக்குச் சென்றேன். அங்கு தொடர் ந்து படித்தேன். அது பாடசாலை வருடத்தின் இறுதி; நான் 6ம் வகுப்பு 'பி' பிரிவில் படித்துக் கொண்டிருந்தேன். நான் என்னுடைய ஆசிரியையிடம்(திருமதி K) "சென்று வருகின்றேன்" என்று சொல்லி விடைபெறும்போது இருவருமே அழுதோம். அது மிகவும் துக்ககரமானது.

1941இல் நான் எனது சகோதரி மார்கொட் உடன் யூத நடுத்தரப் பாடசாலைக்குச் சென்றேன். அவள் நான்காம் பாரத்தில் இருந்தாள்; நான் முதலாம் பாரத்தில் இருந்தேன்.

இதுவரையும் எங்கள் நான்கு பேருடனும் எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. இப்படி இன்றைய நாளுக்கு வருகின்றேன்.

●●●

**20.06.1942**
**சனிக்கிழமை**

அன்புள்ள கிட்டி,

நான் நேரடியாகவே உன்னுடன் பேச ஆரம்பிக்கலாம். இந்தக் கணம் மிகவும் நிம்மதியாக இருக்கின்றது. அம்மாவும் அப்பாவும் வெளியே சென்றுவிட்டார்கள். மார்கொட் தன்னுடைய சில நண்பர்களுடன் டேபிள் டென்னிஸ் விளையாடச் சென்றுவிட்டாள்.

நான் இப்போதெல்லாம் அதிகமாக டேபிள் டென்னிஸ் விளையாடிக்கொண்டிருக்கின்றேன். நாங்கள் டேபிள் டென்னிஸ் விளையாடும்போது எங்களில் யாராவது ஒருவர் களைத்தவுடன் ஐஸ்கிறீம் சாப்பிடப்போவோம். எங்களுக்கு ஐஸ்கிறீம் சாப்பிட நல்ல விருப்பம். விசேஷமாகக் கோடை காலத்தில் விளையாடி முடிந்ததும், அருகிலுள்ள, யூதர்களுக்கு அனுமதிக்கப்பட்ட, ஐஸ்கிறீம் கடைக்குச் சென்றுவிடுவோம். கைச்செலவிற்கான மேலதிக பணத்தைத் திருடுவதை இப்போது நாங்கள் கைவிட்டுவிட்டோம். நாங்கள் செல்லும் ஐஸ்கிறீம் கடையில் எப்போதும் கூட்டம் நிறைந்து இருக்கும். எங்களுக்கு ஒரு கிழமையில் வாங்கக்கூடிய ஐஸ்கிறீமிற்கு மேலதிகமாக வாங்குவதற்கு, நாங்கள் எப்போதும் எங்களு டைய பெரிய நண்பர் குழாமில் யாராவது ஒரு அன்பான இதயமுள்ள நல்லவனை அல்லது ஒரு சிநேகிதனைக் கண்டுபிடித்து விடுவோம்.

என்னுடைய வயதுக்கு நான் எனது ஆண்நண்பர்களைப் பற்றிப் பேசவேண்டிய தேவை உள்ளதா என்பதுபற்றி நீ மிகவும் ஆச்சரியப்படுவாய் என்று எதிர்பார்க்கின்றேன். ஐயோ பாவம், எங்களுடைய பாடசாலையில் யாராவது இதிலிருந்து தப்பமுடியும் என்று எதிர்பார்ப்பதுதான் தப்பு. நான் சைக்கிளில் போகும்போது என்னுடன் துணையாக வருவதாக, பாடசாலையில் பயிலும் சகமாணவன் ஒருவன் என்னைக் கேட்பான். அப்படிப் போகும்போது, நாங்கள் ஏதாவது பேசிக்கொண்டே செல்வோம். இப்படிக் கேட்கும் பத்துப்பேரில் ஒன்பது பேராவது என்மேல் கண்மூடித்தனமாகக் காதல் கொண்டு விடுவார்கள் என்பதுடன், தங்களு டைய பார்வையில் இருந்து என்னைத் தப்பவிட மாட்டார்கள் என்பதையும் என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். நான் அவர்களின் அனல்வீசும் பார்வைகளையும் அவர்கள் பிரயாணத்தின்போது அனுபவிக்கும் உல்லாசத்தன்மையையும் கண்டு கொள்ளுகிறேன் என்பதை அவர்களுக்கு சிலேடையாக உணர்த்தும்போது, சில நாட்களின் பின்பு அவர்க ளின் போக்கில் நிச்சயமாய் மாற்றம் தென்படும்.

அவர்களுடனான சைக்கிள் பயணத்தின் அனுபவம் அத்துமீறிப் போனால், நான் என்னுடைய சைக்கிளை ஒரு வெட்டு வெட்டுவேன். அப்போது என்னுடைய புத்தகப்பை கீழே விழுந்துவிடும். என்னுடன் பயணிக்கும் சகமாணவன் சைக்கிளில் இருந்து இறங்கி என்னுடைய புத்தகப்பையை எடுத்துத் தர முயற்சிக்கும்போது, அந்த இடைவெளியில் நான் எங்களுடைய பேச்சின் திசையை மாற்றிவிடுவேன்.

இப்படிப்பட்டவர்களெல்லாம் மிகவும் அப்பாவித்தன மானரகங்கள். ஆனால் சிலர் இருக்கின்றார்கள் - முத்தம் தருபவர்கள், கையைப் பிடிப்பவர்கள் என்று. இப்படிப்பட் டவர்கள் தவறான இடத்திற்கு வந்து கதவைத் தட்டுகிறார்கள். இப்படியான சேட்டைகள் விடுபவர்களுடன் நான் தொடர்ந்து பயணம் செய்வதில்லை. நான் சைக்கிளை நிற்பாட்டி உடனே இறங்கிவிடுவேன். அவர்களால் நான் அவமதிக்கப்பட்டிருக்கிறேன் என்றுணரச் செய்து அவர்களை மறுபேச்சுக்கிடமின்றி திரும்பிச் செல்லும்படி துரத்திவிடுவேன்.

இங்கு உனக்கும் எனக்குமான நட்பின் அஸ்திவாரம் போடப்படுகின்றது. மீண்டும் நாளை சந்திப்போம். அதுவரை!

உன்னுடைய ஆன்.

●●●




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல் அரசியல்: மார்க்ஸியமும் அறவியலும்

யமுனா ராஜேந்திரன்



கார்ல் மார்க்ஸ்

காந்தியின் ஒழுக்கத்தையும் அறநெறிகளையும் இன்குலாப்பும் இளவேனிலும் கேள்வி கேட்டபோது எந்த இடதுசாரி சிந்தனையாளனுக்கும் கோபம் வரவில்லை. ஜெயமோகனுக்கு மார்க்ஸின் ஒழுக்கத்தையும் அறநெறிகளையும் கேள்வி கேட்கும்போது காந்தியை புனிதனாக்க வேண்டியிருக்கிறது. மார்க்ஸையும் காந்தியையும் மனிதர்களாகப் பார்ப்பதைவிட புனித் விக்கிரகங்களாக்கி புனித வழிபாடு செய்வதுதான் பலருக்கும் உவப்பாக இருக்கிறது. தனது பிரம்மச்சரியத்தைச் சோதிப்பதற்காக, இரண்டு இளம்பெண்களின் மனநிலைபற்றிச் சிந்திக்காமல் அவர்களைச் சோதனைக்கான உபகரணங்களாக உபயோகித்த காந்தியின் நடவடிக்கை கேள்விக்கு உரியதுதான். அவரே எழுதியதன்மூலம் வெளிவந்த உண்மை என்பது மட்டுமே அவரைப் புனிதராக்கி விட முடியாது. மார்க்சுக்கும் ஹெலன் டெமூத்துக்கும் இருந்த உறவையும், தமது மகன் பிரெடரிக்கையும் மார்க்ஸ் இறுதிவரை அங்கீகரிக்கவில்லை என்பது கசப்பான உண்மைதான். இதைச்சொல்பவர்களை அவதூறுக்காரர்கள் என்று வசைபாடுவதைவிடவும், மனிதனுக்கும் சித்தாந்தத்திற்கும் இருக்கும் உறவையும்/பிளவையும் வரலாற்றுரீதியில் வைத்துப் புரிந்துகொள்வது மட்டுமே மனித விமோசனத்துக்கான ஒரே நிபந்தனையாக இருக்கமுடியும்.

தமிழ்ச்சூழலில் இன்குலாப், இளவேனில் தொடங்கி வைத்த விவாதம், எஸ்.வி.ராஜதுரை, ஜெயமோகனோடு மட்டும் நின்றுபோய்விடுவதில்லை. மு.பொன்னம்பலமும் சங்கமனும் தொடர்ந்து எழுதிக்கொண்டுதான் இருப்பார்கள். அவதூற்றுக்கும் கொச்சைப்படுத்தலுக்கும் அறிவுபூர்வமான அணுகுமுறைக்கும் வித்தியாசமில்லாமல் எழுதுகிற எழுத்துத்தான் மு.பொ.வினுடையதும் சங்கமனுடையதும், ஒற்றைவரித் தகவல்களை வைத்துக்கொண்டு அல்தூஸரை கொச்சைப் படுத்துகிறார் மு.பொ.

இந்துத்துவக் கறைபடிந்த சொற்களால் மார்க்ஸை நிந்தனை செய்கிறார் சங்கமன். அதே ஒற்றைவரித் தகவல்களை வைத்துக்கொண்டு எந்தவிதமான ஆழ்ந்த படிப்போ தேடலோ இல்லாமல் உத்தேசங்களையும் ஞாபகங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துக்கொண்டு எழுதிக்கொண்டிருக்கிறார் சிவசேகரம். ஜெயமோகனுக்கும் சங்கமனுக்கும் மு.பொ.வுக்கும் மார்க்ஸை அவமானப்படுத்தவேண்டும் என்பது மட்டுமே நோக்கமாயிருக்கிறது. சிவசேகரத்துக்கும் தொ.மு.சி. ரகுநாதனுக்கும் தி.க.சி.க்கும் மார்க்ஸ்பற்றியும் மாவோபற்றியும் நான் சொன்னவை வெறும் அவதூறுகளாகவே இன்றளவும் தெரிகின்றது.

இதே விவாதங்கள் நிறைய ஆவண ஆதாரங்களுடன் அறிவுபூர்வமாக மேற்கில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. விடயங்கள் நிகழ்ந்தபடி அறிவுபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு புத்திபூர்வமான எதிர்காலத் தடங்களை நோக்கி ஆக்கபூர்வமாக பெயர்த்தும் வைக்கப்பட்டிருக்கிறது. காந்தியோ, மார்க்ஸோ, மாவோவோ, குவேராவோ, சிமோன் தி போவுவாவோ எவராயினும் அவர்களைப் புனிதர்கள் ஆக்கவேண்டாம். கடவுள்கள் ஆக்கவேண்டாம். கடவுள்களையும் புனிதர்களையும் சுற்றித்தான் இன்று அதிகாரம் கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் பெயரில்தான் இரத்தக்கறை வரலாறு முழுக்கப்படிந்திருக்கிறது.

தமிழ்ச்சூழலின் அறிவு மேம்பாட்டுக்கு எதிரான உணர்ச்சிச் சவடால்களை கருத்திற்கொண்டுதான் சேகுவாராவின் மோட்டார் சைக்கிள் டயரியை முன் வைத்து ஒரு விவாதத்தின்பொருட்டு 1995ம்ஆண்டுக் கட்டுரையை எழுதினேன். பிரித்தானியாவிலிருந்து வெளியாகிய 'நாழிகை' சஞ்சிகையில் வெளியான அக்கட்டுரையில் புரட்சியாளர்கள் மீதான வலதுசாரி விமர்சனத்தை நாம் நேர்மையாக எதிர்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தேன்.



சிமோன் தி போவுவாவுடன் சார்த்தர்

பாலியல்பற்றிய ஒழுக்கப் பிரம்மைகள், ஜாதிய வெறி, நிறவெறி போன்றவைகள் மலிந்ததொரு கலாச்சாரச் சூழல் நம்முடையது. இம் மூன்று விடயங்களையும் முன்வைத்து மார்க்ஸை ஐரோப்பியமையவாதி (eurocentrist) எனப் பார்க்கும் சூழலில், மார்க்ஸீயவாதிகள் ஜாதீய அதிகாரம் கொண்டவர்கள் எனும் விமர்சனம் வரும் சூழலில், குவேராவுக்குள்ளிருந்து ஐரோப்பியமையவாத ஆப்ரிக்க மக்கள்பாலான விலக்கப் பார்வையை நான் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

குவேரா தன்னளவிலேயே தனது முரண்களைக் கடந்துபோன சர்வதேசப் புரட்சியாளனாகப் பரிணமித்தான் என்று நிறுவியிருந்தேன். புரட்சியாளன் புனிதனோ கடவுளோ அல்ல மனிதனே என்பதை வலியுறுத்தியிருந்தேன். எனது கட்டுரையில் புரட்சியாளர்கள் மீதான வலதுசாரி விமர்சனத்துக்கு எதிரான இடதுசாரி அணுகுமுறையொன்றை முயற்சி செய்திருந்தேன்.

சே குவேரா பற்றியதும் பல்வேறு புரட்சிக்காரர்கள் பற்றியதுமான பிரச்சினை என்பதால் **இதைச் சுற்றியிருக்கும் பிரம்மைகளை உடைப்பது இக் காலகட்டத்தில் தேவை என்று தோன்றுகிறது.**

பால் ஜோன்சன் எழுதிய Intellectuals எனும் புத்தகம், பெ.்.ன்னி போஸ்டரும் இமுஸன் ஸ்ட்டனும் சேர்ந்தெழுதிய Daughters of De Beauvoir புத்தகம், கார்ல் மார்க்ஸ், ஹெலன் டெமூத் பற்றிய Encounter கட்டுரை, ரோஸா லக்ஸம் பர்க் பற்றி வந்திருக்கும் Letters of Rosa Luxembourg புத்தகம், மாவோ நூற்றாண்டையொட்டி வெளிவந்த மாவோவின் அந்தரங்க மருத்துவரின் மாவோ பற்றிய நினைவுகள் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிடலாம். **ஜோன்ஸனின் புத்தகம் ரூஸோ தொடங்கி ஸெல்லி, மார்க்ஸ், இப்சன், டால்ஸ்டாய், ஹெமிங்வே, பெர்டோல்ட் பிரெக்ட், பெர்ரண்ட் ரஸ்ஸல், சார்த்தர், விக்டர் கோலான்ஸ், லிலியன் ஹெல்மன் எனச் சென்று நோம் சேம்ஸ்கி, நோர்மன் மெயிலர்வரை போகிறது.**

**கத்தோலிக்க அறவியல் அடிப்படையில் பாலுறவு, குடும்பப் பொறுப்பு, கற்பு, சுத்தம், உண்மை பேசல் போன்றவற்றின் அடிப்படையில்** மேலே குறிப்பிட்ட அறிவாளிகளின் சீரழிவு, ஒழுக்கக்குறைவு, பொறுப்பின்மைபற்றிப் பேசுகிறது. **ஜோன்ஸனின் இப் புத்தகம் முழுக்கவும் இடதுசாரிகள், கம்யூனிஸ்டுகள் மீதான தாக்குதலாகவே எழுந்தது.**

இதே புத்தகத்தில் வரும் சார்த்தர் பற்றிய செய்திகள்தான் மாறுபட்ட வடிவத்தில் Daughter of De Beauvoir புத்தகத்தில் வருகிறது. சார்த்தருக்கு இருந்த பல பெண்களின் தொடர்பு, போவுவாவை சித்திரவதை செய்தமை, சார்த்தருக்காக போவுவா தன்னைக் காதலித்தவரை மறுத்தமை என விடயங்கள் வருகின்றன.

கார்ல் மார்க்ஸ் அசுத்தக்காரன். வேலைக்காரியோடு பெற்ற மகனை கடைசிவரை பார்க்காது உதாசீனப்படுத்தியவர் என்ற விமர்சனம்போல் ஜோன்சனுடையது மிகக் கொச்சையான விமர்சனம். நிராகரிக்கத்தக்கது.

**வலதுசாரிகள், மதவாதிகள், ஒழுக்கவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதல்ல பிரச்சனை. இடதுசாரிகள் மற்றும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மார்க்சீயவாதிகள் இதை எப்படி எதிர் கொள்கிறார்கள் என்பதுதான்.** வலதுசாரிகள் கேவலமாக வசைபாடுகிறபோது இவர்கள் அதிர்ச்சியுறுகிறார்கள். தாம் உருவாக்கி வைத்த புனிதம் கறைபட்டுப் போய்விடுவது போல கோபம் கொள்கிறார்கள். அத்தகைய சம்பவங்கள் ஏதுமே நடக்கவில்லை என்று பூசி மெழுகி அறத்தை ஒழுக்கத்தை நிலைநாட்டுகிறார்கள்.

சே குவேராவின் இந்த டயரி அவர் இறந்து 25 வருடங்கள் கழிந்து வெளிவருவதற்கான காரணம் இடதுசாரிகள் புரட்சியாளர்களாக மனிதர்களைப் புனிதப்படுத்துவதுதான். உன்னத புருஷர்களாக, தேவதூதர்களாகச் சித்தரிக்கும் மனவோட்டம்தான். கார்ல் மார்க்ஸ் - ஜென்னி உறவை ராமன் - சீதை உறவுக்கு ஒப்பிட்ட மார்க்சீயவாதிகள் அதிகம். இவர்கள் பலம் பலவீனம் நிறைந்த மனிதர்கள். **பலம் பலவீனம் வாழ்ந்ததை வாழவிருப்பதைக் கடந்து போனதை புதிய மனிதனுக்கான விளைவை, அந்தந்த மனிதனின் வாழ்வை நிகழ்ந்தபடி வைப்பதே மனித விமோசனத்துக்கான ஒரே வழி.**[1]


மா ஓ

நாழிகையில் நான் ஒரேயொரு கட்டுரையைத் தான் எழுதினேன். அக்கட்டுரையில்தான் சே குவேரா, மார்க்ஸ், மாவோ, அல்தூஸர், சிமோன் தி போவுவா என எல்லோரையுமே என் விவாதத்துக்குள் எடுத்துக்கொண்டிருந்தேன். சிவசேகரம் சொல்கிற மாதிரி நான் இரண்டு கட்டுரைகள் எழுதவில்லை. மார்க்ஸ் பற்றி நான் காலச்சுவட்டில் எழுதியதாகவும் மாவோ பற்றி ஐரோப்பிய ஏட்டில் நான் எழுதியதாகவும் சிவசேகரம் சொல்லுவது இரட்டைப் பொய்கள். சிவசேகரம் மாவோ பற்றிய என் ஐரோப்பியக் கட்டுரைக்கு பதில் எழுதியதாகச் சொன்னது மூன்றாவது பொய். இல்லாத கட்டுரைக்கு எழுதியதாகச் சொல்லப்படும் இல்லாத பதில் நான்காவது பொய். நான் எழுதியது ஒரே ஒரு கட்டுரை. அதுவும் இலண்டன் நாழிகையில் ஜூலை 1995இல் எழுதிய கட்டுரை. அதுவே காலச்சுவட்டில் ஜூன் 1996 இதழில் வெளியானது. அக்கட்டுரையில் நிறவாதம், ஆப்ரிக்கா, ஸ்பானிஷ் பூர்வகுடி மக்கள் பற்றிய என் மொழிபெயர்ப்புக்கள் இடம் பெற்றிருக்கவில்லை. எனது முழுமையான கட்டுரை நாழிகையில் வெளிவந்ததுதான்.

சிவசேகரத்தின் காலச்சுவடு கடிதத்திலும் சரி சரிநிகர் கடிதத்திலும் சரி திரும்பத் திரும்பச் சில விடயங்களே இடம்பெறுகின்றன. மாவோபற்றி நான் சொன்னது அவதூறு என்னும் விஷயம் ஒன்று. மற்றது துண்டுப் பிரசுரத்தில் இருந்த ஒரு விஷயத்தை நான் மறைத்துவிட்டதாகச் சொன்னது. மற்றையது ஹெலன் டெமூத், கார்ல் மார்க்ஸ் கல்லறையில் புதைக்கப்பட்டிருப்பதை நான் ஏதோ திட்டமிட்டு மறைத்துவிட்டதாக எஸ்.வி.ஆர். கோபமுற்றுச் சொன்னதை அம்பலப்படுத்துவதாகக் கோரிக் கொள்வது. சிவசேகரத்தின் இரண்டு கடிதங்களிலும் இது இடம்பெறுகின்றது.

சிவசேகரம் தனது காலச்சுவடு கடிதத்தில் சொல்கிறார்:

> மா ஓ பற்றிய அவதூற்றுச் சித்திரமொன்று, 1993இல் மா ஓ பிறந்த நூற்றாண்டு தினத்துக்கு ஓரிரு வாரங்கள் முன்பு பி.பி.ஸியில் ஒளிபரப்பானது. மா ஓவைக் காமுகனாகக் காட்டும் நோக்கில் மா ஓ இளம்பெண்களுடன் நடனமாடும் காட்சியும் அதில் இடம்பெற்றது. வேடிக்கை ஏதென்றால், இதே காட்சி 1969 மட்டில் மா ஓவுக்கும் இளைய தலைமுறையினருக்கும் உள்ள நல்லுறவைச் சித்தரிக்கும் நோக்குடன், சீன அரசு வெளியிட்ட ஒரு செய்திச் சித்திரத்தில் வந்ததுதான். மா ஓவின் **'பெண்வேட்டை'பற்றி அவரது மருத்துவரின் 'வாக்குமூலம்' குறிப்பிடும் காலத்தில் மா ஓ மிகுந்த உடற்தளர்ச்சி உடையவராக இருந்தாரென்ற விதமான பிரச்சாரம் மேனாட்டுச் 'செய்தி' நிறுவனங்களாற் பரப்பப்பட்டதை நினைவுகூரவேண்டும்.** ஏழெட்டுத் தசாப்தங்கட்கு முன்பிருந்தே தொடங்கிய இவ்வாறான அவதூறுகட்கும் செய்தித் திரிப்புகட்கும் இன்றுவரை மேனாட்டு முதலாளித்துவ நலன்கட்கு எதிரானோர் உள்ளாகியே வருகின்றனர். **யமுனா ராஜேந்திரன் தான் நம்ப விரும்புவதை நம்பட்டும். உண்மை பற்றிய அக்கறை அதற்கும் அப்பாலானது.**

மார்க்ஸுக்கும் **அவர் வீட்டின் வேலைக்காரப்பெண்ணுக்குமிடையிலான உறவு தொடர்பாக** ய.ரா. எழுதியதுபற்றி எஸ்.வி. ராஜதுரை லண்டனில் என்னிடம் மிகவும் கோபத்துடன் குறிப்பிட்டார். ய.ரா. எழுதிய தகவல் **மார்க்ஸின் கல்லறைக்கு விஜயம் செய்வோருக்கு வழங்கப்படும் துண்டுப் பிரசுரத்திலிருந்து பெறப்பட்டது என்பதையும் அப்பெண்ணுடைய உடலும் மார்க்ஸின் கல்லறையிற் புதைக்கப்பட்டுள்ளதாக அங்கு குறிப்பிடப்பட்டதை அவர் தனது கட்டுரையிற் கூறாது தவிர்த்தமையும் பற்றி யாராவது எழுதவேண்டுமென்று எஸ்.வி.ஆர் என்னிடம் கூறினார்.** இம்மாதிரி விஷயங்களில் நான் அக்கறையுடையவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னல்ல. ஆயினும் ய.ரா. எழுதிய விஷயம் காலச்சுவடு வாசகர் கூட்டங்களிலும் அலசப் படுவதால் இதுபற்றி எழுதலாமென்று நினைத் தேன்.[9]

1996 ஜுனில் இவ்வாறு எழுதும் சிவசேகரம் 1998 செப்டெம்பரில் சரிநிகரில் இவ்வாறு எழுதுகிறார்:


> அதில் ஏதும் ரகசியம் இல்லை. அந்தப் பெண்ணுடைய உடலும் கார்ல் மார்க்ஸின் கல்லறையிலேயேதான் புதைக்கப்பட்டுள்ள தாக மார்க்ஸின் கல்லறைபற்றிய **துண்டுப் பிரசுரத்திலும் உள்ளதென அறிகிறேன். லண்டனிலிருந்து யமுனா ராஜேந்திரன் என்பவர்** இதை ஏதோ ஓர் மர்மத்தை அம்ப லப்படுத்தும் முறையில் 'காலச்சுவடு' ஏட்டில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் முன்பு எழுதி, **அதற்கு நான் ஒரு பதிலும் எழுதினேன். இவ்வாறே அந்த நபர் மா ஓ பற்றிய அமெ ரிக்க அவதூற்றை ஒரு ஐரோப்பிய ஏட்டில் எழுதினார். அதற்குப்பதில் எழுதினேன்.**
>
> இந்தவிதமான விடயங்கள் நமக்குச் சிக் கலை ஏற்படுத்துவதற்கு ஒழுக்கம்பற்றி நாம் பேணும் விழுமியங்கள், நமது கால இடச் சூழல்களால், **சில சமயம்** ஒரு கடந்த காலச் சூழலால் விறைப்பாக நிர்ணயிக்கப்பட்ட வையாக **இருக்கலாம்.**[8]

மாவோ பற்றியதானாலும் சரி, மார்க்ஸ் பற்றியதா னாலும் சரி, குவேரா பற்றியதானாலும் சரி நான் மர் மத்தை அம்பலப்படுத்தும் பரபரப்புக் கருதி எழுத வில்லை. அக்கட்டுரையில் சேயின் புத்தகத்தை முன் வைத்து புரட்சியாளர்கள் குறித்த சில சிக்கலான பிரச்சினைகளை விவாதத்திற்கு எடுத்திருந்தேன். புத்தகத்தை எவ்வாறு வாசிப்பது, பிரச்சினைகளை எப்படி விவாதிப்பது என்கிற ஒழுக்கம்கூட இன்னும் தமிழ்ச்சூழலில் ஆழமாகத் தோன்றவில்லை.

> மதிப்புரைகள் மூன்றுவகையானவை: ஒன்று, புத்தகத்தை அறிமுகம் செய்து வைப்பது. **இரண்டாவது, புத்தகத்தின் மையப்பொருளை விவாதத்துக்கு எடுத் துக்கொள்வது.** மூன்றாவது, புத்தகம் முக்கி யமானதாக இல்லாவிட்டாலும் அதை எழு திய ஆளுமையின் முக்கியத்துவம் கருதி விவாதிப்பது. இம்மூன்று வகையான மதிப்பு ரைகளையுமே தமிழ்நாட்டில் வணிகப் பத்திரி கைகளும் சரி, இலக்கியப் பத்திரிகைகளும் சரி வளர்த்தெடுக்கத்தவறிவிட்டன.[3]

நான் விவாதத்துக்கு எடுத்துக்கொண்ட விசயங் கள் அனைத்துமே ஆதாரபூர்வமாக எழுத்தில் வைக் கப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண் டவை. சிவசேகரத்தின் இதுபற்றிய எந்தக் கடிதத் தின் அபிப்பிராயமும் எந்தப் புத்தகத்தையும் படித் துப்பார்த்த அறிவிலிருந்து வருவது அல்ல. அவர் திரும்பத் திரும்ப கார்ல் மார்க்ஸ் கல்லறையில் செல் வோருக்குத் தரப்படும் துண்டுப்பிரசுரத்திலிருந்து விஷயத்தைப் பெற்றதாக மிகவும் கொச்சைப்படுத் திக் கொண்டிருக்கிறார். எஸ்.வி.ராஜதுரை அதைத் துண்டுப்பிரசுரம் என்று சிவசேகரத்திடம் சொல்லியி ருப்பாராயின் அது துரதிர்ஷ்டவசமானது.

அது துண்டுப்பிரசுரம் அல்ல. மார்க்ஸ் கல்லறை யைப் பராமரிக்கவேண்டும் என ஆவல் கொண்ட இடதுசாரி நண்பர்கள் பதிப்பித்த 24பக்கங்கள் கொண்ட, ஆழ்ந்த ஆராய்ச்சியின்பின் எழுதப்பட்டு செம்மையாகப் பதிக்கப்பட்ட, நீளவாக்கினாலான அழகான குறுநூல். அது விநியோகிக்கப்படுவ தில்லை. வருவோர் போவோருக்கெல்லாம் தரப்படுவ துமில்லை. அதன்விலை இரண்டு பவுண்டுகள். அதன் விற்பனைத்தொகை ஹைகேட் கிழக்குக் கல்லறை யின் மீளமைப்புக்கும் பராமரிப்புக்காகவும் செலவி டப்படுகிறது.




சிவசேகரம் திரும்பத் திரும்ப அதைத் துண்டுப்பி ரசுரம் என்கிறார். சினிமா ஷோவுக்கு கொடுக்கப் படும் நோட்டீஸ் போலவோ, அந்தியேட்டிக்கு அடிக் கப்படும் கறுப்புக் காகிதம் போலவோ, தெருவில் தரப்படும் விளம்பரம்போலவோ பொருள்படும்படி அந் தச் சொல்லை அவர்பாவிக்கிறார். சிவசேகரம் பல ஆண்டுகள் இலண்டனில் வாழ்ந்தவர். இன்னும் 'அறி கிறநிலையில்'தான் அவர் இருக்கின்றார். எஸ்.வி. ராஜதுரைக்கு மட்டுமல்ல தமிழவன், சுந்தரராமசாமி, வெங்கடாசலபதி, சுப்ரபாரதிமணியன், நுஹ்மான் என இலண்டனுக்கு வந்த எல்லோருக்குமே நானோ அல்லது நண்பர்களோ அந்த நூலை விலைகொ டுத்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அது துண்டுப் பிரசுரம் அல்ல; அறிவுபூர்வமான ஆய்வு ஆவணம்.

மிகுந்த பொறுப்புணர்வுடன் வரலாற்றுக் கண் ணோட்டத்துடன் மார்க்சுக்குப் பின்னும் வாழும் அவர் தத்துவமரபுபற்றிய பெருமிதத்துடன் எழுதப்பட்டது அந்நூல். அந்த நூல் மார்க்ஸ், ஹெலன் டெமூத்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரெடரிக் எங்கல்ஸ் பற்றி என்ன சொல்கிறது?

> ஹெலன் டெமூத்தின் பக்திபூர்வமான நேசமும் நட்பும் முழுமையாகக் கௌரவிக் கப்பட்டு திருப்பியளிக்கப்பட்டது. எலியனார் மார்க்ஸ் பிறப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னால் அவர் ஒரு ஆண்மகவை ஈன்றார். **அந்நேரம் அக்குழந்தை எங்கெல்ஸின் குழந்தை எனச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் எங்கெல்ஸ் தான் சாகும் தறுவாயில் நிஜத்தில் அக்குழந்தையின் தகப்பனார் கார்ல் மார்க்ஸ் எனும் உண்மையை வெளியிட்டார்.** பிரெடரிக் டெமூத் என்னும் அக்குழந்தை தத்துப் பெற்றோர்களிடம் (foster parents) ஒப்படைக்கப்பட்டது. **மார்க்சும் அவரது மனைவியும் இறக்கும் வரையிலும் பிரெடரிக், மார்க்ஸ் குடும்பத்தவர்களைப் பாரக்கவேயில்லை.** ஹெலன் டெமூத் மார்க்ஸ் தம்பதிகளின் இறுதியாண்டுகளில் அவர்களை சிரத்தையுடன் பராமரித்தார்.
>
> மார்க்ஸின் மரணத்திற்குப் பிறகு ஹெலன் டெமூத் எங்கெல்சின் வீட்டுப் பராமரிப்பாளராகவும் மதிப்பு மிக்க தோழமையாகவும் இருந்தார். தேவையான வசதிகளோடு வாழ்ந்தார். விடுமுறைதினங்களில் வெளியே சென்றார். **மார்க்ஸ் ஒருபோதும் அங்கீகரித்திராத (never acknowledged) பிரெடரிக் தனது தாயைப் பார்க்க அடிக்கடி வந்து போனார்.** 1890இல் ஹெலன் டெமூத் திடீரென மரணமுற்றபோது மிகவும் சோகமுற்ற எங்கெல்ஸ், **ஹெலன் டெமூத்தின் உடலை மார்க்ஸின் கல்லறையில் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.**[2]

சிவசேகரம் தனது இரண்டு கடிதங்களிலுமே ஹெலன் டெமூத்தை 'வேலைக்காரப்பெண்' என்றோ அல்லது 'அந்தப்பெண்' என்றோதான் குறிப்பிடுகிறார். இதுதான் அவர் ஆதாரபூர்வமாக அறிவுபூர்வமாகப் பிரச்சினையை அணுகும் போக்கு எனில் இவரது மார்க்ஸீயம் (his brand of marxism) நிச்சயம் புதைகுழிக்குத்தான் போகும். பிரச்சினைக்குரிய ஆளுமைகொண்ட ஒரு மனுஷியைக்கூட நாகரீகமாகக் கௌரவிக்கத் தெரியாத இவர் பேசுகிற பெண்நிலைவாதம் நகைப்புக்குரியது. ஏதோ second rate citizenஐப் பார்க்கிறமாதிரித்தான் சிவசேகரம் ஹெலன் டெமூத்தைப் பார்க்கின்றார். ஆகவேதான் மிக நன்றாக நேரில் அறிந்த என்னைக்கூட 'அந்த நபர்' என நாகரீகமில்லாமல் அதிகாரத்துடன் குறிப்பிட முடிகிறது. தமிழ்ச்சமூகமும் பத்திரிகைகளும் தனக்களித்த தகுதியை சிவசேகரம் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்து வருகிறார். வாசகர்களைப் பற்றிக் கவலையே படாத அதிகாரமும் அராஜகமும் சிவசேகரத்தின் சொற்களில் புதைந்து கிடக்கிறது. மேடையிலும் சாதாரணமாக மனிதர்களிடம் நேரிலும் சொல்லத் தயங்கும் வார்த்தைகளை சிவசேகரம் சாதாரணமாக எழுத்தில் வைக்கிறார். இவர் மேட்டிமை பற்றியும் சாதீயம் பற்றியும் விமர்சிப்பதெல்லாம் பரிசீலனைக்குரிய விஷயங்கள். மாவோபற்றியும் நான் மார்க்ஸ் கல்லறையில் புதைக்கப்பட்ட ஹெலன் டெமூத் பற்றியும் பேசாதது குறித்தும் விவரிக்கும் முன்பு தொ.மு.சி. ரகுநாதன் இது குறித்து என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். தொ.மு.சி. ரகுநாதனுக்கான பதிலில் சிவசேகரத்துக்கான பதிலும் இருக்கிறது. இனி தொ.மு.சி. என்ன சொல்கிறார்:

> அதை எங்கிருந்தோ தேடி எடுத்துப் போட்டிருக்காங்க. அந்தக் கதையில் சேகுவேரா பற்றிமட்டும் எழுதினா பரவாயில்லை. அதுல எவனோ பால் ஜான்சன்னு ஒருத்தன் Intellectuals ன்னு எழுதிய ஒரு புத்தகம்பத்தி வருது. **இந்த குறிப்பிட்ட யமுனா ராஜேந்திரன் கட்டுரையில் தெரிவிக்கிற விஷயம் என்னன்னா கார்ல் மார்க்சுக்கு வேலைக்காரிமூலம் பிறந்த பிள்ளையை அவர் ஒத்துக்கலை. அதுக்குக் கீழே ஒரு நீசத்தனமான அவதூறு. அவர் அந்தப் பொறுப்பை எங்கெல்ஸை ஏற்றுக்கொள்ளச் செய்தார். இது சரித்திர பூர்வமான உண்மை அப்படீன்னு.** அப்புறம் அன்னை தெரேசா பத்தி... அட உண்மையாகவே இதெல்லாம் இருக்கட்டுமே. தெரிஞ்சிக்கவேண்டிய விஷயமான்னு கேட்கிறேன். **அப்புறம் மாசேதுங் பற்றி... மாவோ பெண்களை மதிக்கனும்னு சொன்னவன். அவங்க மேலே ஆதிக்கம் செலுத்தினானாம்?** இத அவனோட டாக்டர் சொன்னானாம். அந்த டாக்டர் மாவோவுக்கு வி.டி. வந்தது நான்தான் குணப்படுத்தினேன்னு சொன்னாலும் சொல்வான். **சே குவேரா டைரியிலிருந்து முக்கியமான எடுத்துக்காட்டு என்னன்னா அவன் அடுத்தவன் பொண்டாட்டியை டான்ஸ் ஆட இழுத்துக்கிட்டு ஓடினான்னு.** இதையெல்லாம் பார்க்கிறப்ப எனக்கொரு சந்தேகம் வருது. இத character assasinationன்னு சொல்வாங்க. **ஆளுமைகளைப் படுகொலைசெய்தல்.** குறிப்பா இடதுசாரிகள மட்டும் பொறுக்கி எடுத்து ஏன் character assasination பண்றீங்க?[4]

எங்கெல்ஸை தகப்பனென பொறுப்பேற்கச் செய்ததெனச் சொன்னது நான் சொல்லும் அவதூறு என்கிறார் தொ.மு.சி. அதுவும் நீசத்தனமான அவதூறு என்கிறார். இதற்கு நான் முதலில் குறிப்பிட்ட குறுநூலிலிருந்தான மேற்கோளே தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறது. அந்நூல் மார்க்ஸ்பற்றி அவதூறல்ல. வரலாற்றுரீதியான பலநூல்களை ஆய்ந்து முன்வைக்கப்பட்ட ஆவணம்.

மாசேதுங் பற்றிய பிரச்சினைகள் அவரது personal physicianஆல் எழுதப்பட்ட புத்தகம், மற்றும் பிபிசி நேர்முகத்தின் அடிப்படையிலானது. அந்நேர்முகத்தில் கலாச்சாரப் புரட்சி அத்துமீறல், மாபெரும் பாய்ச்சல், சூழலியல் பேரழிவு என்ற விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. மாவோவின் இறுதிநாட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள்வரை அவரைக் கவனித்துக்கொண்ட அவரது தனிமருத்துவரின் அபிப்பிராயங்கள் அவை. சிவசேகரம் எந்த அடிப்படையில் அவைகள் மேனாட்டுச் செய்தி நிறுவனங்களால் பரப்பப்பட்ட செய்தித் திரிப்புக்கள் என்று உறுதிபடச் சொல்கிறார்? ஸ்டாலின் பற்றி, பெரியார்பற்றி, போல்பொட்பற்றி, அபிமால் குஸ்மான்பற்றி அவர்களின் அத்துமீறல்கள் பற்றியும் நாம் முன்பு இதே விவாத அணுகுமுறையைத்தான் கடைப்பிடித்தோம். ஸ்டாலின்பற்றி புகாரின் ஆவணங்கள், போல்பொட் பற்றிய இறுதி விசாரணை வீடியோ, அபிமல் குஸ்மான் பற்றிய இலத்தீனமெரிக்க புரட்சியாளர்களின் விமர்சன ஆவணங்கள் முன்வைக்கப்பட்ட பின்னால் நமது அணுகுமுறை பொய்த்துப் போகவில்லையா என்ன? அவதூறு அல்லது மேற்கத்தைய செய்தித் திரிபு என்பது மட்டுமே பதிலான அணுகுமுறையாக இருக்கமுடியாது. ஆதாரங்களுக்கு எதிர் அபிப்பிராயங்களை மூர்க்கத்தனமாக முன்வைக்காத நேர்மையே நமக்கு இன்று தேவையானது. அதிர்ச்சியடையத் தேவையில்லை, மன முதிர்ச்சியுடன், ஆய்வு நோக்குடன் செயல்படும் வெளியை அடைவோம்.

கார்ல் மார்க்ஸின் கல்லறைபற்றி அல்லது மார்க்ஸ் ஹெலன் டெமூத் பற்றி நான் தனியாக விவரணக் கட்டுரை எதுவும் எழுதவில்லை. நான் கார்ல் மார்க்ஸ், ஹெலன் டெமூத் பிரச்சினையை ஒரு பரந்துபட்ட விவாதத்தின் அங்கமாகவே தேர்ந்து கொண்டேன்.

அந்தச் சூழ்நிலையில் ஹெலன் டெமூத் கார்ல் மார்க்ஸ் கல்லறையில் புதைக்கப்பட்ட விஷயத்தை நான் எழுதவேண்டிய அவசியமில்லை. அதை மறைக்கவேண்டிய அவசியமும் எனக்குக் கிஞ்சிற்றும் இல்லை. மார்க்சுக்கும் மார்க்ஸீய அறவியலுக்கும் தாம் மட்டுமே உரிமை கொண்டாட நினைப்போர் மிகச் சாதாரணமாக மார்க்ஸீய எதிரிப் பட்டியலில் என்னைத் தள்ள நினைக்கின்றார்கள். யாரோ எழுதுவதைவிட இப்பிரச்சினையை எஸ்.வி.ஆரே ஏன் எழுதியிருக்கக்கூடாது என்பதுதான் எனக்கு ஆச்சரியமளிக்கிறது. சிவசேகரம் அம்பாகப் பாய்ந்திருப்பது இன்னும் ஆச்சர்யம் தருகிறது.

சே குவேரா டயரியிலிருந்து முக்கியமான எடுத்துக்காட்டாக அடுத்தவன் பெண்டாட்டியை டான்ஸ் ஆட இழுத்திக்கிட்டு ஓடினதை மட்டுமே நான் எழுதுவதாகக் குறிப்பிடுகிறார் தொ.மு.சி. தொ.மு.சி.க்கு அந்த விஷயத்தை மட்டுமே தேர்ந்துகொள்ளவேண்டியிருந்தது துரதிர்ஷ்டவசமானது. எனது எடுத்துக்காட்டுகளில் சிலி கம்யூனிஸ்டுக்களின் தியாகம், குவேராவின் காதல் இதயம், ஆஸ்துமா துயரம் என எத்தனையோ காட்டப்பட்டுள்ளது.



சே குவேரா

நாழிகையில் வெளியாகி காலச்சுவட்டில் வெளியாகாத இரண்டு எடுத்துக்காட்டுகளை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும். ஒன்று ஸ்பானிஷ் பூர்வகுடி கலப்பின மக்களின் கல்வி சம்பந்தமானது. மற்றையது ஆப்ரிக்க மக்கள் பற்றிய குவேராவின் சரியல்லாத மதிப்பீடு தொடர்பானது.

குவேரா சொல்கிறார்:

தத்தமது உலகத்தை மதிப்புக்குரியதாகப் பார்க்கிற மனிதர்களாக தனிநபர்களை உணரச் செய்யும் கல்விச்சாலைகளை உருவாக்குவதுபற்றி அவர் பேசினார். அவரவர் சமூகத்துள் பயன்மிக்க பாத்திரத்தை வகிக்கமுடியும் என்பது பற்றிப் பேசினார். **இன்று நிலவும் கல்வித்துறை அமைப்பை முற்றிலும் மாற்றியமைப்பதுபற்றி வெள்ளை மனிதர்களின் அளவுகோல்களின் படியான கல்வி இந்தியர்களுக்கான கல்வி வழங்குவது மிகமிக அரிதாக இருப்பது பற்றியெல்லாம் பேசினார்.** வெள்ளைக் கல்வி அதிருப்தியையும் அவமானத்தையும் தருவதாக, தமது சொந்த இந்திய மக்களுக்கு உதவமுடியாமல் செய்வதாக, தமக்குப் பகையாக இருக்கும் வெள்ளை சமூகத்தில் தமக்கான இடம்பெற முடியாததாக, தம்மை அங்கீகரிக்காத கல்வியை வெள்ளைக் கல்வி தருவதாகச் சொன்னார்.

**சந்தோசமில்லாத இந்த மக்களின் ஆசை, அருவமாகக் குழம்பின. சில அதிகார வர்க்க பதவிகளைப் பெறுவதில்தான் இருக்கிறது. தமக்குள் இருக்கும் மந்திரமாயமான ஸ்பானிஷ் இரத்தம் தமது நாளங்களில் ஓடுவதற்காக சந்தோஷப்படுகிறார்கள். இன்றோ நாளையோ தமது வாரிசுகள் தமது வாழ்நாள் முழுக்க இவர்கள் சாதிக்க ஆசைப்பட்ட இலக்குகளை அடைவார்கள் என்று நம்புகிறார்கள்.** அவர் பேசுகிறபோது, தான் தனது விசுவாசத்தாலான துக்கப்பட்ட மனிதனின் சித்திரவதைக்குள்ளாகிய ஆன்மாவுக்கு துரோகமிழைப்பதாகக் கருதும் அதே சமயம், அதற்குக் காரணமாகவிருந்த பூர்வாங்கமான உதாரணங்களுக்கு ஆசைப்படுகிறார்.

**மனிதனைச் சேதப்படுத்தி அதற்காக சலுகையாகக் கொடுக்கப்பட்ட ஒரு துளி இரத்தத்தின் பெறுமதியான மந்திரசக்தியின் விளைவான கல்வியின் அசல் உற்பத்தியல்லவா அவர்?** அந்த ஒரு துளி இரத்தம் உள்ளூர் எஜமானனுக்கு விற்கப்பட்ட ஏழை மெஸ்டிஸோ (ஸ்பானிஷ் பூர்வகுடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியக் கலப்பினம் - ய.ரா.) பெண்ணிட மிருந்து வந்திருந்தால்கூட, அல்லது ஒரு பூர்வகுடி இந்திய வேலைக்காரப் பெண்ணை பலாத்காரப்படுத்திய ஒரு குடிகார ஸ்பானிஷ் ஆண்டையின் பாலியல் வல்லுறவின்மூலம் வந்திருந்தால்கூட?
(PERU: page 81)[14]

விடுதலைக்கல்வி, மக்கள்மயமான சுயகல்வி போன்றன பற்றிய விவாதங்கள் நிலவிய சூழலில், விடுதலைக்கல்வியை ஒரு பக்கம் பிரக்ஞை பூர்வமாக விளைந்து, ஆதிக்கக் கல்வியை விமர்சித்துக் கொண்டே, அதே ஆதிக்கவர்க்கப் பதவிகளை நோக்கிச் செல்லும் பூர்வகுடி மக்கள்பற்றி குவேரா பேசுகிறார்.

காலனியாதிக்கம், பிராமணீயம், ஜாதீய ஆதிக்கம் போன்றவற்றின் மொத்த அறிவுத்துறை வடிவமாக இருக்கும் நிலவுகல்விக்கு எதிரான ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மேல்கொண்ட மேற்கோளோடு ஒப்பிட்டு விவாதிக்க நிறைய இருக்கிறது. தமிழ்ச்சூழலில் விவாதிக்கப்பட்டதெல்லாம் பாலியல் பிரச்சினைகள் மட்டும்தான். ஆப்ரிக்க விடுதலைக்காகவெல்லாம் அங்கு சென்று போராடிய குவேரா தனது இளமை நாட்களில் ஆப்ரிக்க மக்கள்பற்றி என்ன எண்ணம் கொண்டிருந்தான்?

கறுப்பு மக்கள் ஆப்ரிக்க இனத்தின் உயிர்ப்புள்ள உதாரணமானவர்கள். **குளிப்பதற்கான விருப்பமற்றிருப்பதால் தமது இனத்தின் தூய்மையைக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.** பிறிதொருவகை அடிமைகளான போத்துக்கேயர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, இணைத்துக்கொள்ளப்பட்டிருப்பவர்கள். இந்த இரண்டு தொன்மையான இனம் சார்ந்தவர்களும் தற்போது ஒரு பொது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள். கலகமும் சச்சரவும் சண்டையுமாக நிறைத்துக்கொண்டு நிற்கிறார்கள். சுரண்டல், வறுமை போன்றவை தமது நாளாந்த வாழ்வுப் போராட்டத்தில் அவர்களை இணைக்கிறது. ஆனால் வாழ்வு குறித்த அவர்களது வித்தியாசமான நோக்கு அவர்களை முற்றிலும் விலக்கி வைத்திருக்கிறது. **கறுப்பர்கள் சோம்பேறித்தனமான மனம்போன போக்கில் குடிக்கவும் கும்மாளமிடவும் பணத்தைச் செலவு செய்வார்கள். ஐரோப்பியர்கள் உழைத்தலும் சேமித்தலும் என்ற மரபில் வந்தவர்கள்.** தமது சொந்த விருப்பங்களுக்கு ஏற்ப சுயாதீனமாக மேற்செல்ல அமெரிக்காவின் இந்த மூலைக்கு வந்தவர்கள். அதே மனநிலை இங்கும் தொடர்கிறது.
(VENISULA: Page 149)[15]

ஜாதீய ஒதுக்கலுக்கும் நிற ஒதுக்கலுக்கும் ஐரோப்பியமையவாதத்திற்கும் பிராமணீய மையவாதத்திற்கும் நிறைய உறவுகள் இருக்கிறது. இதனோடு பாலியல்பற்றிய உணர்ச்சிகரமான அறவியல் மதிப்பீடுகளைப் புனிதமெனப் பற்றி நிற்பதிலும் நிறைய பிரச்சினைகள் இருக்கிறது. குவேரா ஐரோப்பிய தென்அமெரிக்கச் சூழலில் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கும், இந்திய ஈழச் சூழலில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருக்கிறது ஆகவேதான் பொலிவியன் டைரிபற்றிய இறுதிப் பராவில் இப்படி எழுதினேன்:

22 வயதில் குவேரா எழுதிய இந்த மோட்டார் சைக்கிள் டயரியைப் படித்து முடித்தபோது, குவேரா பற்றிய மதிப்பு இன்னமும் அதிகரித்தது. உண்மையில் வாழ்வையும் மனிதரையும் நேசிக்கும் ஒவ்வொரு மனிதரின் பின்நோக்கிய நினைவுகளும், முரண்பாடுகளை உள்ளபடி மறுபரிசீலனை செய்கிற மனமும் இவ்வாறுதான் வெளிப்படமுடியும். **ஜாதீய சமூகத்திலிருந்தும், நிறவெறி சமூக அமைப்பிலிருந்தும், காலனியாதிக்க சமூக அமைப்பிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள முயன்ற - முயலும் மூன்றாமுலக மனிதனொருவனின் - மத்தியதர வர்க்க மனிதனொருவனின் உள்முரண்களை சே குவேராவின் மோட்டார் சைக்கிள் டயரி ஒருவருக்கு ஞாபகமூட்டக்கூடும். தன்னை எவ்வெவற்றிலிருந்து அறுத்துக்கொள்ள வேண்டும் என்கிற மறுபரிசீலனையையும் இது உணர்த்தும்.**[16]

பொலிவியன் டைரிபற்றிய அறிமுகத்தை முன்வைத்து நான் எழுப்பிய பிரச்சினைகளில் ஜாதீய, நிறவெறி, ஐரோப்பிய மையவாதப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு பாலியல் பிரச்சினையை மட்டுமே சிவசேகரமும் எஸ்.வி.ஆரும் தொ.மு.சி.யும் தி.க.சி.யும் எடுத்துக்கொண்டார்கள். இன்னும் இடதுசாரிகளை character assasination செய்யத்தான் இவ்வாறு செய்கிறோம் என்றும் குற்றச்சாட்டைச் சுமத்தினார். இந்தப் பிரச்சினையை காலச்சுவட்டில் கண்ணனும் எதிர்கொண்டார்:

தொ.மு.சி. பேசும்போது மார்க்ஸ் மாவோ போன்றவர்களை நாங்க character Assasination பண்றதா சொன்னார். மாவோ மார்க்ஸ் போன்ற ஆளுமைகளின் பாலியல் சார்ந்த அல்லது பிற குறைபாடுகளைப்பற்றிப் பேசுவது என்பது அவங்களை Character Assasinate செய்வதுன்னு இவங்க நம்புறாங்கன்னா நான் character assasination பண்ணனும்னுதான் நினைக்கிறேன். **மாவோவையும் மார்க்ஸையும் characters ஆக நாம build up பண்ணலேன்னா அவங்க பேரைச்சொல்லி லட்சக்கணக்கான மக்களை கொன்னுருக்கமுடியாது. மாவோவையும் மார்க்ஸையும் மனிதர்களாகப் பார்க்காம, குறையுள்ளவர்களா பார்க்காம, அவங்க குறைகளை சூரியனில் உள்ள கரும்புள்ளின்னு வக்காலத்து வாங்கினதாலதான் பெரிய அளவில் அதி**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**காரத்தைக் கட்டியெழுப்பி ஆட்களைக் கொல்ல முடிந்தது.** மார்க்ஸிற்கும் மாவோவுக்கும் சம்பந்தமில்லாத அதிகாரம் அவங்க characters ஐ ஒட்டி எழுப்பப்பட்டது. ஒரு ஆளோட character ஐ assasinate பண்ணுவதன்மூலம் - அதாவது அவர்களது குறைபாடுகளை சுட்டுவதன்மூலம் - இப்படியான அதிகாரத்தை அழிக்கமுடியும்னா தாராளமாகப் பண்ணலாம்.[6]

Character Assasination செய்வது எனது நோக்கமில்லை. கண்ணனது நோக்கமும் அதுவில்லை என்பது மேலே படிக்கத் தெரிகிறது. மனிதர்களைப் புனிதர்களாக்கி அதிகாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டாம் என்கிறார் கண்ணன். மார்க்ஸை மனிதனாக, மானுட குலத்துக்கு பங்களிப்புச் செய்த கோட்பாட்டாளனாகப் புரிந்துகொண்டதால்தான் பிரபல பெண்ணிலைவாதக் கோட்பாட்டாளர் ஷீலா ரோபோத்தம் கம்யூனிஸ்ட் கட்சியின் 150வது ஆண்டுக் கருத்தரங்கை ஏற்பாடு செய்கிறார்.

மாவோவை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டுக் கடவுள் ஆக்கியதால்தான் கலாச்சாரப் புரட்சிப் படுகொலைகள் நிகழ்ந்தன. ஸ்டாலின் கடவுள் ஆகிறார். ரஷ்ய கிழக்கு ஐரோப்பிய மக்கள் அனுபவித்தனர். போல்பொட் கடவுள் ஆகிறார். கம்போடிய மக்கள் அனுபவித்தார்கள். மாவோவை மனிதனாகப் புரிந்து கொண்டு அவரது On Contradiction பங்களிப்பை உயர்த்திப் பிடியுங்கள். மார்க்சை மனித்னாகப் புரிந் துகொண்டு Economic and Philosophic Manu-scriptஐ உயர்த்திப் பிடியுங்கள். வலதுசாரி விமர்சனங்கள் அங்கு நிற்கமுடியாது. விவாதமைய ங்களை மாற்றுவது, விவாத தளங்களை அங்கீகரித்து மீறிச் செல்வதனாலேயே முடியும். அவதூறு என்று முரண்டு பிடிப்பதிலோ, புனிதர் என்று உணர்ச்சிவசப் படுவதிலோ மீட்சி இல்லை. உன்னைப்போல் என்னைப்போல் எமது மேதைகளும் மனிதரே, சக மனிதனுக்கு என்ன பங்களிப்புச் செய்தான் என்று பார் என்று சொல்வதே சரியான பார்வையாயிருக்க முடியும். சிவசேகரம், தொ.மு.சி. எஸ்.வி.ஆர். போன்றோரின் எதிர்வினை எனக்கு ஆச்சர்யமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. உணர்ச்சிவசமான சூழ்நிலைகளில் மௌனம் காப்பது நல்லது. ஆய்வும் படிப்பும் இல்லாது உத்தேசமாக வசைமொழிகள் வீசப்படும் போது கொஞ்சக் காலம் பேசாமல் இருப்பது நல்லது என்றுதான் மௌனமாக இருந்தேன்.



அல்தூஸர்

சே குவேராவின் மோட்டார் சைக்கிள் டயரிபற்றிய கட்டுரையில் **இடதுசாரிகள் எல்லாமே பாலியல் பிறழ்வு உள்ளவர்கள் என்கிற புத்தகத்தை யமுனா ராஜேந்திரன் மறுத்திருக்கிறார். இத்தகைய பிறழ்வுகள், சாதாரண மானுடப் பிரச்சனை, இடதுசாரிகளுக்கு மட்டுமே உரித்தானதல்ல. யாரையும் புனிதர்களாக ஆக்க வேண்டிய அவசியம் இல்லை** என்பதற்காகத்தான் அக்கட்டுரையை எழுதியிருக்கிறார். **இது எப்படி இடதுசாரிகளுக்கு எதிரான கட்டுரையாக மாறிச்சின்னு புரியல. யமுனா ராஜேந்திரன் உண்மையில் இடதுசாரிகளுக்காக வாதாடியிருக்கிறார்.**[6]

என்று மனுஷ்யபுத்திரன் எழுதியபோதும் நான் மௌனம் காத்ததன் காரணம் அதுதான். இன்று ஒற்றைவரித் தகவல்களின் ஆதிக்கம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. வசைகள் நிதானமில்லாமல் வீசப்படுகின்றன.

ஒற்றைவரித் தகவல்களை வைத்துக்கொண்டு மிகவும் கொச்சையாக மார்க்ஸ்பற்றி ஹெலன் டெமுத் பற்றி எழுதிச் செல்கிறார் சங்கமன். அல்தூஸரைப்பற்றியும் இதே தொனியில் எழுதிச் செல்கிறார் மு.பொ.

மு.பொ.வின் சில கூற்றுக்கள் எந்தவிதமான ஆதாரமுமற்ற வெற்று அவதூறுகள்.

காலச்சுவடு பத்திரிகையில் தனது நேர்முகத் தில் மு.பொ. குறிப்பிடுகிறார்:

மார்க்ஸீயத்துக்குள்ளேயே செழுமைப்படுத்தும் போக்கென்பது இன்று பலவகைத் தோற்றங்களைக் கொண்டுள்ளது. முதலாவது மார்க்ஸீயம் முன்வைத்த 'தொழிலாளர்களே புரட்சியின் மையம்' என்ற அடிப்படையே இன்று தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. **ஒவ்வோர் இடத்தின் புரட்சிகரச் சூழலே புரட்சியின் மையங்கள் என்ற பார்வை. மாவோ, சேகுவேரா, றெஜிஸ் எய்ரே, ஹெர்பர்ட் மார்க்குஸ் போன்றோரின் பார்வை விளைவுகள் இவை. இரண்டாவது இவர்களுக்கப்பால் இன்று முக்கியத் துவப்படுத்தப்படும் கிராம்ஸி அல்தூஸர், அமைப்பியல்வாதிகள் போன்றோரின் பார்வையும் பழைய மார்க்சீயப் பார்வைகளை ஒதுக்கிய** புது வியாக்கியானங்களை முன் வைக்கின்றன. இவற்றில் சமயம் கலாச்சாரம் போன்ற அகப் பண்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அல்தூஸர் இவற்றிலிருந்து புறம்பாக மார்க்சியத்திற்கு **விஞ்ஞானரீதியான புது வியாக்கியானங்கள் கொடுத்துக்கொண்டே இரகசியமாக மிஷனரிமாரோடு தொடர்பு கொண்டிருந்தார்.** ஆனால் இன்னும் வேடிக்கையானது என்னவெனில் மார்க்சியத்திற்கு புது வியாக்கியானம் அளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்த அல்தூஸர் **தன் மனைவியைக் கொல்லும் மனநோயாளியாக இருந்தார் என்பதே.** அவர் போட்ட தத்துவம் அவரை அறியவோ அவரைச் சுத்திகரிக்கவோ வழிவகுக்கவில்லையென்றால் அதனது சமூகப்பெறுமானம் இரண்டாம் பட்சமானதே.[10]

1. மாவோ, சே குவேரா, றெஜிஸ் எய்ரே, ஹெர்பர்ட் மார்க்குஸே: புரட்சிகரச் சூழலே புரட்சியின் மையங்கள் என்ற பார்வை கொண்டவர்கள்.

2. கிராம்ஸி,அல்தூஸர், அமைப்பியல் வாதிகள்: பழைய மார்க்சீயப் பார்வையை ஒதுக்கியவர்கள்.

3. அல்தூஸர், ரகசியமாக மிஷனரிமாரோடு தொடர்பு கொண்டவர். தன் மனைவியைக் கொன்ற மனநோயாளி என்றெல்லாம் அடுக்குகிறார் மு.பொ. அப்புறம் சமயம் கலாச்சாரம் போன்றவற்றுக்கு இவர்கள் முக்கியத்துவம் தருகிறார்கள் என்கிறார்.

மாவோ கிராமங்களைக் கொண்டு நகரங்களைக் கைப்பற்றுவது பற்றிப் பேசினார். குவேரா Foco Theory பேசினார். மார்க்யூஸ் மாணவர்கள் நிராகரிக்கப்பட்டோர், புரட்சிகர குணாம்சம் கொண்டோர் என்றார். மித்திராண்டுக்கு வெளிவிவகார ஆலோசகரானார் எய்ரே. கிராம்ஸியின் அனைத்திலும் மேலாண்மைக்கெதிரான போராட்டம்பற்றிப் பேசுகிறார். அல்தூஸர் புரட்சியின் உந்துவிசை என்றும் ஒன்றே அல்ல என்கிறார். அமைப்பியல்வாதிகள் எல்லோரும் மார்க்ஸியவாதிகள் அல்லர். பல்வேறு ஆட்கள் மார்க்ஸிய எதிர்ப்பாளர்கள்.

மு.பொ.இன் வாய்ப்பாடு இவ்வாறு அமைகிறது: புறம்: பொருளாதாரம் x அகம்: சமயம், கலாச்சாரம். மார்க்சீயம் ஏதோ அகத்துக்கு முக்கியத்துவம் தராத மாதிரியும் இப்போதுதான் அதுபற்றி கவனம் குவித்திருப்பதாகவும் புரிந்து கொள்கிறார். மார்க்ஸ் அகம் என்று மு.பொ. குறிப்பிடுகிற தத்துவம்/மதம் என்று தொடங்கித்தான் பொருளாதார வாதத்திற்கு வந்து சேருகிறார். விடுதலை இறையியல் மார்க்சீயத்தின் பங்களிப்புத்தான். இந்துப் பண்பாட்டாளர்கள் மார்க்சீயத்தின் ஆன்மீக அம்சங்களைக் கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. அல்தூஸர் விஞ்ஞானரீதியான புது வியாக்கியானம் கொடுக்கவில்லை. கிறிஸ்தவ மிஷனரிமாரோடு இரகசியத் தொடர்பும் கொள்ளவில்லை. தத்துவத்துக்கு விஞ்ஞான வடிவம் (Scientism) கொடுக்க முனையும் போக்கு அமைப்பியல்வாதிகள் எல்லோருக்கும் உரியது. அல்தூஸர் கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர்களிடம் பேசும்போது: மனிதாபிமானம், மனிதாபிமானம் என்று பேசுகிறீர்களே, தொழிலாளிக்கு விவசாயிக்கு அதில் கவலைப்பட ஏதுமுண்டா? எவரேனும் அதைப்பற்றி உங்களிடம் கேட்கிறார்களா? என்கிறார். 'இல்லை' என்கிறார் கட்சிப் பொறுப்பாளர். அல்தூஸர் ஸ்டாலினியத்திற்கும், மனித முகத்துடன் சோசலிசம் என்று பேசியவர்களுக்கும் இடையில் ஒரு கோட்பாட்டை எட்ட முயன்றவர்.

அல்தூஸரின் தந்தை தீவிர கத்தோலிக்கர். அல்தூஸர் கத்தோலிக்க முறைப்படி வளர்க்கப்பட்டவர். கத்தோலிக்க நம்பிக்கையை விட்டொழித்தவர். ஆயினும் கத்தோலிக்கருக்கும் மார்க்ஸிஸ்டுகளுக்கும் உரையாடலை விழைந்தவர். வத்திக்கானில் உள்ள 'மார்க்சீய எதிர்ப்பாளர்கள்'பற்றி அறிந்தவர். அவர் ஜான் போலைச் சந்திக்க விரும்பியதை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். மாவோவையும் அவர் சந்திக்க விரும்பியிருக்கிறார். ஜான் பாலும் 'அந்தப் பிரெஞ்சுத் தர்க்கவாதிதானே. எனக்குத் தெரியும்' என்றும் சொல்லியிருக்கிறார். அல்தூஸரின் வரலாறு இதையெல்லாம் எழுத்தில் சொல்கிறது. கத்தோலிக்கருடனான அல்தூஸரின் கோட்பாட்டுரீதியான உரையாடல்களில் எந்த இரகசியமுமில்லை. ஹென்றி லெவியின் விவரணப் படமான French Intellectuals தொகுதியிலும் இந்த விவரங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அல்தூஸர் பற்றிய இந்தக் கூற்று எந்தவிதமான ஆதாரமும் இல்லாத கொச்சையான அவதூறு தவிர வேறில்லை.

அல்தூஸரின் மனைவியான ஹெலனுக்கும் அல்தூஸருக்கும் இருந்த காதல் தீவிரமான அன்பு-வெறுப்பு (love-hate) அடிப்படையிலானது. அல்தூஸர் கோட்பாட்டுரீதியில் மனைவியைக் கேட்காது ஏதும் செய்தவரல்ல; ஆனால் ஹெலன் அல்தூஸரின் கடுமையான விமர்சகராக இருந்தவர். ஹெலன் அல்தூஸரை மறுப்பதென்பது அவரது கோட்பாட்டை இருத்தலை, பங்களிப்பை மறுப்பது என்று அல்தூஸர் புரிந்துகொண்டிருந்தார். ஹெலன்மீது பயம் கொண்டிருந்தார். ஹெலன் அல்தூஸர் மடியில் படுத்திருக்கும்போது அவர் கையாலேயே இறந்துவிட வேண்டும் எனச் சொல்லியிருக்கிறார். அல்தூஸர் ஹெலனின் சாவு ஒருவகையில் தனது தற்கொலை என்கிறார். தனது கோட்பாடு ஒரு மோசடி என்ற பயம் அல்தூஸருக்கு இருந்திருக்கிறது.

அதைக்கொலை என எந்த மருத்துவரும் சொல்லவில்லை. குற்றவாளி அல்லது குற்றவாளி இல்லை என சொல்லிக்கொள்கிற மனநிலையில் அல்தூஸர் இல்லை என நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஹெலனின் கழுத்து நெரிக்கப்பட்ட எந்தப் புறத் தடயமும் இல்லை. ஹெலன் எதிர்த்துப் போராடியதற்கான எந்தத் தடயமும் இல்லை. பொருட்கள் வைத்தது வைத்தபடி இருந்தது. மனைவியைக் கொலை செய்த மனநோயாளி எனும் வார்த்தையை மனிதமனம்பற்றி அக்கறைகொண்ட கலைஞன் சொல்கிற வார்த்தையில்லை.

லூயிஸ் அல்தூஸரின் மிகநெருங்கிய நண்பரும் ஆங்கிலக் கல்வியாளருமான டக்ளஸ் சொல்கிறார்:

> **அல்தூஸரின் கோட்பாட்டுச் செயல்பாடுகள் எப்போதுமே வன்முறையெனும் கருத்தினாலேயே** (idea of violence) **சூழப்பட்டிருந்தது.** ஒரு பண்பாளரான (gentleman) மனிதனின் உள்ளார்ந்த வன்முறை தொடர்பான எழுத்துக்களில் எப்போதும் ஆபத்திருக்கிறது. ஆனால் நான் எதிர்நோக்கும் பிரச்சினை என்னவெனில், நான் அறிந்த அல்தூஸர் (அல்லது நான் அறிந்திருப்பதாக நான் நினைத்திருக்கும் அல்தூஸர்) திட்டமிட்டு வேண்டுமென்றே தன் மனைவியைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> கொன்றிருப்பார் எனக் காண்பது எனக்குச் சிரமமாயிருக்கிறது. **சம்பவங்கள் அனைத்திலும் இறந்துவிட்ட பெண்ணின் சோகத்தை நிராகரித்துவிடாமல், அல்தூஸர் மீதும் ஒருவர் நிறைய பரிதாபம் கொள்ளவே செய்வார்.** பாதிக்கப்பட்ட ஒருவரின் (victim) உணர்வுகளை அவரது சுயசரிதம் அழுத்தமாக முன்வைக்கிறது.[11]

அல்தூஸரின் வரலாற்றை அறிந்தவர்களும், அவரது அரசியல், அறவியல், உளவியல் தத்துவக் கேள்விகளை அறிந்தவர்களும் மு.பொ. மிகச் சாதாரணமாக வீசுகிற விசயங்களை ஒதுக்கிவிட்டுப் போய்விடுவார்கள். அல்தூஸரின் வரலாறு ஒரு சுய விமர்சனம்; ஒரு சுயதேடல்; ஆத்மரீதியான பயணம். அவர் தனக்குத் தெரிந்ததைச் சொல்ல வருகிறார். தனது நண்பர்களுக்கும் தன்னை அறிந்திராதவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்:

> ஒரு இறுதி வார்த்தை, **தங்களுக்கு மேலதிகமாகத் தெரியும் என்று நம்புகிறவர்களோ அல்லது மேலதிகமாகச் சொல்ல முடியும் என்று சொல்கிறவர்களோ அவ்வாறு செய்வதற்குப் பயப்படமாட்டார்கள் என நான் நம்புகிறேன்.** அவர்கள் அதன் மூலம் நான் வாழ்வதற்கு மட்டுமே உதவி செய்தவர்கள் ஆவர்.[12]

மு.பொ. இதற்கு மேலும் அல்தூஸரின் ரகசியங்கள்பற்றியோ, அவரது மனைவியின் மரணத்துக்கான காரணங்கள் பற்றியோ ஏதும் சொல்லமுடியுமானால் அது அல்தூஸருக்குச் செய்த உதவி மட்டுமல்ல நமக்கும் செய்த உதவியாக இருக்கும். மு.பொ. அல்தூஸர் பற்றிச் சொன்ன அதே தொனியில் சங்கமன் மார்க்ஸ் பற்றிச் சொல்லிச் செல்கிறார்:





**சுந்தர சுகன்**
அனைத்து தொடர்புகளுக்கும்:
அம்மாவீடு, சி. 46 இரண்டாம் தெரு
நகராட்சிக் குடியிருப்பு
தஞ்சாவூர்;-613007, இந்தியா.


> மார்க்சீயம் என்ன சொல்லும்? அதுவும் ஆணாதிக்க முனைப்புக்கொண்ட தத்துவம்தான். அது மட்டுமல்ல **மார்க்ஸ் மாதிரி தன் மனைவியைச் சுரண்டியவர்** வேறு யாரும் இருக்கமுடியாது. முழுநேரத்தையும் பிரிட்டிஷ் மியூசியத்தில் கழித்த மார்க்ஸ் **தன் உடல் இச்சையைத் தீர்ப்பதற்காகத்தான் மனைவியிடம் வந்தார்.** அவளைத் தொடர்ந்து கர்ப்பவதியாக்கினார். வறுமையில் வாட விட்டார். அது மட்டுமல்ல. **தன் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்ள ஒரு 'வைப்பாட்டியை' வேறு வைத்துக்கொண்டார்.** இதையும் விடக் கேவலமான சுரண்டல்தான் தன்மூலம் வைப்பாட்டிக்குக் கிடைத்த குழந்தைக்கு தான் அப்பனென ஏற்றுக்கொள்ள மறுத்தது. அப்படிப்பட்டவரின் தத்துவத்தில் **பெண்களை ஆண்கள் சுரண்டுவதுபற்றிய பேச்சை எதிர்பார்க்கமுடியாது.**[7]

சங்கமன் தனது உள் விமர்சகன் எழுப்பும் கேள்வியாக இதை முன்வைக்கிறார். தர்மு சிவராம் தனக்குத்தானே கேள்வி கேட்டுக்கொண்டு பதில்களை முன்வைத்தது மாதிரியானதுதான் இது. ஆயினும் அவற்றில் இருந்த தீவிரத்தன்மையோ விசாரணையோ சங்கமனின் உள் உரையாடலில் இல்லை.

பிரிட்டிஷ் மியூசியத்தில் மார்க்ஸ் என்னென்ன படித்தார். ஆசியப் பொருளாதாரம், பிரெஞ்சு, ஆங்கிலம், சமஸ்கிருதம், ஐரோப்பியப் பொருளாதாரம், வரலாறு எல்லாம் படித்தார். அந்தப் படிப்பின் அறுவடையாகத்தான் மூலதனம் நூல் எழுதி முடிக்கப்பெற்றது. மார்க்சுக்கும் ஜென்னிக்கும் இருந்த உறவை எலியனார் மார்க்ஸ் நினைவுகளில் பார்க்கலாம். வாழ்வு முழுக்க சந்தோசமான தாம்பத்தியம் கொண்டிருந்தவர். கணவனை நேரில் பார்த்தாலே சிரித்துவிடுவோம் என்பதால் நேரில் பார்க்கமுடியாது தவித்தவர். அவர்கள் வாழ்வில் வன்முறை இல்லை. இலண்டனில் இருந்தபோது மார்க்சுக்கு தலைமுறை சொத்துக்கள் வந்தது. 20 ஆண்டுகள் எங்கெல்ஸ் உதவினார். மார்க்சின் வறுமைக்குக் காரணம் அவரது இடையறாத மானுட விடுதலைக்கான தேடல்தான். ஆகவேதான் எங்கெல்ஸ் 'எல்லாவற்றைக் காட்டிலும் மார்க்ஸ் ஒரு புரட்சியாளன்' என்கிறார்.

சங்கமனின் சொற்கள் ஆத்திரமூட்டவென்றே எழுதப்பட்டவை. இச்சை தீர்த்தல், சுரண்டல், வைப்பாட்டி என்று சகட்டுமேனிக்கு எழுதிக்கொண்டு போகிறார். இதைப் படிக்கிறபோது மிகமோசமான இந்து சனாதனப் பார்வைக்கு சங்கமன் ஆட்பட்டிருப்பதுதான் உடனடியாகத் தெரிகிறது. அன்பு, காதல், பாலுறவு, உடல், ஆன்மா போன்றவற்றுக்கு இடையிலான தர்க்கபூர்வமான உறவை சங்கமன் புரிந்துகொள்ளவேயில்லை. ஹெலன் டெமூத் மார்க்ஸ், ஜென்னி சாவுவரை அவர்கள் வீட்டிலேயே இருந்தவர். எலியனார் மார்க்சின் செல்லம். ஜென்னி, ஹெலன் டெமூத் உறவு அன்பு மயமானது. ஜென்னியின் தாயார்தான் ஹெலன் டெமூத்தை அனுப்பியவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த ஆண்-பெண் உறவையும் இச்சை தீர்த்தல், சுரண்டல் என்று சொல்லிவிட முடியும். 'வைப்பாட்டி' என்று வசைச்சொல்மாதிரி சங்கமன் பாவிக்கிற பெண்ணிலும் அன்பு இருந்திருக்கும். அவள்மீது உறவு கொண்டவனுக்கும் அன்பு இருந்திருக்கும். 'மோகமுள்' யமுனாவையும் தாயையும் அவளது ஆணையும் இப்படியல்லாது எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? இந்து சனாதன மதிப்பீடுகளையும் கிழக் கத்திய அறவியல் மதிப்பீடுகளையும் வைத்துக் கொண்டு வைப்பாட்டி போன்ற பதங்களைப் பாவிப் பது அநாகரீகம் ஆகும்.

மார்க்ஸிடம் பெண்நிலைவாத எதிர்ப்பைக் காண் கிற, சுரண்டலைக்காண்கிற சங்கமனுக்கு, உலகப் புகழ்பெற்ற பெண்நிலைவாதியும் சார்த்தரின் துணை வியுமான டீ போவுவாவின் சமீபத்திய நூலிலிருந்து ஒரு எடுத்துக்காட்டு தருகிறேன்.

> அமெரிக்காவுக்கு விஜயம் செய்த சந் தர்ப்பத்தில், மூன்று மாதங்கள் நாங்களி ருவரும் சேர்ந்து வாழ்வது (living together) தங்களது எழுத்துப் பணிகளைப் பாதிக்கும் என்று நெல்சன் அல்கரன் போவுவாவிடம் சொன்ன போது போவுவா எழுதுகிறார்:
>
> 'என் நெல்சன். நான் நல்லபடியாக இருப் பேன். நீயே பார். நான் சாப்பாடு சமைப்பேன். தரையைக் கழுவுவேன். எனது புத்தகங் களை நான் எழுதுவதைக் காட்டிலும் உன் புத்தகங்களை நான் எழுதுவேன். பகல் பொழுதுகள் மாதிரி இரவிலும் 10 முறைக்கும் மேலாக உன்னோடு காதல் புரிவேன்.'
>
> The Second Sex எழுதிய பேனாவிலி ருந்து வந்த வார்த்தைகள் இவை. முதலா ளித்துவ நுகத்தடியின் கீழான வீட்டு வேலை களைத் (house keeping) தவிர்ப்பதற்காக பல ஆண்டுகள் ஹோட்டல்களிலேயே வாழ்ந் தவரிடமிருந்து வந்த வார்த்தைகள் இவை. இது அவலச்சுவை. அதேவேளை ஒரு இனிய ஞாபகமூட்டல். காதல் மிக உக்கிரமான சித் தாந்தப் பார்வைகளைக் கூடக் கீழ்ப்படுத்தி விடக் கூடியது.[13]

இதே விடயத்தை ஹெலன் டெமூத், கார்ல் மார் க்ஸ் உறவுக்கும் நாம் பொருத்திப் பார்க்கமுடியும். அன்பும் காதலும் பராமரிப்பும் பொறுப்புணர்வும் உக் கிரமான சித்தாந்தங்களைக்கூட கீழ்ப்படுத்திவிட முடியும். கார்ல் மார்க்ஸ் அன்று நிலவிய படித்த வர்க்க விக்டோரியன் பாலியல் மதிப்பீடுகளுக்கு ஆட்படுவதினின்று தன்னை விடுவித்துக்கொள்ள முடியாத சூழலின் கைதியாக இருந்தார் என்றும் நாம் இதை விளக்கிவிட முடியும். குடும்பம்-தனிச்சொத்து-அரசு ஆகியவற்றின் தோற்றம்பற்றி எங்கெல்ஸ்தான் எழுதினார். பெண்நிலைவாதத்தின் தோற்றங்களை மார்க்சிய பெண்போராளிகளிடம் காணமுடியும். பல் வேறு தீவிர பெண்நிலைவாதங்களை வைத்துக் கொண்டு மார்க்சையும் மார்க்சியவாதிகளையும் வெகுசாதாரணமாக சங்கமன் மாதிரி கொச்சைப்ப டுத்திவிட முடியாது.

இந்த விவாதங்களிலெல்லாம் துரதிர்ஷ்டவசமா னது என்னவெனில், வலதுசாரி விமர்சனங்கள் எந்த விஷயங்களை வைத்து உணர்ச்சிவசமான வார்த் தைகளை உசுப்பி சுயசந்தோஷப்படுகிறதோ அதே வார்த்தைகளைத்தான் மையமானதாகக்கொண்டு உணர்ச்சிவசமான வார்த்தைப் பிரயோகங்களைக் கையாள்கிறார்கள். இந்து சனாதன/கிழக்கத்திய பாலியல்/ஜாதீய/நிற மதிப்பீடுகளைத்தான் இருவ ருமே மையமாகக்கொண்டு விவாதிக்கிறார்கள். மார்க்சின் தனிமனித குணச்சித்திரம் (character) தான் மார்க்சின் ஆளுமை (personality) என்று வல துசாரிகள் சமப்படுத்த அதே இடறுகுழியில் மார்க் சீயவாதிகள் வீழ்ந்து, அவதூறு பொய் என்று அதிர்ச் சியுறுகிறார்கள். வலதுசாரிகள் பால் ஜோன்சன் போல் பொய் சொல்வதற்கு வெட்கப்படுவதில்லை. அதைப் போல் ஏன் இடதுசாரிகளும் செய்யவேண் டும்? தமிழ்ச்சூழலில் ஆதாரபூர்வமாக ஆவணங்களு டன் ஆய்வுகளுடன் விவாதிக்கும் நாகரீகம் இன்னும் தோன்றவில்லை. உத்தேசங்கள், ஞாபகங்கள், செவிவழி அறிந்தவை போன்றவற்றைக் கொண்டே விவாதிக்கிறார்கள். தமக்கு வழங்கப்பட்ட தகுதி களை, இடங்களை துஸ்பிரயோகம் செய்கிறார்கள். மரியாதையற்று தனிநபர் தாக்குதல் தொடுக் கிறார்கள்.

தனிமனிதனின் குணச்சித்திரம் (character) என் பது பெரும்பாலும் தன்காலத்தின் கட்டுப்பாடுகள், மதிப்பீடுகள் போன்றவற்றிலிருந்து முற்றிலும் தன்னை விடுவித்துக்கொள்ள முடிவதில்லை. தனது இருப்பு குறித்த கேள்வி இங்கு முக்கியமான சமூகக் கேள்வியாக இருக்கிறது. எதிரிகள் நிறைந்த சூழ லில் இது இன்னும் சிக்கலாகிவிடுகிறது. ஆயினும் அவன் ஆளுமை (personality) என்பது தன்னை விடு வித்துக் கொள்வது நோக்கிய கேள்வியாகி, கோட் பாட்டுத் தேடலாகி, சமூகச் செயல்பாட்டுக்கான அறி வுத்துறைப் பங்களிப்பாகிறது. ஒரு புரட்சியாளன் இந்த சுயமுரண்பாட்டில்தான் சிக்கித் தவிக்கிறான். ஆகவேதான் மனிதனை நேசிக்கத் தெரிந்த இவ னுக்கு சிலவேளை தனிமனிதனைப் பரிவுடன் புரிந்து கொள்ள முடியாமல்போகிறது. மனிதனை நேசிப்ப தன்பொருட்டு வெறுப்பவனும் இவன்தான். அல்தூஸ ரின் anti-humanism கோட்பாட்டில் இருக்கிற மனிதா பிமானத்தை நாம் இப்படித்தான் புரிந்துகொள் ளமுடியும்.

மார்க்ஸை கடவுளாக அல்ல, புனிதனாக அல்ல, மனிதனாகப் புரிந்துகொள்வோம். மானுடனை நோக் கிச் சதா சிந்தித்த, ஓய்வு ஒழிச்சலின்றிச் சிந்தித்த அந்த நிரந்தர மூளையைச் சுவீகரித்துக்கொள் வோம். நிஜங்களை ஒப்புக்கொள்வோம். கடந்து வெல்வோம்.

எதிர்காலம் மார்க்ஸ் எனும் மானுடனுக்குரியது.

**அடிக்குறிப்புகள்:**

*1. ஏழுகடல்தாண்டி: சே குவேராவின் மோட்டார் சைக்கிள் டயரி : யமுனா ராஜேந்திரன்*
*மூலப் பிரசுரம்: நாழிகை/ஜுலை 1995/ இலண்டன்*
*மறுபிரசுரம்: காலச்சுவடு/ஜுன் 1996/இந்தியா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. சிவசேகரம் கடிதம்
காலச்சுவடு ஏப்ரல்-ஜுன் 1997/தமிழ்நாடு
3. சிவசேகரம் கடிதம்
சரிநிகர்/செப்டெம்பர் 17-30, 1998/இலங்கை
4. சலபதி: காலச்சுவடு விமர்சனக்கூட்டம்
காலச்சுவடு 16/1997/இந்தியா
5. Karl Marx: from Trier to Highgate by Judith Yuille for
Friends of Highgate Cemetry 1991/ London UK
Published on behalf of FOHC in aid of restoration and maintenance
work at Highgate
24 பக்கக் குறுநூல்
பக்கங்கள் 10 மற்றும் 19.
ஹைகேட் கல்லறைத்தொகுதி இரண்டு பகுதிகளால் ஆனது. ஒன்று மேற்குச் சமாதி; மற்றயது கிழக்குச் சமாதி. மார்க்ஸின் ஜென்னி, எலியனார், டெமூத் உள்பட ஆறுபேர் புதைக்கப்பட்ட அக்கல்லறை கிழக்கு சமாதியில் உள்ளது. உலகின் பிரபலமான மார்க்ஸிய அறிஞர்களும் அச்சமாதியில் புதைக்கப்பட்டுள்ளனர்.
மேற்குச் சமாதி (west cemetry) அரச வம்சத்தவருடையது. அதற்கு நுழைவுக்கட்டணம் 6 பவுண்டுகள். மியூசியம், புத்தகக்கடை போன்றன உண்டு. கிழக்குச் சமாதி (East cemetry) சாதாரண மனிதர்களுடையது. கார்ல் மார்க்ஸினால் மட்டுமே முக்கியத்துவம் பெறும் சமாதி. நுழைவுக்கட்டணம் 1 பவுண்டு. மியூஸியமும் இல்லை. புத்தகக்கடையும் இல்லை. அலுவலகமும் இல்லை. ஒரு பாழடைந்த அறையும் ஒரு பராமரிப்பாளருமே உண்டு. அங்கு விற்கப்படுபவை மார்க்ஸின் கல்லறை படமும், நண்பர்கள் வெளியிட்ட குறுநூலும் தான். கல்லறையைப் பராமரிக்க அரசு உதவிகள் ஏதும் இல்லை. 1956ம் ஆண்டு இருநூறுபேர் மட்டுமே கலந்துகொள்ள மார்க்ஸின் கல்லறை இவ்வடிவில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்முயற்சியில் மார்க்ஸின் மார்பளவுச் சிலையுடன் அமைக்கப்பட்டது.
அந்தக் குறுநூலின் விற்பனை மிகுந்த ஆத்மீக ரீதியாக பொறுப்புணர்வுடன் மார்க்ஸ் கல்லறையைப் பராமரிக்க புனரமைக்க பயன்படுத்தப்படுகிறது. அது துண்டுப் பிரசுரம் அல்ல. ஆத்ம தாகம் கொண்ட மனிதர்களின் ஆய்வுக்கையேடு.
6. தொ.மு.சி. ரகுநாதன் -காலச்சுவடு 16/1997/இந்தியா
7. சே குவேரா: மோட்டார் சைக்கிள் டயரி
நாழிகை : ஜுலை 1997/பிரித்தானியா
8. சே குவேரா: மோட்டார் சைக்கிள் டயரி
நாழிகை : ஜுலை 1997/பிரித்தானியா
9. மோட்டார் சைக்கிள் டயரி: விமர்சனம் யமுனா ராஜேந்திரன் -காலச்சுவடு 14/1996/தமிழ்நாடு
10. கண்ணன்
காலச்சுவடு 16/டிசம்பர் 96-பிப்ரவரி 97/தமிழ்நாடு
11. மனுஷ்ய புத்திரன்
காலச்சுவடு 16/டிசம்பர் 96-பிப்ரவரி 97/தமிழ்நாடு
12. மு. பொன்னம்பலம்
நேர்காணல்: மு. புஷ்பராஜன்
காலச்சுவடு/ஜுலை செப்டெம்பர் 1998/தமிழ்நாடு
13. Douglas Johnson
Page xvii : Introduction
The Future Lasts A Long Time by Louis Althusser
Vintage/1993/London, U.K.
14. Louis Althusser (Page 286)
The Future Lasts A Long Time
Vintage/1993/London, U.K.
15. சங்கமன் -பெண்ணியத்தின் ஒழுக்கம் என்ன?
சரிநிகர்/ஜனவரி, 29 - பிப்ரவரி, 11/1998
16. Beloved Chicago Man: Letters to Nelson Algren
1947-1964 by Simon de Beauvoir
Review : Sarah Dunant
The Observer: 13 September 1998/ U.K.


# காவலூர் ஜெகநாதன் நினைவு அறக்கட்டளை



KAVALOOR JEGANATHAN
MEMORIAL FOUNDATION

**காவலூர் ஜெகநாதன்:** காவலூரின் கரம்பொன் என்ற கிராமத்தில் 1955ம் ஆண்டு பிறந்த ஜெகநாதன், தமது 20வது வயதில் எழுத்துலகில் பிரவேசித்தார். இவர் முந்நூறுக்கும் அதிகமான சிறுகதைகளையும், பல நாவல்கள், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.
இவர் ஈழத்தில் நடைபெற்ற பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றவர்,
கமத்தொழில் திணைக்களத்தில் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தராக பணியாற்றி வந்த இவர், 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழகத்திற்குப் புலம் பெயர்ந்தார். அங்கு இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் 1985ம் ஆண்டு மே மாதம் 31ம்திகதி படுகொலைசெய்யப்பட்டார்.

## வருடந்தோறும் பரிசு

இந்த அறக்கட்டளையில் இருந்து - காவலூர் ஜெகநாதன் நினைவாக சிறந்த சிறுகதைக்கும், சில்லையூர் செல்வராசன் நினைவாக சிறந்த கவிதைக்கும் வருடந்தோறும் தனித்தனியே 50ஆயிரம் இலங்கை ரூபாய்கள் பரிசாக வழங்கப்படும். பரிசுக்குரிய படைப்புக்கள், மூன்று இலக்கிய அறிஞர்களால் பரிசீலிக்கப்பட்டுத் தெரிவுசெய்யப்படும். ஈழத்து சிறுகதை யாசிரியர்கள், கவிஞர்களின் படைப்புக்கள் (அவர்கள் எந்த நாட்டிற்குப் புலம் பெயர்ந்திருந்தாலும்) மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும். படைப்புக்கள் சஞ்சிகைகளிலோ பத்திரிகைகளிலோ குறித்த ஆண்டிற்குள் பிரசுரமானவையாக இருக்கவேண்டும்.
1998ம் ஆண்டிற்கான படைப்புகள் பரிசீலனைக்காக இருப்பதால், ஆக்கதாரர்கள் தமது படைப்புகளை, வெளிவந்த பத்திரிகை /சஞ்சிகை பெயரையும் காலத்தையும் குறிப்பிட்டு அறக்கட்டளைக்கு அனுப்பி உதவலாம். மற்றும் இலக்கிய ஆர்வலர்களும், இதில் ஆர்வம் காட்டி உதவுவது அறக்கட்ட ளையின் நோக்கத்தைச் செவ்வனே பூர்த்தி செய்ய உதவும்.

தொடர்புகளுக்கு:
**KAVALOOR JEGANATHAN
MEMORIAL FOUNDATION
51 RUE DE LA PARABOLE,
95800 CERGY, FRANCE.
TEL : (00 33) 01 30 32 57 25**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோணல் பக்கங்கள்

சாரு நிவேதிதா

**'சொல்** புதிது' என்று ஒரு புதிய பத்திரிகை வந்துள்ளது. அதன் தலையங்கத்திலிருந்து ஒரு பகுதியைத் தருகிறேன்:

"ஒரு சமூகத்தின் சிந்தனைப் போக்குகளைத் தீர்மானிப்பது அதன் அறிவார்ந்த மையம். தமிழ் சமூகத்தின் அறிவார்ந்த மையம் இன்றுவரை மார்க்சிய அணுகுமுறைகளினாலும் நவீனத்துவப் பார்வையினாலும் தீர்மானிக்கப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இவ்விரு போக்குகளுக்கும் வெளியே உள்ள விஷயங்கள் இங்கு சரியான முறையில் அறிமுகமாகவேயில்லை. அறிமுகப்படுத்தப்பட்ட சில விஷயங்களும் தெளிவுடனும், வாசகனை அடையும் நோக்கத்துடனும் தரப்படவில்லை. மாறாக, வெறும் அச்சுறுத்தும் விஷயங்களாகவே இருந்தன... மார்க்ஸிய, நவீனத்துவ அணுகுமுறைகள் பாரம்பரியத்தையும் செவ்வியல் மரபுகளையும் புறக்கணிக்கும் தன்மை கொண்டவை..."

'ஒரு அறிவார்ந்த மையத்திலிருந்துதான் ஒரு சமூகத்தின் சிந்தனைப் போக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன' என்ற நம்பிக்கை தகர்க்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதைச் செய்தவர்கள் அமைப்பியல்வாதிகள். 'அறிவு என்பது ஐரோப்பிய மூளையிலிருந்தே உற்பத்தியாகிறது. கறுப்பர்களும் பழுப்பு நிறத்தவரும் அறிவிலும் கலாச்சாரத்திலும் மழுங்கியவர்கள்' என்ற வெள்ளை பாஸிஸத்தைத் தனது Savage Mindஇல் நிர்மூலமாக்கியவர் லெவி ஸ்ட்ராஸ்.

அத்தகைய பாஸிஸத்தோடு தொடர்புடையது தான் அறிவை மையமாகப் பார்க்கும் 'சொல் புதிது' தலையங்க வாசகமும்.

மீன் பிடிப்போரின் அறிவு, வேட்டைக்காரரின் அறிவு, பூமிக்கு அடியிலிருந்து நீரைக்கண்டு பிடிப்போரின் அறிவு, கஞ்சா புகைப்பவரின் அறிவு, வர்மக் கலைஞரின் அறிவு, பேய் ஓட்டுபவரின் அறிவு, கால்நடை மேய்ப்போரின் அறிவு, உழவனின் அறிவு, ஒன்றுமே செய்யாதவனின் அறிவு என்று அறிவு பல தரப்பட்டு விரிந்து கிடக்கிறது.

மானுடவியல் கற்றுத்தரும் பாலபாடம் இது. உலகமெங்கினும் உள்ள தொல்கதைகளும் மற்றும் வாய்மொழிக் கதைகளும் இதற்கு கலாபூர்வமான சாட்சிகளாய் இருந்து வருகின்றன.

ஆனால் இது எதையும் அறிந்துகொள்ளாமல், அறிந்துகொள்ளும் முனைப்புக்கூட இல்லாமல் தமிழில் ஒரு கூட்டம் தொடர்ந்து 'அறிவு எதிர்ப்பு' கோஷத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறது. உண்மையில் அறிவார்ந்த மையங்களை மறுப்பதுதான் பின்-நவீனத்துவம் என்பதை அறிந்துகொள்ளாத 'அறிவு எதிர்ப்பு' கோஷ்டியானது புதிய அறிதல் முறைகளைக் கண்டு பீதிகொண்டு அறிதல் என்பதையே எதிர்க்க ஆரம்பித்துவிட்டது.

அதன் பல்வேறு வெளிப்பாடுகளுள் ஒன்றுதான் மேற்கண்ட தலையங்க வாசகங்கள். தலையங்கம் எழுதிய தம்பிகளுக்கு புதியன அனைத்துமே 'அச்சுறுத்தும்' விஷயங்களாகவே இருந்து வருகின்றன. ஒரு புரட்சியாளருக்கு துப்பாக்கி அச்சுறுத்தலாக இருக்காது. ஒரு சைத்ரிகருக்கு தூரிகை அச்சுறுத்தலாக இருக்காது. ஒரு நாடோடிக்கு வனங்களும் மலைகளும் அச்சுறுத்தலாக இருக்காது. ஆனால் தமிழ் இலக்கியத் தம்பிகளுக்கு புத்தகம் என்பது அச்சுறுத்தலாக இருக்கிறது. ஃபூக்கோ என்ற பெயரைச் சொன்னமாத்திரத்தில் அடிக்க வருகிறார்கள். படிப்பு, கற்றுக்கொள்ளல், சிந்தனை என்பதெல்லாம் கெட்ட வார்த்தைகளாய் புழங்கி வருகின்றன.

தமிழ் இலக்கிய உலகில் சில ஆண்டுகளாக பரவிவரும் ஒரு பொதுவான சருமவியாதி இது.

தமிழ் இலக்கியவாதிகளிடம் நான் காணும் மற்றொரு பொதுத் தன்மை - சமூகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதே இவர்களுக்குத் தெரியாமல் இருப்பது. சமூகத்திலிருந்து வெகுதூரம் விலகி, ஏதோ ஓர் கற்பனா உலகத்தில் தூக்கத்தில் நடக்கும் வியாதியஸ்தர்களைப் போல் இவர்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

எனக்கு இப்படிப்பட்ட கலை வியாதிகள் எதுவும் இல்லாததால் தமிழின் வெகுஜன கலாச்சாரம் மற்றும் அரசியல் சார்ந்த அனைத்தையும் கவனித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகிறேன். (இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் தொலைக்காட்சிப் பெட்டியில் ஒரு சிறுமி தனக்கு முன்னால் உள்ள சினிமாத் திரையில் அரைகுறை ஆடையுடன் ஆடிக்கொண்டிருக்கும் நடிகையின் உதட்டு அசைவுக்கு ஏற்ப முக்கல் முனகல் ஒலியெழுப்பிப் பாடிக் கொண்டிருக்கிறாள் - 'சப்தஸ்வரங்கள்' நிகழ்ச்சி - 'சன்'டி.வி.)

பிரபல தினசரி ஒன்றில் ஆசிரியராக இருக்கும் என் நண்பருக்கு வரும் வாசகர் கடிதங்களை சமயங்களில் வாசித்திருக்கிறேன். அஞ்சலகத்திலிருந்து சாக்குமூட்டைகளில் கொண்டு வரப்படும் அக்கடிதங்களில் இலக்கியத்திற்கான கச்சாப் பொருட்களையும், மனிதவாழ்வின் அவலங்களையும் நான் கண்டிருக்கிறேன். அக்கடிதங்களின் மற்றொரு விசேஷம் - ஆயிரம் கடிதங்களை எடுத்தால் அதில் 900 கடிதங்கள் பெண்களால் எழுதப்பட்டவை. இதில் 800 கடிதங்கள் பாலியல் பிரச்சினை சம்பந்தப்பட்டவை.

போஸ்ட் கார்டில் வந்த ஒரு கடிதத்தைப் பாருங்கள்:

"எனக்கு வயது 32. இரண்டு குழந்தைகள். அன்பான கணவர். வசதிக்கும் குறைவில்லை. இவ்வளவு இருந்தும் இரண்டு தடவை தற்கொலைக்கு முயற்சி செய்துவிட்டேன். காரணம் இதுதான். எனக்கு இரவு பகல் என்று இல்லாமல் எப்போதும் ஒருவிதமான வார்த்தையால் விவரிக்க முடியாத செக்ஸ் உணர்வு இருந்துகொண்டே இருக்கிறது. இது தவறு என்று தெரிகிறது. ஒரு குடும்பப் பெண்ணான என்னிடம் எப்படி இந்த வக்கிர உணர்வு வந்து ஒட்டிக் கொண்டது என்று புரியவில்லை. சமயத்தில் வெறிபிடித்தாற்போல் ஆகிவிடுகிறது. இதற்கு என்ன செய்வது? இதிலிருந்து தப்பிக்க என்ன வழி? அன்பு உள்ளம் கொண்ட என் கணவரையும் 2 குழந்தைகளையும் விட்டுவிட்டுப் போய்விடுவேனோ என்று பயமாக இருக்கிறது. எனக்கு ஒரு வழி சொல்லுங்கள். உங்களைத் தான் கடவுளைப்போல் நம்பியிருக்கிறேன்."

இவர்களுக்கெல்லாம் பதில் எழுதி 'கௌன்ஸலிங்' செய்பவர்களைப் பார்க்கும்போது எனக்கு ஜோசியர்களின் ஞாபகம் வருகிறது.

வீடு வீடாய்த் தேடி வரும் இந்த ஜோசியர்கள் மட்டும் இல்லாவிட்டால் தமிழ்நாட்டுக் கிராமங்களில் பல நூறு குடும்பங்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கும். பல்லாயிரம் பேருக்கு பைத்தியம் பிடித்திருக்கும்.

தினமணியில் 'காலம் உங்கள் கையில்' என்ற பகுதியை எழுதி வரும் ஜோதிடர் ஏ.எம்.ராஜகோபாலனின் பதில்களையும் அவருக்கு வரும் நூற்றுக்கணக்கான கடிதங்களில் ஒரு சிலவற்றையும் படிக்கும்போது இதுதான் என் ஞாபகத்தில் வருகிறது.

சாம்பிளுக்கு ஒரு கடிதம்:

"எனக்கு விவாகம் தாமதமாக 32 வயதில் 28.11.94 அன்று நடந்தது. எங்கள் வீட்டில் 40 பவுன் போட்டு 4 இலட்ச ரூபாய் செலவு செய்து விவாகம் செய்து கொடுத்தார்கள். என் கணவர் சொந்தத் தொழில் செய்வதாகக் கூறி என் திருமணத்தை நடத்தினார்கள். ஆனால் எந்தத் தொழிலும் செய்யாமல் இதுவரை குடித்தும், என் நகைகளை அடமானம் வைத்தும் வீண்செலவு செய்துவிட்டார் என் கணவர். நான் வேலைக்குப் போய் சம்பாதித்து வருகிறேன். இதுவரை குழந்தை பாக்கியமும் இல்லை. எங்கள் இருவரின் ஜாதகத்தையும் ஆராய்ந்து என் கணவர் திருந்துவாரா, எனக்கு மறுவாழ்வு கிடைக்குமா என்று கூறி உதவி செய்யுங்கள். எனது பிறந்த வீட்டிலும் என்னை இப்போது சேர்த்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். அதனால் வாழ்வை முடித்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்"

இப்படி வாழ்வை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது.

★★★★★

நல்ல கவிதைகளைத் தேடிக்கொண்டிருந்த போது நண்பர் தெ.மதுசூதனன் எனக்கு வாசிக்கக் கொடுத்த கவிதை ஒன்று 'நிலுவை'. எழுதியவர்: ஆழியாள். இனி வருவது கவிதை:

*நீ திருப்பித் தரலாம்*
*மணிக்கூட்டை*
*கை விளக்கை, கத்தரிக்கோலை,*
*(கன்னி மீசை வெட்ட நீயாய்க் கேட்டது நினைவு)*
*கடும் பச்சை, வெளிர்நீலக்*
*கோடன் சேட்டுகளை*
*தரலாம் - இன்னமும் மிச்சங்களை*
*இன்று பல்லி எச்சமாய்ப்*
*போனவற்றை.*

*உன் முகட்டில் கவடாய்ப்*
*பதிந்த*
*என் காட்டு ரோஜா உணர்வுகளையும்,*
*அள்ளியள்ளித் தெளித்து*
*பூப்பூவாய்ப் பரவிய*
*தீவலைக் குளிர்ச்சியையும்*
*எப்படி மறுதலிப்பாய்?*
*எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?*
*கடிதத்திலா*
*காகிதப் பொட்டலத்திலா?*
*இதில் நான்*
*உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ*
*நீ எனக்குள் செலுத்திய*
*ஆயிரத்தெட்டுக் கோடி விந்தணுக்களையோ*
*நான் கணக்கில் எடுத்து*
*சேர்க்கவில்லை என்பது மட்டும்*
*நமக்குள்*
*ஒரு புறமாகவே இருக்கட்டும்.*

இதை வாசித்ததும் ஆழியாளை என் தோழியாகக் கண்டேன். அவரது மற்ற எழுத்துக்களையும் வாசிக்க பெருவிருப்பம் கொண்டுள்ளேன்.

★★★★★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேற்றைய தினம் கலாமேகனின் 'நிஷ்டை' என்ற சிறுகதைத் தொகுப்பை வாசித்தேன். வாசித்து முடிந்ததும் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதம் இதோ:

கலாமோகன்,

இதுவரை உன்னை நான் பார்த்ததில்லை. வாசித்ததும் இல்லை. இன்றுதான் வாசிக்க நேர்ந்தது. எனக்குப் பிடித்த புத்தகங்களில் (எப்போதாவது தான் அப்படி நேரும்) புத்தகம் முழுவதும் அடிக்கோடுகளாலேயே நிரம்பியிருக்கும். மார்த்தா த்ராபா எழுதின 'அன்னையரும் நிழல்களும்' என்ற நாவலைப் படித்தபோது அந் நாவலின் அத்தனை வரிகளையும் அடிக்கோடிட்டது ஞாபகம் வருகிறது.

அந்த நாவலைப் படித்து ஆண்டுகள் பல கடந்துவிட்டன. அப்போது நான் வேறோர் சூழலில் வாழ்ந்தேன். அந்த நினைவுகள் எல்லாம் புகை மூட்டமாக எனக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது.

அந்த நாவலை நீ வாசித்திருக்கிறாயா? அந்த ஆர்ஜெண்டினிய நாவலுக்குப் பிறகு என்னை இவ்வளவு தூரம் பதறச் செய்தது உன்னுடைய எழுத்துத்தான்.

உன்னுடைய அழகான புத்தகம் (நிஷ்டை) என் அடிக்கோடுகளால் அசிங்கமாகிவிட்டது.

நாடோடியாய் தேசமற்றுத் திரியும் உன்னோடு ஒரு இரவு பியர் அருந்த விரும்புகிறேன் - உன் போர்த்துக்கேய சிநேகிதனைப் போல்.

நீ யார்? என் மனதின் பதுங்குகுழிகளில் இதுவரை நான் எழுதாமல் பதுக்கி வைத்திருந்த சொற்களை எப்படியோ களவாடியிருக்கிறாய். அப்பதுங்கு குழிகளை நீ எப்படிக் கண்டுபிடித்தாய்? ஒருவேளை நீ நானா? நான் நீயா?

ஸ்டிக்கர் பொட்டுகளை தமது கைப்பைக்குள் பத்திரப்படுத்தியிருக்கும் நமது பெண்களின் கதைகளைக் கேட்டு மனம் பதறியிருக்கிறேன். நீ எழுதும் 'குங்குமச் சிமிழ்' அப் பெண்களின் கண்ணீரை எனக்கு மீண்டும் மீண்டும் ஞாபகமூட்டி என்னை மனப் பிறழ்வுக்கு ஆளாக்குகிறது. விதவைகளால் நிரம்பிய நமது தேசத்தின் கிராமங்களை ஞாபகப்படுத்துகிறது.

நான் தேசமற்றவன், மொழியற்றவன். ஆனாலும் மார்த்தா த்ராபாவின் அர்ஜன்டினா எப்படி எனது தேசமோ அதேபோல் உனது தேசம் எனது தேசம். அந்த உரிமையில் உன்னைக் கேட்கின்றேன் - நீ ஏன் நமது அன்னையரையும், சகோதரிகளையும், தோழர் தோழியரையும்பற்றி ஒரு நாவல் எழுதக்கூடாது?

—◆—

என்னிடமிருந்து நீ களவாடிய வார்த்தைகளையே உனக்கு நான் எழுத விரும்பி வேறு ஏதேதோ எழுதிக்கொண்டிருக்கிறேன். இதையெல்லாம் நீ பொருட்படுத்தவேண்டியதில்லை.

இனி வருவது என் வார்த்தைகள்...

—◆—

எனது பாதங்களின் இலக்கு எதுவென எனக்குத் தெரியவில்லை. அது எங்கே போகின்றதோ அங்கே போகவிடுங்கள்...

போக்கிரிகளின் சந்நிதானத்திலே எனது தியானங்களும், பிரார்த்தனைகளும், விருப்புகளும், வெறுப்புகளும், சபலங்களும், சலனங்களும் எப்போதோ கல்லறைக்குப் போகாததையிட்டுச் சற்றே வருந்துகின்றேன். பொய்நாக்கு வளைக்கும் போலிகளது மனவலயத்து ஓட்டைகளால் வெளியேறும் அசுத்தக் காற்றுகளிலிருந்து தப்பி, எனது நிஷ்டையைத் தொடரவேண்டும் என எனக்குள் ஓர் ஆவேசம்...

போக்கிரியே! நிறுத்து! நான் எனது யதார்த்தத்தைக் காற்றில் எழுதுவேன். கடலில் எழுதுவேன். மலர்களில் எழுதுவேன். மங்கையர்களின் உதடுகளிலே எழுதுவேன். குழந்தைகளின் குமிண்சிரிப்பில் எழுதுவேன். நீலவானில் எழுதுவேன். நிலத்தில் எழுதுவேன். ஓடிப்போய் உன் கையைக்கழுவு. அதிலே இன்னமும் கசியாமல் கிடக்கின்ற ரத்தத் துளிகள் அழியட்டும். உனது வாயைத் திறவாதே! உலகு நாறிப்போய்விடும். ஓடு! போக்கிரியே ஓடு!

—◆—

கலாமோகன்... உனது கரங்களில் என் முத்தங்களைப் பதிக்கிறேன்.

ஜுலை 12, 1999

(அதிகாலை மூன்று மணி)

—◆—

* நிஷ்டை (புகலிடச் சிறுகதைகள்)
க. கலாமோகன்
(எக்ஸில் சஞ்சிகைக்குழு வெளியீடு)





வெளியீடும் ஆசிரியரும்: A.J. Khan
18, Alagiri Nagar, IInd Street Vadapalani,
Chennai - 600 026, Tamil Nadu, India

பிரான்சில் கிடைக்குமிடம்:
**EXIL**
27, Rue Jean Moulin, 92400 Courbevoie , France
e-mail: EXILFR@aol.com




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சிதைவுகள்

சாருநிவேதிதாவின் கோணல் பக்கங்கள் கோணலாகவே தொடர்கிறது. எழுதி முடிக்கப்படாத நாவல்பற்றி அபிப்பிராயம் சொல்லத் துணிவதிலிருந்தே பக்கங்கள் கோணலாகிவிட்டது.

கவிதைகளை பொதுப்புத்திக்கு வெளியே மட்டும் பார்க்கும் அவரின் வேட்கைக்கு கவிதைகள் கிடைக்காமல் அவதியுறுகிறார் அவர். ஒருவன் தன்னைப் பாதித்த விடயங்களை கவிதையில் தருகிற போது பொதுப்புத்தி/பொதுப்புத்தி நீக்கம் என ஒரு அட்டவணையைப் போட்டு கவிதைகளை நிரல்படுத்த ஏனோ எம்மால் முடியாமலிருக்கிறது. சுயநசிவு, சுயஎள்ளல்... இவையும் கவிதைகளை பிரசவிக்க முடியும். பொதுப்புத்திக்குள்ளும் அது முடியும்.

*'என்னை ஒருமுறை கொன்றவன்*
*மீண்டும் ஒருமுறை கொல்லப் பார்க்கிறான்'*

என்று ஒரு ஏழு வயது சிறுவன் வீட்டுக்கோடியில் நின்று வசனம் பேசினான். அது கவிதை வரியாக -என் சிறுவயதிலேயே - மனதில் படிந்தது.



அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் சினிமாக்காரர்களின் 'பெண்வேட்டை' பற்றிய கணக்கு பொதுப்புத்தியின் ஜனரஞ்சகமாக பள்ளி வகுப்பறையில் நின்று பம்பலடித்துக் கொள்கிறது.

வாரத்துக்கு 4 பெண்
ஆகவே மாதத்துக்கு 4x4=16
வருடத்துக்கு 16x12=192
இப்படியே.

இந்த முரண்களை வசதியாக மறந்துவிட வேண்டும்.

தனிநபர்களை மனதில் வைத்து பொதுமையாக வாட்டுவதில் இந்த முரணை அடித்து வீழ்த்திவிட வேண்டும். தமிழ்க் கவிதை, உலகக் கவிதை, தரம்(?) என்றெல்லாம் பொதுமைகள்தான் இருக்கிறதே.

'பெயர்களை நீக்கிவிட்டால் எல்லாக் கவிதைகளுமே ஒரே கவிஞனின் வரிகளைப் போலவே இருக்கிறது' என்றும் அவரால் எழுத முடிகிறது. இதைக் கொஞ்சம் அவர் விளக்குவது பொறுப்பான செயல். மற்றபடிக்கு இந்த விமர்சனத்தைத் தருவதற்கு எனக்கு அருகில் அரட்டையடித்துக் கொண்டிருக்கும் - கவிதையையே வாசிக்காத - நண்பனுக்கும் சிரமமிருக்காது.

திருமணமாகி வாழ்வில் செட்டிலாகிவிட்டால் நிறையப் பேர் கவிதை எழுதுவதை நிறுத்தி விடுகிறார்கள் என்ற கண்டுபிடிப்பு அபாரமானது.

அவரின் அரசியல்வாதிகள், சினிமாக்காரர்களின் 'பெண்உடல்' இச்சைக்கு முன்னால் தமிழ்க் கவிஞனுக்கு பிச்சைப் பாத்திரம் வழங்கி இருத்துகிறார். அற்புதமான திறனாய்வு.

'தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு' (ஆசிரியர்-அக்னிபுத்திரன்) என்ற புத்தகத்திலிருந்து நிவேதிதாவின் வரிகள்வரை தமிழ்க்கவிதை என்றாலே தமிழகத்துக் கவிதைகள்தான் என்பது இன்னொரு தொக்கல்.

தமது கவிதைகள் பற்றி எழுதிய பல தமிழ்க் கவிஞர்களின் பிரமைக்குப் பின்னால், கவிதை பற்றிய ஒருவித புனிதம் பூசலுக்கு அப்பால் அவர் தந்த கவிதை வரிகள் என்னை அழைத்துச் செல்லவில்லை.

'மின்சாரப் பூவே' என்று பாட்ல் ஒலிக்கிறது.

'காதல் தேர்தலில்' என்று பாடல் ஒலிக்கிறது.

'மண்ணெண்ணைக்கும் தண்ணீருக்கும் கல்யாணமாம்' என்று பாடல் ஒலிக்கிறது.

சொற்சேர்க்கை அதனதன் அர்த்தங்களை கொன்று போடுகிறது.

**மொழிப் பிணம்**
**குருதிவழியும் தாவர உடல்**
**கவிதையின் குருதி**

நிவேதிதாவை பாதித்த சொற்சேர்க்கைகள் என்னை வேறுவிதமாகப் பாதிக்கிறது.

பிணம் என்றால் வாழ்ந்து முடித்த உடலாக எம்முன் விழுவதில்லை. குருதி என்றால் காயம் பட்டு ஒழுகும் திரவமாக தெரிவதில்லை.

குரூரமாக சிதைக்கப்படும் வாழ்வின் சிதைவுகளாக ஈழத்தமிழனின் முன் அவை அதிர்ந்து விழுபவை.

இவரின் அரசியல்வாதிகளின் சினிமாக்காரர்கள் வாழ்நாளில் 8000 பெண்களை 'சந்திக்கிறார்கள்'. ஆனால் பாவம் தமிழ்க் கவிஞன். இந்தச் 'சந்திப்பு'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனுக்கு நேர்வதே இல்லை. சாலையோரங்களிலும் அலுவலக வராந்தாக்களிலும் முந்தின இரவு நடந்த அவலமான கலவியின் சாட்சியாகக் கிடக்கும் நிரோத் உறைகளைப்போல் கிடக்கின்றன இவர்களின் கவிதைகள்!

இது நிவேதிதாவின் நிகழ்ச்சேர்க்கை.

ஒட்டி ஒட்டிப் பார்த்து முயற்சித்து தோல்வியடைந்துபோன நிலையில்...

அடுத்து, வெள்ளைத்திமிர் பற்றிய தமிழரசனின் விமர்சனம் தனிநபர்களை (அ.மா.வை) மனதில் கொண்டு எழுதப்பட்டதா என எண்ணவைக்கிறது. ஐரோப்பிய மக்களின் இரட்டைத்தன்மையை புரிந்து கொள்ளாமல், சமூக உளவியலை ஆழ நோக்காமல், அ.மா.வின் அவதானங்களை மறுப்பதிலேயே குறியாக நகர்ந்திருக்கிறது.

லண்டன், பரிஸ் மற்றும் ஜேர்மன் நகர வாழ்க்கைக்குள் நின்றுகொண்டு ஐரோப்பிய மக்களின் குணவியல்புகளை ஆராய முற்படுவதுபோல் தெரிகிறது. நகரங்களுக்கு வெளியே நாம் வாழும் அனுபவம் வேறாக இருக்கிறது. தனக்கு பிடிக்காதவர்களை கண்டால் காறித் துப்புவதிலிருந்து பழிப்புச் சொல்லல், நையாண்டி பண்ணுதல் வரை இச்(சுவிஸ்) சமூகத்தில் நாம் காணும் அனுபவங்கள்.

இக் குணாம்சங்களை நிலப்பிரபுத்துவ குணாம்சமாக தமிழரசன் வரையறுப்பது மேலோட்டமானது. இயந்திரத்தனமானது. நிலப்பிரபுத்துவத்திலிருந்து வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தில் இக் குணாம்சம் இல்லை என அவர் வாதிப்பது அப்பாவித் தனமானது. ஆழமற்றது.

சுத்தம் பற்றிய அவரது அவதானம் கதவுக்கு வெளியிலும் உள்ளும் ஒன்றல்ல. அதுவும் இரட்டைத் தன்மை வாய்ந்தது. குறிப்பாக றெஸ்ரோறன்ற் இல் வேலைசெய்பவர்களுக்கு புரியும். குசினிக்குள்ளும் குசினிக்கு வெளியிலும் துப்பரவு எவ்வாறு இரட்டைத் தன்மையுடன் செயற்படுகிறதென. ஐரோப்பியர்கள் கத்திப் பேசுவதில்லை என்று எப்படி சொல்லத் துணிந்தாரோ தெரியவில்லை.

நிலப்பிரபுத்துவத்துக்கே உரிய குணாம்சங்களாக அவர் வரையறுத்துக் கொள்ளும் அதே தொனியிலும் (கிண்டல், கேலி, முரட்டுத்தனம்...), அதே வகைப்பட்ட சொல்லாடலாலும் இவ் விமர்சனத்தைச் செய்வது ஒரு முரண்நகை.

இப்படி... எழுத இன்னும் இருக்கிறது.

**ரவீந்திரன்**
சுவிஸ்

****

உயிர்நிழல், vol.II, N° 3 படிக்கக் கிடைத்தது. தில்லைநடேசனினதும் தமிழரசனினதும் கட்டுரைகள் அவசியமானவை. கோட்பாடுகளை விழுங்கிவிட்டு செரித்துக்கொள்ள முடியாத அ.மார்க்ஸின் நூல் பற்றிய திறனாய்வு ஆதாரபூர்வமாகச் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைவிட்டு வெளியேறி ஐரோப்பாவை முதன்முதலாகப் பார்த்தவுடன் கிடைக்கக்கூடிய மனப்பதிவுகளை மட்டுமே வைத்துக்கொண்டு கோட்பாடுகட்ட முயன்றுள்ள (theorize) மார்க்ஸின் அப்பாவித்தனமான அறியாமையைக் கட்டுரை தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

மார்க்ஸின் exoticதனமான (தெரியாதவை மீதான வசீகரம்) பிரமிப்பைக் கட்டுடைப்பதில் கட்டுரை வெற்றி பெற்றாலும் இன்னும் இறுக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதப்பட்டிருக்கலாம்.

தில்லைநடேசனிடம் இருந்து மேலும் கட்டுரைகளை வேண்டிப் பிரசுரிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். மதுசூதனின் விமர்சனமும், சுவாரசியமாக இருந்தாலும், பின்நவீனத்துவம் என்பதனை பாம்பு என்று நினைத்து மிதிக்கமுடியாமலும் பழுதை என்று நினைத்துக் கடக்கமுடியாமலும் திண்டாடும் ஒரு கட்டுரையாக எனக்குத் தென்படுகிறது. "எல்லாம் மொழியின் விளையாட்டுத்தான்" என்ற பின்நவீனத்துவ ஏகாதிபத்தியத்துக்கு அவரும் தப்பவில்லை. (ஒப்பிடுக: எல்லாம் இன்பமயம்; எல்லாமே பணத்துக்குத்தாண்டா!)

சாருநிவேதிதாவின் பத்தி எழுத்துக்களில் வெளிப்படுகிற அகங்காரமும் இறும்பூதும் எரிச்சலூட்டுகின்றன. பெரிய பின்நவீனத்துவப் பெருச்சாளியாக மாய்மாலம் காட்டுகிற அவர் தமிழ்நாட்டுக் கவிதைகளைப்பற்றி மட்டுமே எழுதிவிட்டு எப்படி ஒட்டுமொத்தமாக, "இன்றைய தமிழ்க்கவிஞர்களிடம் காணும் பொதுத்தன்மை...", "இன்றைய தமிழ்கவிதை..." என்று பொதுமைப்படுத்தி எழுதலாம்? இது பயங்கரமான universalisation அல்லவா? பயங்கரமான எதிர்ப் பின்நவீனத்துவம் அல்லவா? தமிழ்நாட்டுக்கு அப்பால் தமிழும் இலக்கியமும் கிடையாது என்று நினைத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருநில வியாதி பிடித்தவர்களுக்கு, உங்களுடைய உயிர்நிழல்தானா கிடைத்தது.

அவர் மட்டுமல்ல, பெரும்பான்மையான தமிழக எழுத்தாளர்கள் விமர்சகர்களுக்கும் தமிழ் இலக்கியம் = தமிழ்நாட்டு இலக்கியம் என்பதுதான் வாய்ப்பாடு. இந்தக் குறும்பார்வையில் இருந்து விடுபடாத வரை அவர்களுடைய ஞானக்கண் எப்படித் திறபட முடியும் என்று பூனைக்கண்களை மட்டுமே வைத்திருக்கும் எனக்கு விளங்கவில்லை.

ரதன் பாவம்! அவருடைய கட்டுரைகளை வாசித்துவிட்டு கே.எஸ்.சிவகுமாரன் தற்கொலை செய்து கொள்ளப் போகிறார். குறைந்த பட்சம் படங்களின் பெயர்களையாவது ஒழுங்காக எழுதமாட்டாரா அவர்? உ+ம்: Saving Private Ryan (Saving of Private Ryan அல்ல).

புதிய அனுபவங்களை எழுத முயல்கிற அ.முத்துலிங்கத்திடம் விஷயம் இருக்கிற அளவுக்கு செய்நேர்த்தியும் செப்பமும் இல்லை. கிருஷ்ணராஜாவின் அட்டை ஓவியத்திற்குத் தலைப்பில்லையா? அப்படி இல்லையென்றால் தலைப்பற்றது என்றாவது போடலாமே!

**மணிமாறன்**, இலங்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்றாவது உயிர்நிழலும் பார்த்தேன். ஒவ்வொரு இதழ்களிலும் மிகவும் கனதியான வளர்ச்சி தெரிகிறது. இம்முறை இதழானது ஒரு இலக்கியத் தொகுப்புப்போல கனதியாக வெளிவந்துள்ளது. உள்ளடக்கங்களும் சரி, அதன் வடிவமைப்பும் சரி. அட்டை மிகவும் சிறப்பாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை கதைகளும் உமா காந்தனின் கட்டுரைகளும். கடைசி இரு இதழ்களிலும் வெளியாகிய உமாகாந்தனின் கட்டுரைகள் இதழுக்கு வலுவேற்றுகின்றன. பிரச்சனைகளை தெளிவாகவும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடனும் ஆய்வுசெய்து இன்றைய உலகத்தின் நிலவரங்களை வெளிப்படுத்துவது கட்டுரையின் சிறப்பு. பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் அப்பப்போ வெளியாகும் செய்திகளை சேர்த்துப்பிடித்து தப்பான இடத்துக்கே வந்து சேருகிற நம் நிலையில் உமாகாந்தனின் கட்டுரைகள், அதன் மீதான கூரிய கார்வைகள் நம் போராட்ட அனுபவங்களின் மேல் பதியவேண்டிய அவசியம் உண்டு. அவரின் அடுத்த கட்டுரைக்காக காத்திருக்கிறேன்.

**ரஞ்சகுமார்**

இலங்கை.

****

நா வெட்டப்பட்ட வாழ்க்கையிலிருந்து விலகி ஓடி கருமனம், மணவாய், நிழல் வாழ்க்கை என்பவற்றில் இருந்து விடுபட்டு நிஜ சிந்தனை, மருந்தான எழுத்து என்பவற்றில் ஐக்கியமாகி சுயவிருப்பு, திருப்தி என்பவற்றைத் தருகிறது உயிர்நிழல்.

தமிழரசன் - பேர்லின் கட்டுரை அ. மார்க்ஸ் பற்றிய சிந்தனையையும் ஆட்டோநாமன்கள், பின்நவீனத்துவவாதிகள் பற்றிய தரிசனங்களையும் வாசகனுக்குத் தெளிவாகத் தருகிறது.

தமிழில் இவ்வாறான போக்குகள் அருகி ஒருவித வளமற்ற மொழிவடிவ மேலாதிக்கம் நிலவி வரும் வேளை இவ்வாறான போக்கு, எழுத்து நம்பிக்கை தரும் முன்னெடுப்புகளாகும். செருப்பு, செப்படி வித்தை போன்ற சொற் பிரயோகங்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். ஒருவித திடீர் தாழ்வைத் தரும் சொற்பிரயோகங்கள் அவை. அ. மார்க்ஸ் மீதான குற்றச்சாட்டுகள் அ.மார்க்சினால் திட்டமிடப்பட்டு எழுதப்பட்டிருக்குமா என்பது என் சந்தேகம். எனினும் ஆழமானதும் அழகானதுமான தமிழரசனின் இப் பார்வை சிறந்ததோர் பதிவாகும்.

**மு.கா.மு. மன்சூர்**

கனடா

****

அம்பையின் சிறுகதை நெஞ்சை நெருடும் வகையில் இருந்தது. மென்மையான ஓர் உணர்வை அழகாகக் கூறி இருந்தார். இருந்தும் கதையின் முடிவில் இந்தியாவில் அநாதை விடுதிகளில் வளரும் குழந்தைகளை வெளிநாட்டவர்கள் தத்து எடுத்து வளர்ப்பது சரியானதா? இல்லைத் தவறானதா? என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. கதையின் முடிவில் எழுத்தாளரின் எண்ணம் புலப்படும் என்று நம்பினேன். ஏமாற்றமாகப் போய்விட்டது. இந்தியாவில் அடிப்படைத் தேவைகளே பூர்த்தி செய்யாமல், அனாதை விடுதிகளில் இருக்கும் குழந்தைகளுக்கு வெளிநாட்டவர்களால் கொடுக்கப்படும் இந்த வாழ்க்கை சொர்க்கம் என்றுதான் பலரும் நினைக்கின்றார்கள். ஆனால் அனாதை விடுதியில் வளர்ந்து வெளிநாட்டுத் தம்பதிகளால் தத்து எடுத்து வளர்ந்த ஒருவரைத் திருமணம் செய்தவர் என்ற முறையில் - தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் எல்லோருமே சந்தோஷமாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் தவறு என்று கூற விரும்புகிறேன். தன் விருப்பம் கேட்கப்படாமல், தான் நாடு கடத்தப்பட்டுவிட்டேன் என்ற கோபம் என் கணவருக்கு. பசியோ பட்டினியோ தன் நாட்டில் இருப்பதைத்தான் தான் விரும்புவதாகக் கூறுகிறார். இந்தியாவில் இருந்திருந்தால் தன் இரத்தச் சொந்தங்களுடன் சேரும் ஒரு நாள் வந்திருக்கக்கூடும் என்று நம்புகிறார். இதனால் தத்து எடுத்த பெற்றோர்மீது வெறுப்புத்தான் எஞ்சியுள்ளது. ஒரு வகையில் பார்த்தால் இந்த வாழ்க்கை என் கணவரின் மனநிலையை பாதித்திருக்கிறது என்றே கூறலாம்.

**சுமதி ரூபன்**

கனடா

****


தங்களின் உயிர்நிழல்-3 இதழ் படிக்கக் கிடைத்தது. இதழ் ஒரு கருவூலமாகத் திகழ்கிறது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றுபட்டு தங்களின் கருத்தோவியங்களை உலகுக்கு வெளிப்படுத்தும் சாளரங்களாய் திகழும் இத்தகு சஞ்சிகைகளைப் படிக்கும்போது உளம் நெகிழ்கிறது. தாய்த் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு சென்று திரும்பும் எழுத்தாளர்களும், பிரமுகர்களும், அறிவுஜீவிகளும் அங்கு கண்டு வந்தவற்றைத் தங்கள் போக்கில் வெளிப்படுத்துகின்றனரேயன்றி உண்மை அறிய வாய்ப்பின்றிச் செய்து விடுகின்ற காலகட்டத்தில் இது போன்ற சஞ்சிகைகள் அவசியமாகின்றன.


## புது உலகம் எமை நோக்கி

(புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள்)

சக்தி வெளியீடு, நோர்வே



பிரதிகட்கு:

Sakthi
Boks 99 Oppsal, 0619 Oslo 6,
Norway

Ranjini
Ziegelhof Strasse 8
8730 Uznach,
Switzerland
Tel: 055 / 280 17 78

Exil
27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France.
e-mail: EXILFR@aol.com




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதாரணத்திற்கு இவ்விதழில் வெளிவந்துள்ள 'வெள்ளைத்திமிர்' மீது தங்களின் வெளிப்பாடே!

இது போன்று உண்மைநிலைகளைத் தெரிந்து கொள்ளவும், புலம்பெயர்ந்துள்ளவர்களின் கருத் தோட்டத்தைப் புரிந்து அவர்கள் தம் வாழ்வின் உண்மை நிலைப்பாடுகளை, ஆக்கங்களை அறிந்து கொள்ளவும் தங்கள் உயிர்நிழலைத் தொடர்ந்து வாசிக்க விரும்புகிறேன்.

**G. பாலசுப்ரமணியன்**
தமிழ்நாடு

****

வழமையாக வந்த கதைகளில் ஒரு சில குறிப்பி டத்தக்கவையாக இருந்தாலும் இம்முறை வந்த கதைகள் மிகவும் அருமை. மூன்று கதைகளும் நன்கு எழுதப்பட்டிருந்தாலும் அம்பையின் 'அன் னங்களும் பட்சிகளும் நெய்யப்பட்ட ஒரு ரோஜா வண்ணப் புடவை' மிகவும் அற்புதமானது. மிகுந்த கலைத்துவமானது. பிரச்சாரத்தன்மைகளும் முடிவு களும் முரண்பாடுகளையும், கருத்துக்களையும் அள் ளிவீசவேண்டும் என்று, கலைத்துவம்பற்றி எவ்வி தத்திலும் அக்கறை கொள்ளாத இன்றைய எழுத் துக்களில் இருந்து அம்பையின் எழுத்து வேறுபட்டு நிற்கிறது. ஆழ்மனதில் அலைகளை எழுப்ப வல்லது. அந்நியத்தை, இழப்பை, துயரத்தை, ஆத்மார்த்த திருப்தியை, முடிவுறா வாழ்வை, நிராசையை என இனம் புரியாத உணர்வில் சஞ்சலத்தை ஏற்படுத்தி யது. அத்தோடு நமது கலாச்சார பண்பாட்டு சிந்த னையினால், பெண்ணியத்தின்பாற்பட்டும், கலாச்சார வன்முறையின்பாற்பட்டும் ஆழமான விமர்சனங் களை வாசிப்போர் மனதில் எழுப்பி விடுகின்றார். உருவம் உள்ளடக்கம் என்பதற்கு அப்பால் கதை கலைத்துவமாவதற்கு வேறும் பல அம்சங்கள் உண்டு என்பதை அம்பையின் எழுத்து வெளிப்படுத் துகிறது.

**மனோரஞ்சிதம்**
இலண்டன்

****

நான் நல்ல இலக்கியங்களைப் படிப்பவன். அதி கம் ஈழத்துப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவன். ஏனெனில் அங்கிருந்துதான் போலித் தனமில்லாத, யதார்த்தத்துக்கு முகம் கொடுக்கும், அடக்குமுறைக்கெதிரானதுமான இலக்கியங்கள் வருகின்றன. ஈழத்துப் படைப்புகளை போராட்ட மற் றும் புகலிட வாழ்வு தரும் படிப்பினைகள் எங்களுக்கு பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் தருகின் றன. போகாத குறையாக இந்தி எல்லையை வேறு, தற்போது யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. (கார்கில் யுத்தம்) என்ன செய்வது மனிதன் சரித்தி ரத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்வதில்லையே! அப்படிக் கற்றுக் கொண்டிருந்திருப்பானாகில், உலகில் இவ்வளவு விஷயங்களும் நடக்குமா? இந்த இரண்டாயிரமாண்டு சரித்திரத்தில் அவ்வளவு மனித உயிர் பலிகளுக்கும், உயிர்வதைகளுக்கும் மதம் தானே காரணமாகத் திகழ்ந்திருக்கிறது. இன்னமும் இருந்து வருகிறது. அதிகாரப் பித்தேறிய அசடர்கள் தானே உலகை ஆள்கிறார்கள். அவர்களை வெற்றி கொள்ளும்வரை நாம் போராடத்தான் வேண்டி இருக் கும். "அடக்குமுறைக்கெதிராக மௌனம் சாதிக்கும் மனிதன் அனைத்து அம்சங்களிலும் இறந்தவனா கிறான்" என்கிற வோல்லேசாயிங்காவின் கூற்றுத் தான் எவ்வளவு உண்மை. வரும் தலைமுறைக்கு இந்த உலகம் பாதுகாக்கப்படுமா? என்பதே நம்முன் நிற்கும் பெருங்கேள்வி. ஏனெனில் நம் சந்ததியருக்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். நம் முன்னோர்கள் நமக்குக் கையளித்த இந்த உலகை, நம் சந்ததியருக்கு அப்படியே வழங்காவிட்டாலும் ஓரளவாவது அவர்களுக்கு உயிர்ப்பயமற்ற வாழ்க் கையை அளிப்போமா? மனிதன் புனிதனாக வேண்டி யதில்லை. மனிதனாக வாழ்ந்தாலே போதும். மனிதர் களின் நலனைக் கருத்தில் கொள்ளாத நாத்திகமும் ஆத்திகமும்தானே இவ்வுலகில் இப்போது நிலவு கிறது. இவ்வளவு அவலங்களிலும் நாம் மனிதர்கள் தான் என்பதை நமக்கு ஓரளாவாவது நினைவுறுத் துவது இலக்கியங்கள், அப்பணியை ஓரளவு உண்மை ஒளியுடன் புலம்பெயர் தமிழ்ர்களின் இலக் கிய இதழ்களே செய்கின்றன என்பது மிகையல்ல.

**பிரேம்ஆனந்த்**
தமிழ்நாடு

****

உயிர்நிழல் மே-யூன் 1999 இதழ் கிடைத்தது. நன்றி. சஞ்சிகை இரண்டு நாட்களிலேயே படித்து முடிக்கும் அளவுக்கு மிகவும் சுவாரசியமாக இருந் தது. கவிதைகள் எல்லாமே நன்றாக இருந்தன. முக் கியமாக இளைய அப்துல்லாஹ் இன் கவிதை மிக நன்றாக இருந்தது. வாழ்த்துக்கள்! அது ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான சமத்துவத்தைப் பற்றிப் பேசுகிறது.

உமாகாந்தனின் கொசோவோ பற்றிய கட்டுரை மிக நன்றாக இருந்தது. நேட்டோவின் சில மோச மான தந்திரோபாயங்களின் பற்றிய தகவல்கள் எனக்குப் புதியவை. ஆனால் சேர்பியர்களின் கொடு ரங்களை அவ்வளவாகக் காணவில்லை.

கண்ணனின் 'செந்தட்டி'யை மிகவும் ரசித்தேன். ஒரு வித்தியாசமான பார்வை. ஒரு மைல்கல். ஆணு க்கும் பெண்ணுக்குமான கூட்டுறவில் ஆண் மட்டு மல்லாமல் பெண்ணும் அந்த உறவுப் பகிர்வில் பங் கெடுப்பவளாக இருந்தால் அது அற்புதம்.


அ.மார்க்சின் வெள்ளைத்திமிர் நூலின் மீதான தமிழரசனின் விமர்சனம் முக்கியத்துவமானதும் விவாதத்திற்கிடமானதுமாகும். தமிழரசனின் சில கூற்றுக்களுடன் எனக்கு உடன்பாடிருந்தபோதிலும், மறைந்துபோகும் கம்யூனிசம் மனிதத்தைக் காக் குமா என்பது குறித்து வியக்கிறேன்! அவர் இன்னும் கனவு காணட்டும்!!

**ஜெயதேவன்**
ஜேர்மனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயந்தி சாம்சன்

நான் கருவறையில் உருவானபோதே
என் அன்னை தள்ளிவைக்கப்பட்டாள்
நான் பெண்குழந்தை என்பதால்.
கருவறையிலிருந்தே
கண்ணீர்வடித்தேன்
என் பிறப்பை எண்ணி
சி(றை)றப்பை நோக்கி...

நான்
அழகிய குழந்தையாம்...
சொல்லிக் கொண்டனர்
ஆனாலும்
அம்மாவின் விழிகளில்
உதிரம் வடிந்தது.
ஒருநாள்
சதிரம்கூட உதிரம் வற்றி
மடிந்துவிட்டது.

என்னைத் தத்தெடுக்கக்கூட
யாருக்கும் மனமில்லை
காரணம்
நானொரு பெண்குழந்தை.

எங்கிருந்தோ ஓடோடி வந்த ஒரு
வானமகள் வண்ணமகள்
என்னை வாரி அணைத்தாள்.
விந்தைக் கூட்டமோ
வேடிக்கையாய்ச் சிரித்தது.
ஏற்கனவே அவள்
மலடி என்பதால்
தள்ளி வைக்கப்பட்டவளாம்!

மலடி எனை மடியிருத்தி
தலைவாரிப் பூச்சூடினாள்.
அங்கிருந்த மலடனவன் - எனை
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

வீட்டில் ஒருநாள்
ஒருவரைக் காணவில்லை
எனக்கோ சந்தோசம்
வளர்ப்பு அன்னையோ
குமுறி அழுதாள்.
தேற்றுவார் அற்று
தேய்ந்து கிடந்தாள்.



மலடியின் பெயர் மாறி
விதவை என்று பெயர் சூடி
இப்பொழுதோ அவள்
மறுபடியும் தள்ளிவைக்கப்பட்டாள்.

என் சட்டையில் இருந்த
கறையைப் பார்த்து
சகதோழிகள் சிரித்தனர்
எதிர்வீட்டு மாமி வந்து
கரிக்கோடு கீறி
உலக்கையும் வைத்தார்.
உவகையில்
உள்ளூர என் மனது துள்ளியது.
மாமியும் நானும்
புது விளையாட்டு விளையாட
கரிக்கோடு என்று.
பின்னர்தான் புரிந்தது
தற்போதைக்கு நான்
தள்ளிவைக்கப்பட்டேனென்று.

"மரத்தில் ஏறாதே, கெந்தியடிக்காதே
சத்தம் போட்டுப் பேசாதே
வாய்விட்டுச் சிரிக்காதே"
என்னும் அறிவுரைகளோடு
நாட்கள் நகர
திடரென்றோர் நாள்
நான் தலையாட்டும் பொம்மையானேன்.

'ஆண்மகன்கள்' அநேகம் பேர்
வந்து போயினர்
நானோ
மேலும் கீழும் தலையை ஆட்டியும்
'பிடிக்கவில்லை' எனும் ஒரே பதில்
என் தந்தை யாரென்றும்
என் படிப்பு என்னவென்றும்
நிறம் கொஞ்சம் குறைவென்றும்
உயரம் இல்லையென்றும்
சீதனம் காணாதென்றும்
என் அம்மா விதவையென்றும்
இப்படி இப்படியே
மாப்பிள்ளைகள்
விலையேற்றப்பட்டனர்.
எனினும் ஒருவழியாக
விலைபேசி ஒருவரை
வாங்கித் தந்தனர்.

அம்மாவிற்கோ
ஆனந்தக் கண்ணீர்
இருமனம் இணையாமல்
திருமணம் நடந்தது

இப்பொழுது நான்
பள்ளியறைக்குள்
தள்ளிவிடப்பட்டேன்
பெண் என்பதால்
இன்னொரு
பெண் தலைமுறைக்காய்... ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*With Compliments From*

# SHALINI

RESTAURANT



## Shalini Restaurant

**23 Rue Cail , 75010 Paris**

**Tel: 01-40 34 20 72**

**M°: La Chapelle ou Gare du Nord**

EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France. e-mail: EXILFR@aol.com N° d'enreg.: 13023204

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்